



தேடல் வெளியீடுகள்

புனித பவுல் குருத்துவக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி – 620 001




# இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலிக்கான மன்றாட்டு

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே,

விண்ணகத் தந்தையைப்போல் நாங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருக்க/ நீர் எங்களுக்குக் கற்றுக்கொடுத்துள்ளீர்;/ மேலும், உம்மைக் காணும் ஒவ்வொருவரும் தந்தையையே காண்கின்றனர்/ என எங்களுக்குக் கூறியுள்ளீர்./ உம் முகத்தை எங்களுக்குக் காட்டும்; நாங்கள் மீட்படைவோம்.

பணத்தால் அடிமைப்படுத்தப்பட்ட சக்கேயு, மத்தேயு முதலானோரையும்/ படைக்கப்பட்ட பொருள்களில் மட்டுமே இன்பத்தைத் தேடிய பாவிப் பெண், மகதலா மரியா முதலானோரையும்/ உமது அன்புப் பார்வை விடுவித்தது./ பேதுருவின் மறுதலிப்புக்குப் பின்பு அவரை அழ வைத்ததும்/ மனந்திருந்திய கள்வனுக்குப் பேரின்ப வீட்டை உறுதிப்படுத்தியதும்/ உமது அன்புப் பார்வையே.

“கடவுளுடைய கொடையை நீர் அறிந்திருந்தால்”/ என்று சமாரியப் பெண்ணிடம் நீர் கூறினீர்;/ அவ் வார்த்தைகள் எங்கள் ஒவ்வொருவருக்குமே கூறப்பட்டவனாய் நாங்கள் கேட்போமாக!

கடவுள் எல்லாவற்றிற்கும் மேலாக மன்னிப்பிலும் இரக்கத்திலும் தமது ஆற்றலை வெளிப்படுத்துகின்றார்;/ காணமுடியாத அந்தத் தந்தையின் காணக்கூடிய முகமாக நீர் இருக்கின்றீர்./ உயிர்த்த ஆண்டவரும், மாட்சிப்படுத்தப்பட்டவருமான உமது காணக்கூடிய முகமாக,/ திருஅவை இவ்வுலகில் இருப்பதாக!

அறியாமையிலும் தவற்றிலும் இருப்போர் மட்டில் பரிவுகொள்வதற்கு ஏதுவாக / உம் பணியாளர்கள் வலுக்குறைவினால் போர்த்தப்பட வேண்டும் என நீர் விரும்பினீர்;/அவர்களை நெருங்கிவரும் ஒவ்வொருவரும்/ நாம் விரும்பித் தேடப்படுகிறோம், அன்பு செய்யப்படுகிறோம், கடவுளால் மன்னிக்கப்படுகிறோம்’/ என உணர்வார்களாக!

உம் தூய ஆவியை அனுப்பும்;/ அதன் அருட்பொழிவால் நாங்கள் ஒவ்வொருவரும் புனிதப்படுத்தப்படுவோம்./ அப்பொழுதுதான் இரக்கத்தின் யூபிலி/ ஆண்டவரிடமிருந்து இரக்கத்தைப் பெற்றுத்தரும் ஆண்டாக இருக்கும்;/ புத்துயிரளிக்கும் ஆர்வத்துடன் உமது திருஅவை/ ஏழைகளுக்கு நற்செய்தியைக் கொணரும்;/ சிறைப்பட்டோருக்கும் ஒடுக்கப்பட்டோர்க்கும் விடுதலையை அறிவிக்கும்; பார்வையற்றோர்க்குப் பார்வையை வழங்கும்./

இரக்கத்தின் தாயாகிய மரியாவின் பரிந்துரை மூலம்/ தந்தையோடும் தூய ஆவியோடும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும்/ உம் வழியாக மன்றாடுகிறோம். ஆமென்!

# இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலிக்கான இலட்சினை விளக்கம்

இயேசு சபை அருள் பணியாளர் மார்கோ ஐவன் ரூப்னிக் உருவாக்கிய இந்த இலட்சினை இரக்கத்தின் பொருளைச் சிறிய **இறையியல் தொகுப்பாக** வழங்குகிறது. உண்மையைக் கூறின், இது தொடக்கத் திருஅவைக்கு முற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உருவத்தைக் குறித்துக் காட்டுகிறது: அதாவது, இறைமகன் தம் தோள்மேல் தொலைந்துபோன ஆன்மாவைச் சுமந்து இருப்பது, கிறிஸ்துவின் அன்பு, அவர் மனிதரானதன் மறைபொருளை நிறைவுக்குக் கொணர்வதாய் உள்ளது; அது மீட்பில் உச்சத்தை அடைகிறது. நல்ல ஆயர் மானுடத்தின் உடலைத் தொடுவதாய், அதுவும் அன்புடன் ஒருவரின் வாழ்வை மாற்றும் ஆற்றலுடன் தொடுவதாய் இந்த இலட்சினை மிகச் சிறப்பான வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் கவனிக்கத்தக்க ஒரு குறிப்பிட்ட கூறு என்னவெனில், நல்ல ஆயர் தமது பரந்தகன்ற அன்பால் மானுடத்தைத் தம்மேல் சுமக்கும்போது அவரின் கண்கள் மானுடத்துடன் இரண்டறக் கலந்துள்ளன. ஆதாமுடைய கண்களால் கிறிஸ்து காண்கிறார்; கிறிஸ்துவுடைய கண்களால் ஆதாம் காண்கிறார். ஒவ்வொருவரும் கிறிஸ்துவாகிய புதிய ஆதாமில், அவரது பார்வையில் தந்தையின் அன்பைத் தியானித்து, தம் மானுடத்தன்மையையும் வரவிருக்கும் எதிர்காலத்தையும் கண்டுபிடிக்கின்றார்.

தொடக்க, மத்திய காலங்களில் உருவங்களினால் பொருளை விளக்க முற்றிலும் முக்கியமான முறையில் பயன்படுத்தப்பட்ட உருவமாகிய வாதுமைக் கொட்டை வடிவப் பொருளில் இக்காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. இது கிறிஸ்துவின் இரண்டு இயல்புகளை – இறைத்தன்மையையும் மனிதத்தன்மையையும் – மனித மனத்தில் இருத்த நம்மைத் தூண்டுகிது. பொது மையம் கொண்ட மூன்று நீள்உருண்டைகளின் வெளிப்புறத்தை நோக்கி நாம் செல்லும்போது அதன் வண்ணங்கள் படிப்படியாக மங்கலாக உள்ளன; இது பாவம், இறப்பு ஆகிய இரவின் பிடியிலிருந்து மானுடத்தைச் சுமந்து செல்லும் கிறிஸ்துவின் செயல்பாட்டைக் குறித்துக்காட்டுகிறது. அதற்கு நேர்மாறாக, அடர்த்தியான வண்ணத்தின் ஆழம் எல்லாரையும் மன்னிக்கும் தந்தையின் ஆழங்காண முடியாத அன்பைக் குறித்துக்காட்டுகிறது.

# இரக்கம் மிகுந்த கடவுள்

**திருத்தந்தை**

**இரண்டாம் ஜான் பால்**

***வழங்கிய***

**சுற்றுமடல்**

**தமிழாக்கமும் விளக்க முன்னுரையும்**

**ஆயர் செ. சூசைமாணிக்கம்**

# உள்ளடக்கம்

**விளக்க முன்னுரை** 55

## சுற்றுமடல்

I. “என்னைக் காண்பவர் தந்தையைக் காண்கிறார்”

1. இரக்கத்தின் வெளிப்பாடு 68
2. இரக்கம் மனிதராதல் 71

II. மீட்பர் விடுத்த செய்தி

3. கிறிஸ்து செய்ததும் சொன்னதும் 76

III. பழைய ஏற்பாடு

4. இரக்கத்தின் உட்பொருள் 80

IV. ஊதாரி மகனின் உவமை

5. ஓர் ஒப்புமை 90
6. மனித மாண்புமீது தனிக் கவனம் 94

V. பாஸ்கா மறைபொருள்

7. சிலுவையிலும் உயிர்ப்பிலும் வெளிப்பட்ட இரக்கம் 99
8. அன்பு சாவைவிட ஆற்றல் வாய்ந்தது; பாவத்தைவிட வலிமை படைத்தது 104
9. இரக்கத்தின் அன்னை 109

VI. “தலைமுறை தலைமுறையாய் உள்ள இரக்கம்”
10. நமது தலைமுறை பற்றி ஓர் உருவகம் 113
11. அமைதியின்மைக்கான காரணங்கள் 116
12. நீதி மட்டும் போதுமா? 119

VII. திருஅவையின் பணியில் இறைவனின் இரக்கம்
13. திருஅவை இறைவனின் இரக்கத்தை எடுத்துரைத்து அறிக்கையிடுகிறது 124
14. இரக்கத்தைச் செயல்படுத்தத் திருஅவை முனைகிறது 129

VIII. நமது காலத்தில் திருஅவையின் மன்றாட்டு
15. இறைவனின் இரக்கத்தைத் திருஅவை வேண்டுகிறது 138

# விளக்க முன்னுரை

“கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார்” (எபே 2:4) என்னும் புனித பவுலின் கூற்றுத்தான் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்களுடைய இரண்டாம் சுற்றுமடலின் தொடக்கச் சொற்றொடராக அமைந்துள்ளது. இதனால்தான் *இரக்கம் மிகுந்த கடவுள்* என இம் மடல் அழைக்கப்படுகிறது.

மடலின் தொடக்கமாக மட்டும் அன்று, அடிப்பொருளாகவுமே எபே 2:4 விளங்குகின்றது. சுற்றுமடலின் மையக் கருத்தைத் – கருப்பொருளை – தொடக்கத்திலேயே இக் கூற்று எடுத்துரைக்கிறது; மடலின் பல பகுதிகளிலும் அதை அகல விரித்து, ஆழமாக விளக்குகிறது; மடல் கூறும் கருத்து முழுவதையும் இரத்தினச் சுருக்கமாகத் தருகிறது என்றால் அது மிகை ஆகாது!

## மனிதரின் மீட்பர்: தொடக்கம்!
## இரக்கம் மிகுந்த கடவுள்: அதன் தொடர்ச்சி!!

திருஅவையின் தலைமை ஆயர் பொறுப்பை ஏற்ற தொடக்கத்தில் திருத்தந்தை 2-ஆம் ஜான் பால் விடுத்த *மனிதரின் மீட்பர்* என்னும் முதல் சுற்றுமடலில், தமது பணியின் அடிப்படைச் செயல்திட்டத்தைக் கோடிட்டுக் காட்டினார். மனிதர் தம்மைப் பற்றிய முழு உண்மையைக் கிறிஸ்துவில்தான் கண்டுகொள்கின்றனர் என்னும் இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனையின் பின்னணியில் (*இ.உ.தி.* எண் 22) இரு பெரும் உண்மைகளை அம் மடலில் வலியுறுத்திக் கூறினார்: i. மனிதரின் மீட்பராக விளங்குபவர் கிறிஸ்து ஒருவரே; ii. மனிதர் எத்துணை மாண்பு மிக்கவர் என்பதை இறைவன் தம் படைப்பிலும் மீட்பிலும் எண்பித்துள்ளார். இப் பெரும் உண்மைகளை விளக்குகின்ற வேளையில் இறைவனின் இரக்கத்தைக் குறிப்பிடுகிறார். இறைவனின் அன்பு ஊதாரி மைந்தனைச் சந்தித்து ஏற்க முன்வருகிறது; இந்த அன்பு இரக்கமாக வெளிப்படுகிறது. அன்பாகவும் இரக்கமாகவும் தோன்றும் இவ் வெளிப்பாடு மனித வரலாற்றில்

ஓர் உருவகத்தையும் பெயரையும் கொண்டதாக இலங்குகிறது. அதுவே இயேசு கிறிஸ்து (*ம.மீ.* எண் 9) எனத் தெளிவுபடுத்துகிறார்.

மேலே கூறப்பட்ட இவ் உண்மைகள் சிறிது வேறுபட்ட கோணத்தினின்று அவரது இரண்டாவது மடலில் விளக்கம் பெறுகின்றன: i. மனிதரின் மீட்பராக விளங்கும் கிறிஸ்து இரக்கத்தின் மறுவுரு ஆனார் (இ.க. எண் 2); தம் அருஞ்செயல்கள், சொற்கள் வழியாக இரக்கத்தை மனிதருக்கு வெளிப்படுத்தினார்; அதாவது, இரக்கம் நிறைந்த தந்தையாக இறைவனை உலகுக்குக் காட்டினார் (எண் 1; 3). ii. இந்த இரக்கம் நிறைந்த இறைவனில்தான் மனிதரின் மாண்பை நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும் (எண் 6). இதுவே திருத்தந்தை இம் மடலில் விரித்துரைக்கும் கருத்து ஆகும்.

இதன் பொருட்டு *மனிதரின் மீட்பர்* என்னும் சுற்றுமடலின் தொடர்ச்சியாக *இரக்கம் மிகுந்த கடவுள்* என்னும் மடலைக் கொள்ளுவது மிகப் பொருத்தம் ஆகும்.

ஏறத்தாழ 20000 சொற்களைக் கொண்டுள்ள இந்த ஏடு 1980-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 30-ஆம் நாள் வெளியிடப்பட்டது. அனைத்துலக மாற்றுத்திறனாளிகளின் ஆண்டான 1981 புலரவிருந்த வேளையில், திருத்தந்தை இரக்கம் பற்றிய இம் மடலை வெளியிட்டதில் பொருத்தம் மட்டும் அன்று, ஆழ்ந்த பொருளும் இருக்கிறது. கிறிஸ்துவில் வெளிப்பட்ட இறைவனின் இரக்கத்தைத் திருஅவை தொடர்ந்து வெளிப்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும்; குறிப்பாக, மாற்றுத்திறனாளிகள் போன்று சமுதாயத்தின் அடிமட்டத்தில் உழன்று கொண்டிருக்கும் மக்கள் நடுவில், இரக்கத்தின் வெளிப்பாடாகத் திருஅவை மறுவுரு எடுக்கவேண்டும் (எண் 13; 14; 15) என்னும் உண்மையை உணர்த்த இதைவிடச் சிறந்த வாய்ப்பு கிடைக்க முடியுமா?

## இன்றைய உலகின் தேவை இரக்கமே

''மகிழ்வும் எதிர்நோக்கும், ஏக்கமும் கவலையும் இன்றைய மனிதரின் வாழ்வில், குறிப்பாக ஏழைகள் மற்றும் துன்புறுவோர் அனைவரின் வாழ்வில் உள்ளன. இம் மனிதரின் மகிழ்வும் எதிர்நோக்கும், ஏக்கமும் கவலையும்



கிறிஸ்துவைப் பின்பற்றுவோர்க்கும் முற்றிலும் உரியனவே'' எனத் தொடங்குகிறது *இன்றைய உலகில் திருஅவை* என்னும் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு (எண் 1).

இன்றைய மனிதரின் அவலநிலை பற்றி முதலில் விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது (எண் 10-12). இருப்பினும் இக் காலக்கட்டத்தில் வாழும் பேறு பெற்றுள்ள மனிதர் பெருமைப்படக்கூடிய அளவுக்குப் பல துறைகளில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே நேரத்தில் அதே முன்னேற்றத்தின் பயனாக, பல அச்சுறுத்தல்களுக்கும் அமைதியின்மைக்கும் அவர்கள் ஆளாகியுள்ளார்கள் என்பதையும் எவரும் மறக்கவோ, திரையிட்டு மறைக்கவோ இயலாது (எண் 10-12).

நாளும் வளர்ந்துவரும் இந்த அமைதியின்மைக்கான காரணங்களை மடல் தொடர்ந்து ஆராய்கிறது; ஒன்றன் பின் ஒன்றாக அவற்றை அடுக்குகிறது (எண் 11).

மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள இந்த அவலநிலை மாறவேண்டுமானால், சமூக நீதி மலரவேண்டும் என்பதைக் கற்றோரும் மற்றோருமே ஏற்றுக்கொள்வர். இந்த அடிப்படையில்தான் நீதி பற்றிய எண்ணம் இன்று சமுதாயத்தில், குறிப்பாக இளந் தலைமுறையின் உள்ளத்தில் மிக ஆழமாக வேரூன்றியுள்ளது. குவலயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்காகக் குமுறும் நெஞ்சங்கள் பல; குரல் கொடுக்கும் குழுக்கள் பல. திருஅவை இத்தகைய குழுக்களோடு தன்னையே இணைத்துக் கொள்ளவேண்டும்; நீதிக்குச் சான்று பகர நியாயமான வழிகளில் இறங்க வேண்டும் என்கிறது சுற்றுமடல்.

''சமுதாய அமைதிக்கு வழி சமூக நீதி'' என முழங்கும் உரோமை ஆயர், நீதியின் பெயரால் இழைக்கப்படும் அநீதிகளையும் நமது கவனத்துக்குக் கொண்டுவரத் தவறினார் இல்லை. இவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்த பின்னர், ''அளவுக்கு மிஞ்சினால் நீதியும் அநீதி ஆகும்'' என்னும் கூற்றை நமது சிந்தனைக்கு விருந்தாகப் படைத்தளிக்கிறார் (எண் 12).

எனவே ''ஏற்புடையவராக்கும் செயல்'' என அழைக்கப்படும் ''இறைவனின் நீதி''யை நாம் எண்ணிப் பார்த்திட வேண்டுகிறார் திருத்தந்தை (எண் 7). நீதியைவிட உயர்ந்த ஆற்றலாக விளங்கும் இரக்கம் என்னும் பண்பினால்தான் அவனியில் நீதி செழித்தோங்க முடியும்; அமைதி தழைத்தோங்க இயலும் எனத் துணிந்து கூறுகிறார்:

> ''கடந்த காலப் பட்டறிவும் இக் காலப் பட்டறிவும் நமக்குப் புகட்டுவது என்ன? நீதி மட்டும் போதாது; நீதியைவிட உயரிய ஆற்றலான அன்பு மனித வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் ஊடுருவி வாழ்வை உருவாக்கிட நாம் வழி வகுக்கவில்லை என்றால், நீதி அநீதியாக மாறித் தன்னையே அழித்துக்கொள்ளும் நிலை ஏற்படக்கூடும்'' (எண் 12).

ஆக, இன்றைய மனிதரின் இன்றியமையாத் தேவை அன்புடன் கூடிய இரக்கமே என ஆணித்தரமாகக் கூறுகிறார் உரோமை ஆயர்.

## தாயும் ஆன தந்தை!

இரக்கத்தின் உடனடித் தேவையை உணர்த்திய ''இரக்கத்தின் திருத்தூதர்'' இரண்டாம் ஜான் பால், இரக்கத்தின் ஊற்றாகவும் ஊருணியாகவும் இலங்கும் இறைத் தந்தையை நம் கண்முன் நிறுத்துகிறார். படைப்பிலும் தேர்ந்தெடுப்பிலும் உடன்படிக்கையிலும், ஏன் தண்டனையிலும்கூட மேலோங்கி நிற்பது இறைவனின் இரக்கமே என இஸ்ரயேலின் வரலாறு கொண்டு நிறுவுகிறார் (எண் 4).

பழைய ஏற்பாடு சினத்தின் கடவுளையும், புதிய ஏற்பாடு இரக்கத்தின் கடவுளையும் வெளிப்படுத்துகின்றன எனப் பொதுவாகக் கூறப்படும் கூற்று உண்மைக்குப் புறம்பானது. எனவே இரக்கத்தின் வெவ்வேறு பண்புகளை வெளிப்படுத்தப் பழைய ஏற்பாட்டில் கையாளப்படும் பல்வேறு சொற்களின் பொருள்நுட்பங்களை நுணுகி ஆராய்கிறது சுற்றுமடல். பரிவு காட்டும் தந்தையாக மட்டும் அல்ல, பால் நினைந்தூட்டும் தாயாகவும் இறைவன் விளங்குகிறார் என்னும் உண்மை வெகு அழகாகவும் மிக ஆழமாகவும் விளக்கப்படுகிறது.

> ''இவ்வாறு ஆண்டவர் தாம் உரிமையாக்கிக்கொண்ட மக்களுக்குத் தொடக்கத்திலிருந்தே தம் சொல்லாலும்



> செயலாலும் இரக்கத்தை வெளிப்படுத்தி வந்துள்ளார். அவர்கள் துன்பங்களால் அல்லலுற்றபோதும், தங்கள் பாவங்களைப் பற்றிய உணர்வு பெற்றபோதும், இறைவனுடைய இரக்கத்துக்குத் தங்களையே தொடர்ந்து கையளித்து வந்தார்கள் என்பது அவர்களது வரலாறு முழுவதிலும் காணக்கிடக்கிறது. ஆண்டவர் தம் சொந்த மக்களுக்குக் காட்டிவந்த இரக்கத்தில் அன்பின் எல்லா வகை நுணுக்கக்கூறுகளும் வெளிப்படுகின்றன எனலாம்'' (எண் 4).

## இரக்கத்தின் மறு பெயர் இயேசு

இரக்கத்தின் தந்தையான இறைவனை அறிமுகம் செய்த பின்னர், அந்த இறைவனை நமக்கு வெளிப்படுத்திய கிறிஸ்துவை அடையாளம் காட்டுகிறார் திருத்தந்தை. இறைத் தந்தையின் இரக்கம் இறைமகன் கிறிஸ்துவில் மனித உரு எடுத்து, நிறைவாக வெளிப்பட்டது (எண் 1;2). இதை வெளிப்படுத்துவதே மீட்பின் செய்தியாக, மீட்பருடைய செயல்திட்டமாக அறிவிக்கப்பட்டது (எண் 3). அவர் போதித்தது ''இரக்கத்தின் நற்செய்தி''; அவர் தம் வாழ்வில் சாதித்தவை இரக்கச் செயல்கள் (எண் 5;6).

> ''கடவுளின் இரக்கத்தைப் பற்றிப் பழைய ஏற்பாடு முழுவதிலும் காணக்கிடக்கும் கருத்து மரபுக்கு ஒரு குறிப்பிட்ட பொருளைக் கிறிஸ்து கொடுக்கிறார். அவர் இரக்கத்தைப் பற்றி ஒப்புமைகளாலும் உவமைகளாலும் பேசி விளக்கியதோடு மட்டும் நின்றுவிடவில்லை; அவரே இரக்கத்தின் உருவாக மாறினார். இரக்கத்துக்கு ஆளுருக் கொடுத்தார். அவரே ஒரு வகையில் இரக்கமாய் இலங்குகிறார். கிறிஸ்துவில் இரக்கத்தைப் பார்த்துக் கண்டுகொள்வோர்க்கு ''இரக்கம் மிகுந்த'' தந்தையாக இறைவன் தம்மையே சிறப்பான முறையில் வெளிப்படுத்துகிறார்'' (எண் 2).

கிறிஸ்துவின் வாழ்வு முழுவதுமே இரக்கத்தின் வெளிப்பாடாக அமைந்தபோதிலும், அவருடைய இறப்பு-உயிர்ப்பு என்னும் பாஸ்கா மறைபொருளில்தான் இவ் வெளிப்பாடு தன் சிகரத்தை அடைந்தது; ஏனெனில் சிலுவையில்தான் கிறிஸ்து ''இரக்கத்தின் இருக்கை'' ஆனார் (''பரிகாரச் சாதனம்'' என்னும் சொல்லின் மூலப்பொருள் இதுவே. இது புதிய மொழிபெயர்ப்பில் ''பாவக் கழுவாய்'' என வழங்கப்படுகிறது – காண் உரோ

3:25). இவ்வாறு அன்பு சாவைவிட ஆற்றல் வாய்ந்தது; பாவத்தைவிட வலிமை படைத்தது என்று எண்பித்தார் (எண் 7;8).

> ''மனிதருக்காகத் தந்தை ஒப்புவித்த கிறிஸ்து தம் பாடுகளின்போதும், சிலுவையில் தொங்கித் துன்பம் அனுபவித்த வேளையிலும், மனிதரிடமிருந்து அவர் இரக்கம் பெறவில்லை. இருப்பினும் கிறிஸ்துமீதும் அவரில் எல்லா மக்கள்மீதும் தந்தை கொண்டிருந்த அன்பின் நிறைவு உயிர்ப்பிலே வெளிப்படுத்தப்பட்டது'' (எண் 8).

இவ்வாறு, இரக்கத்திற்கு அடித்தளம் அன்பு என்பதால், ''அன்பு-இரக்கம்'' என்னும் புதிய சொல்தொடர் இம் மடலில் எடுத்தாளப்பட்டுள்ளது. இந்த அன்பு-இரக்கத்தின் காணக்கூடிய அடையாளம் இயேசுவின் திருஇருதயம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி!

## கன்னிமரி: ''இரக்கத்தின் அரசி''! திருஅவை: ''இரக்கத்தின் அடிமை''!!

*''தலைமுறை தலைமுறையாய் அவர் (கடவுள்) இரக்கம் காட்டி வருகிறார்''* (லூக் 1:50) என்று பண்ணிசைத்த மரியா இறைவனின் இரக்கத்தைச் சிறப்பான முறையில் பெற்றுக்கொண்டது மட்டுமின்றி, அவ் இரக்கம் மனிதரை வந்தடையத் துணை நிற்கிறார். இதனால் இறைவனின் அன்னைக்கு ''இரக்கத்தின் அன்னை'' எனவும், ''இரக்கத்தின் அரசி'' எனவும் புகழாரம் சூட்டப்படுகிறது (எண் 9).

மரியாவின் முன்மாதிரியைப் பின்பற்றி, இறைவனின் இரக்கத்தை நாள்தோறும், நாடுதோறும் எடுத்துக்கூறி அறிக்கையிடுவது திருஅவையின் கடமை. இரக்கத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக மட்டும் அன்று, இரக்கத்தைப் பகிர்ந்தளிக்கும் கருவியாகவும் திருஅவை விளங்க வேண்டும்; இல்லை, இரக்கத்துக்கே அது ஊழியம் புரிய வேண்டும். இப் பொருளில் ''இரக்கத்தின் அடிமை'' எனத் திருஅவையை அழைப்பது மிகப் பொருத்தம் ஆகும்.



> ''படைத்தவருடையவும் மீட்பருடையவும் மாபெரும் பண்புக்கூறான இரக்கத்தைத் திருஅவை அறிக்கையிட்டுப் பறைசாற்றும்போது – மீட்பருடைய இரக்கத்தின் ஊற்றுகளுக்கு மக்களை இட்டுச்செல்லும்போது – திருஅவை உண்மையான வாழ்வு வாழ்கிறது. இந்த இரக்கத்தைப் பேணிக் காத்துப் பகிர்ந்தளிப்பது திருஅவையே'' (எண் 13).

இவ்வாறு, திருஅவை இருப்பதும் இயங்குவதும் இந்த இரக்கத்தை வெளிப்படுத்திப் பகிர்ந்துகொள்ளவே எனத் திருத்தந்தை துணிந்து கூறுகிறார் (எண் 15).

## இரக்கத்திற்கான மன்றாட்டு

''சகோதரர் சகோதரிகளே, கடவுளுடைய இரக்கத்தை முன்னிட்டு உங்களை வேண்டுகிறேன்'' (உரோ 12:1) எனத் தமது அறிவுரையைத் தொடங்கும் திருத்தூதர் பவுல் போன்று, அதே இரக்கத்தின் பெயரால் நம்மை வேண்டுகிறார் புனித ஜான் பால்.

சுற்றுமடலின் முடிவுரையாக விளங்கும் இறுதி அதிகாரத்தில் தாம் இதுவரை பகுத்து விளக்கிய கருத்துகளை எல்லாம் தொகுத்து வழங்குகிறார். இன்றையத் தேவைக்கு ஏற்ப, இரக்கத்தை இரந்து மன்றாட நமக்கு வேண்டுகோள் விடுக்கிறார். மனித வரலாற்றினுடையவும் திருஅவை வரலாற்றினுடையவும் இக்கட்டான இக் கட்டத்தில், இறைவனின் இரக்கம் மீண்டும் ஒரு முறை தன்னையே வெளிப்படுத்தும்படி மன்றாடுகிறார். இந்த அதிகாரம் திருஅவையின் இதயத்தினின்று எழும் இறைவேண்டலாகவே அமைகிறது!

> ''கிறிஸ்துவின் பணியாளர் என்னும் முறையிலும், கடவுளுடைய மறைபொருள்களின் கண்காணிப்பாளர் என்னும் முறையிலும், என்னை வழிநடத்தி, வரலாற்றின் இக் காலக் கட்டத்தில் மனித இனத்துக்காக இறைவனுடைய இரக்கத்தை மன்றாடத் தூண்டும் நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் இக் கால மனிதருள் யாரேனும் பகிர்ந்து கொள்ளாதிருந்தால், எனது அக்கறைக்கான காரணத்தையாவது புரிந்துகொள்ள அவர்கள் முயற்சி செய்யட்டும். இக் கால மனிதர் பலரின் உள்ளுணர்வுகளுக்கு ஏற்ப, மனிதர்பாலும்

மனிதப் பண்பு சார்ந்த அனைத்தின்பாலும் எழும் அன்பு பேரிடர்களால் அச்சுறுத்தப்பட்டு வருகிறது...'' (எண் 15).

இக் கூற்று நம்முடைய நெஞ்சத்தை நெகிழ வைக்கின்றது அல்லவா!

## சுற்றுமடலின் சிறப்புக் கூறுகளுள் சில

மையக் கருத்துக்கு ஊடே இலைமறை காயாகச் சிதறிக்கிடக்கும் செறிந்த சில கருத்துகளை இவண் காண்போம்.

• இம் மடல் முழுவதும் விவிலிய மணம் கமழ்கிறது; விவிலிய மயம் பெறுகிறது என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. 140 அடிக்குறிப்புகளுள் 130 விவிலியத்தைச் சுட்டுவன என்பதே இவ் உண்மையை எண்பிக்கப் போதுமானது. அதிலும் அடிக்குறிப்பு எண் 52 அன்பு-இரக்கத்தை விளக்க விவிலியம் கையாளும் பல்வேறு சொற்களைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையாக நீண்டுவிடுகிறது.

• இறைவனின் இரக்கத்தில் தந்தையின் அன்பும் தாயின் கனிவும் இணைந்து காணப்படுகின்றன என்பதை நிலைநாட்ட, அன்பைக் குறிக்கப் பழைய ஏற்பாட்டில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் *ஃகெசத், ரகாமிம்* என்னும் இரு எபிரேயச் சொற்களின் அடிப்பொருள் விளக்கப்படுகிறது. எசா 49:15-ஐ நமக்கு நினைவுபடுத்தி, தாயன்பே இறையன்பில் மேலோங்கி நிற்பதாகச் சுற்றுமடல் கூறுகின்ற கட்டத்தில், ''கிறிஸ்துவுடைய அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்ன என்று'' (எபே 3:18) ஓரளவுக்காவது நாம் உணர முடிகிறது. மேலும், இறைவனை ''அம்மையப்பனாக''க் காண்பது, ''தாயுமானவ''ராகக் (தாயும்+ஆனவர்) கொண்டாடுவது நம் இந்திய மரபு – சிறப்பாக, நமது தமிழ்ப் பண்பாடு என்பதை எண்ணும்போது நம் சிந்தை எல்லாம் குளிர்கிறது.

• இறைவனின் இரக்கம் எல்லை அற்றது என்பதை ''ஊதாரி மகன்'' உவமை மிக அழகாக எடுத்துரைக்கிறது. இவ் உவமைக்குத் திருத்தந்தை அளிக்கும் விளக்கம் கருத்துச் செறிவு கொண்டது. தந்தை என்னும் உறவில் உருவாகும் பரிவு மட்டும் அன்று, அவர்தம் மகனின் ''மகவுத்தன்மை''யும் ''மனிதத்தன்மை''யும் மாண்பு வாய்ந்தவை என்னும் உணர்வுதான் ஊதாரி மகனுடைய தந்தையின் இரக்க மனப்பான்மைக்கு அடிப்படையாகும் எனத்



திருத்தந்தை கூறும் பகுதி நம்மை ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டுகிறது (எண் 5; 6).

• ''நீதி மட்டும் போதுமா?'' என்னும் பகுதியில் (எண் 12) நீதியும் இரக்கமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்னும் உண்மை தெளிவாக்கப்படுகிறது. ''முதலில் நீதி, பின்னர் அன்பு (இரக்கம்)'' எனச் சிலர் இன்று முழக்கம் செய்கின்றனர்; நீதிக்கு முதலிடம் கொடுத்து, அதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்துகின்றனர். இந்தப் போக்கிலே தொடர்ந்து போனால், நீதி அநீதியாக மாறித் தன்னையே மாய்த்துக்கொள்ளும் என்னும் கருத்து, சமுதாயத்திலும் சமூக நலனிலும் அக்கறை கொண்ட ஆர்வலர் எவரையுமே சிந்திக்கவைக்கும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. மேலும், ''விடுதலை இறையியலை'' நிறுவுவதிலும், ''சமூக நீதி''யை நிலைநாட்டுவதிலும் நாட்டம் உள்ளோர் கொள்ளவேண்டிய நற்செய்திக் கண்ணோட்டம் இங்குப் பளிச்சிடுகிறது.

• மனமாற்றம் பற்றிச் சுற்றுமடல் வழங்கும் கூற்று தியானிக்கவும் அருள்வாழ்வில் செயல்படுத்தவும் ஏற்றது:

> ''கடவுள்பால் மனந்திரும்புதல் என்பது அவரது இரக்கத்தைக் கண்டடைவதிலேயே எப்பொழுதும் அடங்கும். அதாவது, நம்மைப் படைத்தவர் என்னும் முறையிலும், நம் தந்தை என்னும் முறையிலும் அவரில் விளங்குகின்ற பொறுமையோடு பரிவும் கலந்த அன்பைக் கண்டுணர்வதில் அது அடங்கும்... இறைவன்பால் மனந்திரும்புதல் என்பது இரக்கம் மிகுந்த இறைத் தந்தையிடம் எப்போதும் திரும்பிச் செல்வதனால் விளையும் பயனே ஆகும்'' (எண் 13).

பயணம் போகும் நிலையில் உள்ள திருஅவைக்கு இத்தகைய மனமாற்றம் இன்றியமையாத் தேவை – தொடர் தேவை – என்பதைக் குறிப்பிடச் சுற்றுமடல் தவறவில்லை.

• ''இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில், அவர்கள் இரக்கம் பெறுவர்'' (மத் 5:7) என்னும் படிப்பினையின் அடிப்படையில், புனித ஜான் பால் ஆழமானதொரு கருத்தை நம் முன் வைக்கிறார். இரக்கம் காண்பிக்கிறவர் பிறருக்கு நன்மை செய்கிறார் என்பது உண்மையே. ஆயினும் யார் இரக்கம் பெறுகிறாரோ அவரும் இரங்குவோர்க்கு நன்மை செய்கிறார் என அவர் இயம்புகிறார். ''கொடுப்பதிலேயே பெறுகிறோம்''

என்னும் அசிசி நகர்ப் புனித பிரான்சிசின் கூற்றை இந் நேரத்தில் நம்மால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது. இவ்வாறு உயர்வு, தாழ்வு மனப்பான்மைகளை அகற்றி, சமுதாயத்தில் சமநிலையை வளர்த்தெடுக்க மக்களைத் தூண்டுகிறார் திருத்தந்தை (எண் 14).

• திருஅவையின் பணியிலும் வாழ்விலும் நீதி என்பது அன்பு, இரக்கம் என்னும் உயரிய பண்புகளால் அணி செய்யப்படாவிடில், ''அன்பின் பண்பாடு'' என்று அருளாளர் ஆறாம் பால் வருணித்த வாழ்க்கைமுறை உலகில் உருவாக வாய்ப்பே இல்லை. அப்படியானால் இவ் உலகம் ''அதிக மனிதத்தன்மை'' பெற்று, அன்புச் சமுதாயமாக மலரத் திருஅவை ஆற்ற வேண்டிய பணி ஓர் இமாலயப் பணி! இவ்வாறு மனிதரிடையே உறவு வளர்வதால் விரைவில் அனைத்துலகச் சகோதரத்துவம் உருவாக வாய்ப்பு உண்டு என்பது திருத்தந்தையின் தொலை நோக்குக் கொண்ட கனவாக இருக்கலாம் (எண் 14).

இறுதியாக, ஏட்டளவில் பூட்டிவைக்கப்பட வேண்டிய ஏடாக இல்லாமல், நடைமுறையில் செயலாக்கப்பட வேண்டிய ஒன்றாகத் திகழ்கிறது *இரக்கம் மிகுந்த கடவுள்.* இது நமது உள்ளத்தைத் தொடுகிறது; நமது வாழ்வையும் தொடுகிறது; இரக்கம் என்னும் நற்பண்பைத் தனி வாழ்விலும் பொது வாழ்விலும் கடைப்பிடித்து ஒழுக நம்மைத் தூண்டுகிறது.

* * * * *

1980–ஆம் ஆண்டு மே மாதம்! ஒன்பது ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் நான் பயின்ற புனித பவுல் குருத்துவக் கல்லூரிக்கே பேராசிரியராகச் சென்றேன். என் தோழர்களான அருள்பணியாளர்கள் **கு. எரோணிமுசு, தே. அல்போன்சு, ச.தே. செல்வராசு, வ. பால் லியோன், வில்பிரட் பெலிக்சு** ஆகியோருடன் இணைந்து பணியாற்ற எனக்குக் கிடைத்த அருமையான வாய்ப்பு அது!

*இரக்கம் நிறைந்த இறைவன்* என்னும் சுற்றுமடல் 1980 நவம்பரில் வெளியானவுடன் அதைத் தமிழ்ப்படுத்தித் தருமாறு நண்பர் **பால் லியோன்** என்னைக் கேட்டுக்கொண்டார். என் எழுத்துப்படிகளைப் படித்து மொழிபெயர்ப்பைச் செம்மைப்படுத்தியதோடு, **திருச்சபை ஆசிரிய**



**வெளியீடுகள்** செயலர் என்ற முறையில் அழகியதோர் அணிந்துரையும் வழங்கி 1981 சூலைத் திங்களில் வெளியிட்டார். இந்த வேளையில் அவரை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

இன்றைய **திருத்தந்தை பிரான்சிஸ்** இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை அறிவித்தபோது, *இரக்கம் நிறைந்த இறைவன்* என்னும் சுற்றுமடலைத் திருத்தி வெளியிட்டால் அது மக்களுக்குப் பல வகையிலும் பயன் விளைவிக்கும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் அரும்பியது. பவுல் குருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்களிடம் எனது கருத்தைப் பகிர்ந்துகொண்ட வேளையில் அவர்கள் அதை வரவேற்றார்கள். திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்ட *இரக்கத்தின் முகம்* என்னும் மடலையும் சேர்த்து ஒரே நூலாக வெளியிட்டால் இன்னும் பயன் உள்ளதாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். மேலும் இரண்டு மடல்களையும் இணைத்து **இறைத் தந்தையைப்போல் இரக்கம் உள்ளவர்களாய்...** என்னும் தலைப்பில் வெளியிடவும் முன்வந்தார்கள். **தேடல் வெளியீடுகள்** செயலர் **அருள்பணி. சூ. சந்தியாகு ராசா** அவர்களுக்கும் கல்லூரி அதிபர், பேராசிரியர்கள் அனைவருக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

மொழிபெயர்ப்பைத் திருத்திச் செழுமைப்படுத்துவதில் எனக்குத் தோள் கொடுத்தவர் என் செயலர் **அருள்பணி. இம்மானுவேல் மரியான்.** திருவிவிலியத்தினுடைய பொது மொழிபெயர்ப்பின் அடிப்படையில் விவிலிய மேற்கோள்கள், மேற்கோள் குறிப்புகள், அடிக்குறிப்புகள் ஆகியவற்றைச் சரிபார்த்து அவரே கணினிப்படுத்திக் கொடுத்ததால், திருத்தும் பணி எனக்கு எளிதாய் அமைந்தது; விரைவில் முடிந்தது. அவருக்கு என் சிறப்பான நன்றிகள்.

வழக்கம்போல் என் எழுத்துப் படைப்புகளைக் கருத்தூன்றிப் படித்து, மொழி நடைக்கு மெருகு ஊட்டுபவர் நண்பர் **அமுதன் அடிகள்**. அவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

**''உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல
நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்''**

**–** லூக் 6:36!

**ஆயர் செ. சூசைமாணிக்கம்**

# இரக்கம் மிகுந்த கடவுள்

என்னும் பொருள் பற்றித்

திருத்தந்தை
இரண்டாம் ஜான் பால்

கத்தோலிக்கத் திருஅவை முழுவதன்
ஆயர்கள், அருள்பணியாளர்கள்,
நம்பிக்கையாளர்களுக்கு

விடுக்கும்

## சுற்றுமடல்

*வணக்கத்திற்குரிய சகோதரரே, அன்பு மக்களே,*
*உங்களை வாழ்த்தித்*
*திருத்தூது ஆசி வழங்குகிறேன்.*

# I. என்னைக் காண்பவர் தந்தையைக் காண்கிறார்

## (காண் யோவா 14:9)

### 1. இரக்கத்தின் வெளிப்பாடு

"இரக்கம் மிகுந்த கடவுளை"த்[1] தந்தையாக நமக்கு வெளிப்படுத்தியுள்ளார் இயேசு கிறிஸ்து. தந்தையின் திருமகனாகிய இவர் தம்மிலே இறைவனை வெளிப்படுத்தி அவரை நாம் அறிந்துகொள்ளச் செய்துள்ளார்.[2] இது தொடர்பாக, பன்னிரு திருத்தூதர்களுள் ஒருவரான பிலிப்பு என்பவர் கிறிஸ்து பக்கம் திரும்பி, "ஆண்டவரே, தந்தையை எங்களுக்குக் காட்டும்; அதுவே போதும்" என்று கேட்க, இயேசு அவரிடம், "பிலிப்பே, இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீ என்னை அறிந்துகொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும்..."[3] என்று மறுமொழி பகன்ற நேரம் நினைவுகூரத் தக்கது. பாஸ்கா விருந்தின் முடிவில் இடம்பெற்ற பிரியாவிடைப் பொழிவின்போது இயேசு இச் சொற்களை மொழிந்தார். விருந்தைத் தொடர்ந்த புனித நாள்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின்போது, "கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார். குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாய் இருந்த நாம் அவ் அன்பின் மூலம் இணைந்து உயிர்பெறச் செய்தார்..."[4] என்னும் உண்மையைக் கிறிஸ்து திட்டவட்டமாக உறுதிப்படுத்தியுள்ளார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினுடைய படிப்பினையின் அடிப்படையிலும், நமது காலத்தின் சிறப்பான தேவைகளின் மட்டில் தனிக்

1. காண் எபே 2:4.
2. காண் யோவா 1:18; எபி 1:1-2.
3. யோவா 14:8-9.
4. எபே 2:4-5.



கவனம் செலுத்தியும், *மனிதரின் மீட்பர்* என்ற சுற்றுமடலை நான் எழுதினேன். அதில் மனிதரைப் பற்றிக் கிறிஸ்துவில் முழுமையாகவும் ஆழமாகவும் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட உண்மையை எடுத்துக்காட்டியுள்ளேன். நாம் வாழ்கின்ற நெருக்கடியானதும் கடினமானதுமான இந் நாள்களில் "இரக்கம் நிறைந்த தந்தையும் ஆறுதல் அனைத்திற்கும் ஊற்றுமான கடவுளின்"[5] முகத்தின்பால் கிறிஸ்துவில் மீண்டும் ஒரு முறை கவனத்தைத் திருப்பவேண்டியது மிகமிகத் தேவை என உணர்கிறேன். *இன்றைய உலகில் திருஅவை* பற்றிய அருள்பணிக் கொள்கை விளக்கத்தில், "புதிய ஆதாம் கிறிஸ்து... மனிதரை மனிதருக்கே முழுவதும் வெளிப்படுத்தி, அவர்களுடைய உயரிய அழைப்பை அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார்" எனவும், "தந்தையுடையவும் அவருடைய அன்பினுடையவும் மறைபொருளை வெளியிடுவதன் வழியாகவே" இதைச் செய்கிறார் எனவும் நாம் படிக்கின்றோம்.[6] நான் மேற்கோள் காட்டியுள்ள கூற்று பின்வரும் உண்மைக்குத் தெளிவான சான்று பகர்கிறது. அதாவது, மனிதரைக் கடவுளோடு தொடர்புபடுத்திக் காணாவிடில், அவர்களது இயல்பின் முழு மாண்பும் – கருத்து அளவிலும் சரி, வாழ்வுநிலை சார்ந்த நடைமுறையிலும் சரி – தெளிவாகத் துலங்க இயலாது; ஏனெனில் தந்தையுடையவும் அவரது அன்பினுடையவும் மறைபொருள் வெளிப்படுவதன் *வழியாகவே* மனிதரும் அவர்தம் உயரிய அழைப்பும் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்படுகின்றன.

எனவே இம் மறைபொருள் பற்றி இவ் வேளையில் சிந்தித்துப் பார்ப்பது முறையாகும். திருஅவையினுடையவும் இக் கால மனிதருடையவும் பல்வேறு அனுபவங்களின் அடிப்படையில் இது தேவையும் ஆகிறது. பல மனிதரின் இதய ஏக்கங்கள், துன்பங்கள், நம்பிக்கைகள், கவலைகள், எதிர்பார்ப்புகள் முதலியனவும் இத் தேவையை உணர்த்துகின்றன. *மனிதரின் மீட்பர்* என்னும் எனது சுற்றுமடலில் நான் சுட்டிக்காட்டியிருப்பதுபோல, ஒவ்வொரு தனிமனிதரும் திருஅவைக்கு வழியாக அமைகிறார் என்பது உண்மை. அதே நேரத்தில் தந்தையையும் அவர்தம் அன்பையும் தம்மில் *வெளிப்படுத்திய இயேசு கிறிஸ்து போன்று*, நாமும் எல்லா மனிதரோடும் சேர்ந்து *இவ் வழியில்*

5. 2 கொரி 1:3.
6. *இன்றைய உலகில் திருஅவை* பற்றிய அருள்பணிக் கொள்கை விளக்கம், 22: அ.ஆ. ந. 58 (1966), பக் 1042.

பயணம் செல்லவேண்டும் என்னும் உண்மையை நற்செய்தியும் திருஅவை மரபு முழுவதும் இடைவிடாது நமக்கு எடுத்துரைக்கின்றன.[7] இயேசு கிறிஸ்துவில் மனிதருக்கு இட்டுச்செல்லும் ஒவ்வொரு வழியும், தந்தையையும் அவர்தம் அன்பையும் அணுகிச்செல்கின்ற வழியாக உள்ளது. மாறிவரும் காலச் சூழ்நிலைக்கு ஏற்ப இவ் வழி திருஅவையிடம் முடிவாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கமும் நாம் வாழும் இக் காலத்தைப் பொறுத்த மட்டில் இவ் உண்மையை உறுதிப்படுத்தியுள்ளது.

திருஅவையின் பணி எந்த அளவுக்கு மனித மையம் கொண்டுள்ளதோ – அதாவது, மனிதரைக் கருப்பொருளாகக் கொண்டு ஆற்றப்படுகிறதோ – அந்த அளவுக்கு அது இறை மையம் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்; அதாவது, இயேசு கிறிஸ்து வழியாக அது தந்தையிடம் இட்டுச்செல்ல வேண்டும். கடந்த காலத்திலும் சரி, நிகழ் காலத்திலும் சரி, மனிதச் சிந்தனையின் வெவ்வேறு போக்குகள் இறை மையக் கொள்கையையும் மனித மையக் கொள்கையையும் பிரித்துப் பார்க்க முனைந்துள்ளன; இன்றும் முயன்று வருகின்றன. அது மட்டும் அன்று, இவை இரண்டையும் ஒன்றுக்கு ஒன்று முரண்படுத்திப் பார்க்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருஅவையோ கிறிஸ்துவைப் பின்பற்றி, மனித வரலாற்றில் இவை இரண்டையும் ஆழமாகவும் உள்ளார்ந்த முறையிலும் இணைத்துப் பார்க்க முயல்கின்றது. இது இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினுடைய படிப்பினையின் அடிப்படைத் *தத்துவங்களுள் ஒன்றாகும்;* ஏன், முதன்மையானது எனவும் கூறலாம். எனவே திருஅவை வரலாற்றின் இக் காலக் கட்டத்தில், இம் மாபெரும் *சங்கத்தின் கோட்பாட்டைச் செயல்படுத்துவதையே* நமது முதன்மையான கடமையாக நாம் கருதுவதால், நம்பிக்கையோடும் திறந்த மனத்தோடும் முழு உள்ளத்தோடும் நாம் இப் பணியில் ஈடுபடவேண்டும். பொதுச் சங்கத்தின் விளைவாகத் திருஅவையில் ஏற்பட்டுள்ள தன்னுணர்வு ஆழம் பொருந்தியதாகவும், பல வழிகளில் பொருள்செறிவு உள்ளதாகவும் இருக்கவேண்டும்; அது நம் மனங்களையும் உள்ளங்களையும் கிறிஸ்துவின்பால் இன்னும் அகலமாகத் திறந்துவிட வேண்டும் என்பதை மேலே கூறப்பெற்ற சுற்றுமடலில் நான் சுட்டிக்காட்ட முயன்றுள்ளேன்.

7. காண் *இன்றைய உலகில் திருஅவை* பற்றிய அருள்பணிக் கொள்கை விளக்கம், 22: அ. ஆ. ந. 58 (1966), பக் 1042.



தந்தையோடும் அவரது அன்போடும் நாம் கொள்ளும் முதிர்ந்த உறவு மூலமே, உலகின் மீட்பர் என்னும் முறையில் ''மனிதரை மனிதருக்கே முழுவதும் வெளிப்படுத்தும்'' கிறிஸ்துவின்பால் நாம் திறந்த மனம் கொள்ள முடியும் என்பதை இப்போது சொல்ல விழைகிறேன்.

## 2. இரக்கம் மனிதராதல்

இறைவன் ''அணுக முடியாத ஒளியில் வாழ்பவர்''[8] ஆயினும், தமது படைப்பு அனைத்தின் வாயிலாக மனிதரோடு பேசுகிறார்; ''ஏனெனில், கண்ணுக்குப் புலப்படா அவருடைய பண்புகள் – அதாவது, என்றும் நிலைக்கும் அவருடைய வல்லமையும் கடவுள் தன்மையும் – உலகப் படைப்புமுதல் அவருடைய செயல்களில் மனக் கண்களுக்குத் தெளிவாய்த் தெரிகின்றன.''[9] காணக்கூடிய உலகில் வாழும் படைப்புகள் வாயிலாகக் கடவுளைத் தேடும் மனித அறிவுக்கு எட்டுகின்ற மறைமுகமானதும் குறைபாடானதுமான இந்த அறிவு ''தந்தையின் காட்சியுருவை'' நமக்கு முழுமையாகக் காட்டுவதில்லை. ''தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும் கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார்'' என்னும் உண்மையை வலியுறுத்துவதற்காகவே, ''கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை''[10] என எழுதுகிறார் புனித யோவான். இந்த ''வெளிப்பாடு,'' ''அணுக முடியாத ஒளியால்''[11] சூழப்பட்ட இறைவனின் இருத்தல், மூவொரு பரம்பொருளாம் அவரது தன்மை ஆகிய ஆழ்ந்த மறைபொருளை எடுத்துக்காட்டுகிறது. ஆயினும் கிறிஸ்துவில் நிகழ்ந்த இந்த ''வெளிப்பாட்டின்'' வாயிலாக நாம் கடவுளை அறிய வருகிறோம்; சிறப்பாக, அவர் மனிதரோடு கொள்கின்ற அன்புறவில் – அவர் மனிதர்பால் காட்டும் நேயத்தில்[12] நாம் அவரை அறிந்துகொள்கிறோம். இங்குத்தான் கடவுளின் ''கட்புலனாகாத் தன்மை'' சிறப்பான முறையில் ''கட்புலன்'' ஆகிறது; ''படைப்புப் பொருள் எதன் வழியாகவும்'' கட்புலனாகாத

8. 1 திமொ 6:16.
9. உரோ 1:20.
10. யோவா 1:18.
11. 1 திமொ 6:16.
12. தீத் 3:4.

அவரது தன்மை ஒப்பற்ற முறையில் கட்புலன் ஆகிறது; *கிறிஸ்துவில், கிறிஸ்து வழியாக*, அவருடைய செயல்கள், சொற்கள் வாயிலாக – இறுதியாக, அவர்தம் சிலுவைச் சாவு, உயிர்ப்பு மூலம் கடவுளின் தன்மை *கட்புலன் ஆகிறது.*

இவ்வாறு கிறிஸ்துவில், கிறிஸ்து வழியாகக் கடவுள் தமது இரக்கத்தால் சிறப்பான முறையில் நமக்குப் புலனாகிறார். அதாவது, பல்வேறு கருத்துகள், சொல்லாட்சிகளைப் பயன்படுத்தி, ஏற்கெனவே ''இரக்கம்'' என்று பழைய ஏற்பாட்டில் வரையறுக்கப்பட்டிருந்த கடவுளின் பண்பு இங்கு வலியுறுத்தப்படுகிறது. கடவுளின் இரக்கத்தைப் பற்றிப் பழைய ஏற்பாடு முழுவதிலும் காணக்கிடக்கும் கருத்து மரபுக்கு ஒரு குறிப்பிட்ட பொருளைக் கிறிஸ்து கொடுக்கிறார். அவர் இரக்கத்தைப் பற்றி ஒப்புமைகளாலும் உவமைகளாலும் பேசி விளக்கியதோடு மட்டும் நின்றுவிடவில்லை; *அவரே இரக்கத்தின் உருவாக மாறினார்;* இரக்கத்துக்கு ஆளுருக் கொடுத்தார். *அவரே ஒரு வகையில் இரக்கமாய் இலங்குகிறார்.* கிறிஸ்துவில் இரக்கத்தைப் பார்த்துக் கண்டுகொள்வோர்க்கு ''இரக்கம் மிகுந்த''[13] தந்தையாக இறைவன் தம்மையே சிறப்பான முறையில் வெளிப்படுத்துகிறார்.

கடந்த கால மனிதரைவிட இக் கால மனிதரின் மனப்பான்மை, இறைவன் இரக்கமுள்ளவர் என ஏற்றுக்கொள்ள மறுப்பதுபோல் தெரிகிறது. அது மட்டும் அன்று, இரக்கம் பற்றிய எண்ணத்தையே மனித வாழ்வினின்று ஒதுக்கிடவும், மனித உள்ளத்தினின்று அகற்றிடவும் இம் மனப்பான்மை முனைகிறது. வரலாற்றில் இதுவரை கண்டிராத அளவுக்கு அறிவியலிலும் தொழில்நுட்பத் துறையிலும் மனிதர் கண்டிருக்கும் மாபெரும் முன்னேற்றத்தின் பயனாக மண்ணுலகின் தலைவராக மாறி அதனைத் தம் ஆற்றலுக்கு உட்படுத்தி ஆளத் தொடங்கிவிட்ட[14] மனிதரின் மனத்தில் இரக்கம் என்னும் சொல்லும் அதன் பொருளும் அமைதியின்மையை விளைவிப்பன போன்று தெரிகிறது. மனிதர் மண்ணுலகின்மீது கொண்டுள்ள இந்த ஆதிக்கம் சில நேரங்களில் ஒருதலைச் சார்பாகவும் மேலெழுந்தவாரியாகவும் புரிந்துகொள்ளப்படுவதன் காரணமாக, இரக்கத்திற்கே அங்கு இடம் இல்லாதது போன்று தோன்றுகிறது. இது தொடர்பாக, ''இன்றைய உலகில்

13. எபே 2:4.

14. காண் தொநூ 1:28.



மனிதரின் நிலைமை'' குறித்து *இன்றைய உலகில் திருஅவை* பற்றிய அருள்பணிக் கொள்கை விளக்கம் தொடக்கத்தில் கூறுவதை நாம் ஈண்டுப் பொருத்திப் பார்ப்பது பயனுள்ளதாகும்: ''இத்தகைய சூழ்நிலையில், இன்றைய உலகம் ஆற்றல் நிறைந்ததாகவும், அதே வேளையில் செயலற்றதாகவும் காட்சி அளிக்கிறது; மிகச் சிறந்த காரியங்களையோ மிக இழிவானவற்றையோ செய்யவல்லதாகத் தோற்றம் அளிக்கிறது. சுதந்திரம் அல்லது அடிமைத்தளை, முன்னேற்றம் அல்லது பின்தங்கிய நிலை, சகோதரத்துவம் அல்லது பகைமை ஆகியவற்றிற்கு இட்டுச் செல்லும் பாதை இவ் உலகுக்கு முன் திறந்து கிடக்கிறது. மேலும், மனிதர் தாம் தூண்டிவிட்ட ஆற்றல்கள் தம்மையே அடிமைப்படுத்தவும் கூடும், தமக்குச் சேவை செய்யவும் இயலும் என்பதால், அவற்றைச் சரிவர ஆற்றுப்படுத்தும் பொறுப்பு தம்மைச் சார்ந்தது என உணர்கின்றனர்; எனவேதான் மனிதர் தம்மைப் பற்றியே கேள்விகளை எழுப்புகின்றனர்.''[15]

இன்றைய உலகின் நிலைமையை உற்றுநோக்குங்கால், *மண்ணுலகில் மனிதருக்கு நல்லதோர் எதிர்காலம்* பிறக்கப்போகிறது என்பதற்கான நம்பிக்கைக்கு இடம் அளிக்கும் மாற்றங்களை அங்கே நாம் காணலாம்; அதே நேரத்தில் இதுவரை நாம் கண்டிராத அளவுக்கு எண்ணற்ற அச்சுறுத்தல்களும் எழுகின்றன. பல்வேறு சமயங்களில் இவ் அச்சுறுத்தல்களைச் சுட்டிக்காட்டத் திருஅவை தவறியதில்லை (ஐக்கிய நாடுகள் அமைப்பு; கல்வி, அறிவியல், பண்பாடு சார்ந்த ஐக்கிய நாடுகள் அமைப்பு; உணவு, வேளாண்மை சார்ந்த ஐக்கிய நாடுகள் அமைப்பு முதலியவற்றுக்கு வழங்கப்பெறும் உரைகளே இதற்குத் தக்க சான்று). அதே நேரத்தில் கடவுளிடமிருந்து தான் பெற்றுள்ள உண்மையின் ஒளியில் திருஅவை அவற்றை ஆய்ந்துபார்க்க வேண்டும்.

''இரக்கம் நிறைந்த தந்தை''[16]யாகிய கடவுளைப் பற்றிக் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட உண்மையானது கடவுளைக் ''காண'' – குறிப்பாக, மனிதரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவராகக் காண – இன்னும் சிறப்பாக, மனிதர் துன்புறும் வேளையில், அவர்தம் வாழ்வின் உள்நிலையும்

15. *இன்றைய உலகில் திருஅவை* பற்றிய அருள்பணிக் கொள்கை விளக்கம், 9: அ. ஆ. ந. 58 (1966), பக் 1032.

16. 2 கொரி 1:3.

மாண்புமே அச்சுறுத்தப்படும் வேளையில், அவர்களுக்கு மிக நெருக்கமானவராகக் காண வழிசெய்கிறது. இதனால்தான் திருஅவையினுடையவும் உலகினுடையவும் இன்றைய நிலையில், உயிரோட்டமுள்ள நம்பிக்கையால் தூண்டப்படும் பல தனிமனிதரும் குழுக்களும் இறைவனுடைய இரக்கத்தின்பால் திரும்புகின்றனர் என இயல்பாகவே சொல்வேன். மனிதர் கிறிஸ்துவினால் தூண்டப்பெற்றே இவ்வாறு செயல்படுகின்றனர் என்பது உண்மை; ஏனெனில் அவரே தம் ஆவியின் வழியாக மனித உள்ளங்களில் செயலாற்றுகிறவர். மனிதரை அச்சுறுத்துகின்ற இன்றையச் சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்டு பார்க்குமிடத்து, கிறிஸ்துவினால் வெளிப்படுத்தப்பட்ட ''இரக்கம் மிகுந்த தந்தை''யாகிய கடவுளைப் பற்றிய மறைபொருளானது திருஅவைக்கு விடுக்கப்பட்ட தனிச் சிறப்புடைய வேண்டுகோளாக ஒரு வகையில் தோன்றுகிறது.

இச் சுற்றுமடலில் இவ் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள நான் விழைகிறேன். இறை வெளிப்பாட்டினுடையவும் நம்பிக்கையினுடையவும் நிலையான *மொழியினின்று* – அதே நேரத்தில் சொல் எளிமையைப் பொறுத்த மட்டிலும், பொருள் ஆழத்தைப் பொறுத்த மட்டிலும், ஈடு இணையற்று விளங்கும் அம் மொழியினின்று – நமது காலத்தின் பெரும் ஏக்கங்களாக விளங்குபவற்றை இறைவன் முன்னிலையிலும் மனிதர் முன்னிலையிலும் மீண்டும் ஒரு முறை எடுத்தியம்ப ஆவல் கொண்டுள்ளேன்.

உண்மையைச் சொல்லப்போனால், ''இரக்கம் மிகுந்த தந்தை''யாகிய கடவுளைப் பற்றிய மறைபொருளைக் கோட்பாட்டு அளவில் மட்டுமே தியானிக்க இறை வெளிப்பாடும் நம்பிக்கையும் நமக்குப் புகட்டுவது கிடையாது. மாறாக, கிறிஸ்துவின் பெயராலும் அவரோடு கொண்டுள்ள ஒன்றிப்பின் வழியாகவும் அந்த இரக்கத்தின் துணையை நாடவும் அவை நமக்குப் புகட்டுகின்றன. ''மறைவாய் உள்ளதைக் காணும்''[17] நம் தந்தை எப்போதும் நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்; நம் எல்லாத் தேவைகளிலும் அவரது துணையை நாம் நாடுமாறு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்;

17. மத் 6:4, 6, 18.



அவரது மறைபொருளை – தந்தையினுடையவும் அவர்தம் அன்பினுடையவும் மறைபொருளை[18] – நாம் அறியும் பொருட்டு, நமக்காக எப்போதும் காத்துக்கொண்டிருக்கிறார் என்று கிறிஸ்து கூறிடவில்லையா?

எனவே மனிதர் அனைவருடைய உள்ளத்திலும் இம் மறைபொருளைப் பதியவைக்கும் பொருட்டு, இக் கருத்துகளை உங்கள்முன் வைக்க விரும்புகிறேன். அதே நேரத்தில் இரக்கத்தின்பால் திருஅவை விடுக்கும் அன்பான வேண்டுகோளாகவும் இவற்றைக் கருத விழைகிறேன். இந்த இரக்கத்தையே மனித இனமும் இன்றைய உலகமும் பெரிதும் நாடி நிற்கின்றன. இரக்கத்தை இவ்வாறு நாடிநிற்பதை அவை பன்முறையும் உணராது போயிடினும்கூட, இரக்கம் என்றுமே தேவையானதுதான்.

18. காண் எபே 3:18; லூக் 11:5-13.

# II. மீட்பர் விடுத்த செய்தி

## 3. கிறிஸ்து செய்ததும் சொன்னதும்

இயேசு நாசரேத்தில் தம் சொந்த ஊரார் முன்னிலையில் இறைவாக்கினர் எசாயா நூலின் ஒரு பகுதியை வாசித்து, அதைத் தமக்கே பொருத்திக் காட்டினார்: "ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது; ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்."[19] லூக்கா எழுதியுள்ளவாறு இக் கூற்றுதான் *மீட்பர் விடுத்த முதல் அறிக்கை* ஆகும். நற்செய்தி நூலினின்று நாம் அறிவதன்படி, அவர்தம் செயல்களும் சொற்களும் அந்த அறிக்கைக்கு விளக்கமாய் அமைந்தன. இச் செயல்கள், சொற்கள் வழியாகக் கிறிஸ்து இறைத் தந்தையை மனிதர் நடுவில் உடனிருக்கச் செய்தார். ஏழைகள், வாழ வசதியற்றோர், தன்னுரிமை மறுக்கப்பட்டோர், படைப்பின் அழகைக் காண முடியாத பார்வையற்றோர், உடைந்த உள்ளத்தினர், சமூக அநீதியால் துன்புறுவோர், பாவிகள் ஆகியோரே அந்த அறிக்கையில் தனி இடம் பெறுகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. குறிப்பாக, அன்பே உருவான இறைவனின் மிகத் தெளிவான அடையாளமாகப் – இறைத் தந்தையின் அடையாளமாக – பாவிகளுக்கு மீட்பர் விளங்குகின்றார். அக் கால மக்கள் போன்று இக் கால மக்களும் தந்தையைக் காணும் பொருட்டு, அவர்களுக்கும் அடையாளமாகத் திகழ்கின்றார் அவர்.

திருமுழுக்கு யோவான் அனுப்பிவைத்த சீடர் இயேசுவிடம் வந்து, "வரவிருப்பவர் நீர்தாமா? அல்லது வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமா?"[20] என்று அவரைக் கேட்டதற்கு, இயேசு அளித்த மறுமொழி குறிப்பிடத் தக்கது; ஏனெனில் நாசரேத்தில் தமது போதனையின்

19. லூக்_4:18-19.
20. லூக் 7:19.



தொடக்கமாக அமைந்த அதே சான்றுரையைத்தான் அவர் சுட்டிக்காட்டினார்: "நீங்கள் கண்டவற்றையும் கேட்டவற்றையும் யோவானிடம் போய் அறிவியுங்கள்: பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர்; கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர்; தொழுநோயாளர் நலமடைகின்றனர்; காது கேளாதோர் கேட்கின்றனர்; இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுகின்றனர்; ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது." தொடர்ந்து, "என்னைத் தயக்கம் இன்றி ஏற்றுக்கொள்வோர் பேறுபெற்றோர்"[21] என்று கூறித் தமது மறுமொழியை நிறைவு செய்தார்.

நாம் வாழும் இவ் *உலகில் அன்பு நிலவுகிறது* என்பதைச் சிறப்பாகத் தமது வாழ்க்கைமுறையாலும் செயல்களாலும் இயேசு வெளிப்படுத்தினார். இது செயலாக்கம் கொண்ட அன்பு – மனிதரோடு தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் அன்பு – மனித இயல்பை உள்ளடக்கும் அனைத்தையும் அரவணைக்கும் அன்பு. துன்பம், அநீதி, வறுமை முதலியவற்றோடு தொடர்புடையவற்றில் இந்த அன்பு சிறப்பாகப் பளிச்சிடக் காணலாம். மனிதருடைய உடல், உள்ளக் குறைபாடு, வலுவின்மை ஆகியவற்றை வெவ்வேறு முறைகளில் வெளிப்படுத்தும் "மனித நிலைமை"யினுடைய முழு வரலாற்றோடு தொடர்புடையவற்றிலும் இந்த அன்பைக் காணலாம். அன்பு தன்னையே வெளிப்படுத்துகின்ற முறையும் நிலையும்தான் விவிலிய மொழியில் "இரக்கம்" என அழைக்கப்படுகிறது.

தந்தையாக விளங்கும் கடவுளைக் – புனித யோவான் தமது முதல் திருமுகத்தில் குறிப்பிடுவதுபோல, "அன்பா"கத் திகழும் கடவுளை[22] – புனித பவுல் சுட்டிக்காட்டுவது போன்று "இரக்கம் மிகுந்தவராக"[23] விளங்கும் கடவுளை – கிறிஸ்து வெளிப்படுத்தியுள்ளார்; இந்த உண்மையைப் போதனைப் பொருளாக மட்டும் அவர் கொள்ளாது, நடைமுறையிலும் இதை நமக்கு உணர்த்திக் காட்டியுள்ளார். கிறிஸ்துவினுடைய சொந்த உணர்வு நிலைப்படி பார்ப்போமாயின், இறைத் *தந்தையை அன்பாகவும் இரக்கமாகவும் (மக்களுக்குக்) காட்டுவதே* மீட்பர் என்ற முறையில் கிறிஸ்துவினுடைய பணியின் அடிப்படை உரைகல்லாக அமைகிறது. முதலில்

21. லூக் 7:22-23.
22. 1 யோவா 4:16.
23. காண் எபே 2:4.

நாசரேத்துத் தொழுகைக்கூடத்திலும், பின்னர் தம் சீடர்கள் முன்னிலையிலும், திருமுழுக்கு யோவானுடைய சீடர்கள் முன்னிலையிலும் அவர் மொழிந்த சொற்கள் இதை உறுதிப்படுத்துகின்றன.

தந்தையாக – அன்பாக – இரக்கமாக விளங்கும் இறைவனை இவ்வாறு வெளிப்படுத்துவதன் அடிப்படையில், தமது *போதகத்தின் தலையாய கருப்பொருள்களுள்* ஒன்றாக இரக்கத்தை இயேசு அமைக்கிறார். தமது வழக்கப்படி, முதலில் அவர் ''உவமைகளால்'' போதித்தார்; ஏனெனில் அவர் சொல்ல விழைந்ததன் பொருளை இவை சிறப்பாக எடுத்துரைக்கின்றன. எடுத்துக்காட்டாக, ஊதாரி மகன் உவமை,[24] அல்லது நல்ல சமாரியர் உவமை,[25] அல்லது வேறுபடுத்திக்காட்டும் முறையில், மன்னிக்க மறுத்த பணியாளர் உவமை[26] ஆகியவற்றை இவண் குறிப்பிடலாம். அன்பு–இரக்கத்தை வெவ்வேறு கோணங்களினின்று படம்பிடித்துக் காட்டும் பல பகுதிகளைக் கிறிஸ்துவின் படிப்பினையில் நாம் காணலாம். காணாமற்போன ஆட்டைத் தேடிச் செல்லும் நல்ல ஆயன்,[27] அல்லது காணாமற்போன திராக்மாவைக் கண்டுபிடிக்க வீட்டைப் பெருக்கித் தேடும் பெண்[28] பற்றிய பகுதிகளைப் படித்தாலே இது புலனாகும். இது தொடர்பாகக் கிறிஸ்துவின் போதகத்தில் இடம் பெற்ற கருத்துகளை நற்செய்தியாளரான லூக்கா சிறப்பாகத் தொகுத்துத் தருகிறார். இதனால் அன்றோ அவரது நற்செய்தி நூல் ''இரக்கத்தின் நற்செய்தி'' எனப் பொருத்தமாக அழைக்கப்படுகிறது!

அருளுரை பற்றிப் பேசும்பொழுது முக்கியமான ஒரு சிக்கலை நாம் எதிர்கொள்ள நேரிடுகிறது. சொற்களின் பொருள், சிந்தனைக் கூறுகளின் உட்பொருள், குறிப்பாக *இரக்கம்* என்னும் சொல்லின் பொருள் விளக்கம் *(அன்போடு அதற்கு உள்ள தொடர்பு)* முதலியன பற்றியதே அச் சிக்கல். இச் சிந்தனைக் கூறுகளின் உட்பொருளை நாம் புரிந்துகொள்வதே இரக்கத்தின் உண்மைப் பொருளை அறிந்திட வழி ஆகும். இதுவே நமக்கு மிகவும் முக்கியம் வாய்ந்தது. ஆயினும் இப்பொருள் பற்றி விரிவாக ஆராயப்

24. லூக் 15:11-32.
25. லூக் 10:30-37.
26. மத் 18:23-35.
27. மத் 18:12-14; லூக் 15:3-7.
28. லூக் 15:8-10.



புகுமுன் – அதாவது, இரக்கம் என்னும் சொல்லின் பொருளையும் கருத்தாழத்தையும் வரையறுக்குமுன், கடவுளின் அன்பு–இரக்கத்தைக் கிறிஸ்து வெளிப்படுத்தியபோது, மக்கள் தங்களது வாழ்க்கை நெறியாக அன்பையும் இரக்கத்தையும் கொள்ளவேண்டும் என்றும் வற்புறுத்தினார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இவ் வற்புறுத்தல் அவரது மீட்புச் செய்தியின் கருப்பொருளாக அமைகிறது; நற்செய்தியின் அடிப்படையில் எழும் ஒழுக்கநெறியின் மையமாகவும் மிளிர்கிறது. ''தலைசிறந்த போதகரான'' அவர் இதைக் கட்டளை வழியாக – அதுவும் எல்லாவற்றிலும் தலைசிறந்தது[29] என்று அவரே எடுத்துரைத்த கட்டளை வழியாக – எடுத்துரைக்கிறார். மேலும் ''இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில், அவர்கள் இரக்கம் பெறுவர்''[30] எனத் தமது மலைப்பொழிவில் அறிக்கையிட்ட ஆசிமொழி வழியாகவும் எடுத்தியம்புகிறார்.

இவ்வாறு இரக்கம் பற்றிய மீட்புச் செய்தியானது ஒரு தனிப்பட்ட இறை–மனிதப் பரிமாணத்தைக் கொண்டுள்ளது. மீட்பரைப் பற்றிய இறைவாக்கின் நிறைவாகத் தோன்றிய கிறிஸ்து அன்பின் அவதாரம் எடுத்து, துன்புறுவோர், அவப்பட்டோர், பாவிகள் முதலியோர் மட்டில் அந்த அன்பைச் சிறப்பான முறையில் எண்பிக்கிறார். இவ்வாறு ''இரக்கம் மிகுந்த'' கடவுளாகிய தந்தையை மக்கள் நடுவில் உடனிருக்கச் செய்து, அவரை இன்னும் நிறைவாக வெளிப்படுத்துகிறார். அதே நேரத்தில் அடுத்திருப்போர்மீது கொள்ளும் இரக்கமிகு அன்பின் எடுத்துக்காட்டாக அவர் மக்கள் முன்னிலையில் விளங்கி, நாம் இரக்கம் கொண்டோராய் இலங்குமாறு, தம் சொற்களைவிடச் செயல்களால் நமக்கு அழைப்பு விடுக்கிறார். நற்செய்தி அடிப்படையில் எழும் *ஒழுக்கநெறியின்* அடிப்படைக் கூறுகளுள் ஒன்றாக இரக்கத்தை அறிவிக்கிறார். ஒழுக்கநெறி சார்ந்த கட்டளையையோ கடமையையோ நிறைவேற்றுவது மட்டும் இங்குக் குறிப்பிடப்படவில்லை; இரக்கம் மிகுந்தவராகத் தம்மையே மனிதர்க்கு வெளிப்படுத்த ஏதுவான மிக முக்கியத்துவம் வாய்ந்ததொரு நிபந்தனையின் நிறைவேற்றமாகவும் அது அமையும், ''இரக்கமுடையோர்...இரக்கம் பெறுவர்'' என்று கிறிஸ்துவே மொழிந்துள்ளார் அன்றோ!

29. மத் 22:38.
30. மத் 5:7

# III. பழைய ஏற்பாடு

## 4. இரக்கத்தின் உட்பொருள்

''இரக்கம்'' என்னும் சொல்லுக்குப் பழைய ஏற்பாட்டில் நீண்ட, பொருள் செறிந்த வரலாறு உண்டு. எனவே கிறிஸ்து வெளிப்படுத்திய இரக்கத்தைத் தெளிவாக உணர வேண்டுமாயின், நாம் பழைய ஏற்பாட்டைப் புரட்டிப் பார்க்க வேண்டும். தம் செயல்கள் வழியாகவும் படிப்பினை வாயிலாகவும் இறைவனின் இரக்கத்தைக் கிறிஸ்து வெளிப்படுத்தியபோது, ''இரக்கம்'' என்னும் சொல்லின் பொருளை அறிந்திருந்த மக்களுக்கே அவர் போதித்தார். அது மட்டும் அன்று, *பழைய உடன்படிக்கையைச் சேர்ந்த இறைமக்கள்* என்னும் முறையில், தங்களுடைய பன்னெடுங்கால வரலாற்றினின்று *கடவுளின் இரக்கத்தை அவர்கள் தனிப்பட்ட முறையில் அனுபவித்தார்கள்.* இந்த அனுபவம் சமூகப் பண்பு கொண்டது. குழுத்தன்மை உடையது; அதே நேரத்தில் தனிப் பண்பு கொண்டது, உள்ளார்ந்தது.

உடன்படிக்கையின் மக்களாக விளங்கிய இஸ்ரயேலர் தாங்கள் இறைவனோடு செய்திருந்த உடன்படிக்கையைப் பல முறை மீறி நடந்தார்கள். தங்களது நம்பிக்கைக் கேட்டை அவர்கள் உணர்ந்தபோது, இரக்கத்தை அவர்கள் நாடினார்கள். இத்தகைய உணர்வைத் தூண்டி எழுப்பிவந்த இறைவாக்கினர்களுக்கும் பிறருக்கும் இஸ்ரயேலின் வரலாற்றில் குறைவே இல்லை. இது தொடர்பாக, பழைய ஏற்பாட்டில் எண்ணற்ற எடுத்துக்காட்டுகளைக் காணலாம். அங்குக் காணக்கிடக்கும் முக்கியமான நிகழ்ச்சிகள், பாடங்களுள் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்: நீதித் தலைவர்களுடைய வரலாற்றின் தொடக்கம்;[31] எருசலேம் திருக்கோவில் அர்ப்பணத்தின்போது சாலமோன் செய்த மன்றாட்டு;[32] இறைவாக்கினர் மீக்கா நூலின் சில பகுதிகள்;[33] இறைவாக்கினர் எசாயா மொழிந்த ஆறுதல்

31. காண் நீத 3:7-9.
32. காண் 1 அர 8:22-53.
33. காண் மீக் 7:18-20.



தரும் உறுதிப்பாடுகள்;[34] நாடுகடத்தப்பட்டு அடிமைத்தளையில் வாழ்ந்தபோது யூதர் எழுப்பிய கூக்குரல்;[35] அடிமைத்தளையினின்று இஸ்ரயேலர் மீண்டுவந்த பின்னர் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டமை.[36]

இறைவாக்கினர் தங்களது படிப்பினையில் கடவுளின் ஆழமான அன்போடு இரக்கத்தைத் தொடர்புபடுத்தியே பேசுகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது; ஏனெனில் மக்களுடைய பாவங்களை முன்னிட்டு இரக்கத்தை அவர்கள் அடிக்கடிக் குறிப்பிட வேண்டியதாயிற்று. இஸ்ரயேல் மக்களுக்கு ஆண்டவர் காட்டும் அன்பு தனித்தன்மை வாய்ந்த சீரிய அன்பு. மணமக்களுக்கு இடையே நிலவும் அன்புக்கு இதை ஒப்பிடலாம்.[37] இதனால் கடவுள் அவர்களின் பாவங்களையும், ஏன் நம்பிக்கைக் கேடான செயல்களையும் வஞ்சகங்களையும்கூட மன்னிக்கிறார். மக்கள் உள்ளம் நொறுங்கித் தம்மிடம் மனதாரத் திரும்பி வரும்போது, அவர்களை அருள்நிலைக்கு மீண்டும் கொண்டுவருகிறார்.[38] இறைவாக்கினர்களின் படிப்பினையில் *இரக்கம் அன்பின் சிறப்பாற்றலைச்* சுட்டுகிறது. இந்த ஆற்றல் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் *பாவம், நம்பிக்கைக் கேடு முதலியவற்றை வெல்லக் கூடியது.*

பரந்தகன்ற இச் ''சமூகச்'' சூழலைப் பின்னணியாக வைத்துப் பார்க்கும்போது, பாவ நிலையினால் நலிவுற்றுவரும் அல்லது எல்லா வகை இன்னல் இடையூறுகளையும் தாங்கிக் கொண்டுவரும் தனிமனிதருடைய உள்ளார்ந்த அனுபவத்தோடு தொடர்புடைய ஒன்றாக இரக்கம் காட்சி அளிக்கிறது. *உடல் கேடு, ஒழுக்கக்கேடான பாவம்* ஆகிய இரண்டுமே இஸ்ரயேல் மக்களை இறைவன்பால் திருப்பி, அவருடைய இரக்கத்தை மன்றாடத் தூண்டிவந்தன. இவ்வாறு தமது பாவப் பளுவை உணர்ந்த தாவீது இறைவன்பால் மனந்திரும்புகிறார்.[39] தாங்கொணாத் துன்பத்தில் உழன்ற யோபு முதலில் எதிர்த்தெழுந்தாலும் இறுதியில் இறைவனிடம் திரும்புகிறார்.[40]

34. காண் எசா 1:18; 51:4-16.
35. காண் பாரூ 2:11-3:8.
36. காண் நெகே 9.
37. காண் எ.கா.: ஓசே 2:21-3:2; எசா 54:6-8.
38. காண் எரே 31:20; எசே 39:25-29.
39. காண் 2 சாமு 11; 12; 24:10.
40. யோபு நூலின் இடையிடையே.

தம் சொந்த மக்களுக்கு நேரவிருந்த மரண ஆபத்தை அறியவந்த எஸ்தரும் இவ்வாறே செய்தார்.[41] இன்ன பிற எடுத்துக்காட்டுகளைப் பழைய ஏற்பாட்டு நூல்களில் நாம் காணலாம்.[42]

பல்வேறு கோணங்களைக் கொண்ட இவ் உறுதிப்பாடு குழு சார்ந்ததாகவும் தனி ஆள்களைச் சார்ந்ததாகவும் துலங்குகிறது; பழைய ஏற்பாடு முழுவதிலும் தலைமுறை தலைமுறையாகக் காணக்கிடக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தங்களது விடுதலைப் பயணத்தின்போது பெற்றுக்கொண்ட அடிப்படை அனுபவம் இதற்கு ஆணிவேராக அமைகிறது; ஏனெனில் அடிமைத்தளைக்கு ஆளாக்கப்பட்ட தம் மக்களின் துன்பத்தை ஆண்டவர் கண்ணுற்றார்; அவர்களது கூக்குரலைக் கேட்டார்; அவர்களது துயரங்களை அறியலானார்; அவற்றினின்று அவர்களை விடுவிக்க முடிவு செய்தார்.[43] ஆண்டவரின் இம் மீட்புச் செயலில் அவரின் அன்பையும் பரிவையும் இறைவாக்கினர் கண்டனர்.[44] இதன் அடிப்படையில்தான் இறைவனின் இரக்கத்தில் மக்கள் பற்றுறுதி கொள்ளத் தொடங்கினார்கள்; பேரிடர் வந்துற்றபோதெல்லாம் அந்த இரக்கத்தையே அவர்கள் விரும்பி வேண்டினார்கள்.

மேலும், மனிதருடைய அவலநிலைக்குப் பாவமும் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை. பழைய உடன்படிக்கையின் மக்கள் தங்களது விடுதலைப் பயணத்திலிருந்தே – அதாவது, பொன் கன்றுக்குட்டியைச் செய்து வணங்கத் தலைப்பட்ட நாளிலிருந்தே – இந்த அவலநிலையை உணரத் தொடங்கினார்கள். உடன்படிக்கையை மீறி நடந்த இச் செயல்மீது ஆண்டவர்தாமே வெற்றிகொண்டார். அதனால்தான், “தாம் இரக்கமும் பரிவும் உள்ள இறைவன்; சினம் கொள்ளத் தயங்குபவர்; பேரன்பு மிக்கவர்; நம்பிக்கைக்குரியவர்”[45] என்று கடவுள் மோசேக்குச் சிறப்பான வகையில் அறிக்கையிட்டார். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் – குழுவாகவும் சரி, தனித்தனியாகவும் சரி – பாவம் செய்தபோதெல்லாம், இறை வெளிப்பாட்டின் இந்த மைய உண்மையில்தான் வலிமை காண்பார்கள்; தம்மைப் பற்றித்

41. எஸ் (கி) 4:17 k-z
42. காண் எ.கா.: நெகே 9:30-32; தோபி 3:2-3, 11-12; 8:16-17; 1 மக் 4:24.
43. காண் விப 3:7-10.
44. காண் எசா 63:9.
45. காண் விப 34:6.



தாமே வெளிப்படுத்தியுள்ளதை[46] ஆண்டவருக்கு நினைவுபடுத்தி, அவரது மன்னிப்பை மன்றாடி, அவர்பால் மனந்திரும்புவதற்கான தூண்டுதல் பெறுவார்கள்.

இவ்வாறு ஆண்டவர் தாம் உரிமையாக்கிக்கொண்ட மக்களுக்குத் தொடக்கத்திலிருந்தே தம் சொல்லாலும் செயலாலும் இரக்கத்தை வெளிப்படுத்தி வந்துள்ளார். அவர்கள் துன்பங்களால் அல்லலுற்றபோதும், தங்கள் பாவங்களைப் பற்றிய உணர்வு பெற்றபோதும், இறைவனுடைய இரக்கத்துக்குத் தங்களையே தொடர்ந்து கையளித்து வந்தார்கள் என்பது அவர்களது வரலாறு முழுவதிலும் காணக்கிடக்கிறது. ஆண்டவர் தம் சொந்த மக்களுக்குக் காட்டிவந்த இரக்கத்தில் அன்பின் எல்லா வகை நுணுக்கக்கூறுகளும் வெளிப்படுகின்றன எனலாம். இறைவன் அவர்களுடைய தந்தை;[47] இஸ்ரேயல் அவர்தம் தலைப்பிள்ளை.[48] *ருகாமா*, அதாவது “அன்புக்குரியவர்” அல்லது “கருணை பெற்றவர்”[49] என்று இறைவாக்கினரால் புதுப் பெயர் சூட்டப்பெற்ற இஸ்ரயேலின் மணமகனாகவும் ஆண்டவர் விளங்குகிறார்.

தம் சொந்த மக்களின் நம்பிக்கைக் கேட்டால் எரிச்சலூட்டப்பட்டு, அவர்களை அழித்துவிட நினைத்த வேளையிலும், ஆண்டவர் அவர்கள்மீது காட்டிவந்த கனிவும் எல்லையற்ற அன்பும் அவரது கோபத்தைத் தணித்துவிடும்.[50] ஆண்டவரின் உயர் புகழ்ச்சிகளைப் போற்றிப் பாட விழைந்த திருப்பாடல் ஆசிரியர்கள் அன்பு, கனிவு, இரக்கம், பற்றுறுதி கொண்ட இறைவனுக்கு ஏன் பண்ணிசைக்கிறார்கள் என்பதை இதிலிருந்து புரிந்துகொள்வது எளிது.[51]

இவற்றினின்று ஓர் உண்மையை நாம் அறிய வருகிறோம். அதாவது, இரக்கம் என்பது இறைவனுக்கு மட்டும் உரிய ஒன்று அன்று; இஸ்ராயேல் குலம் முழுவதனுடையவும், அதன் ஒவ்வோர் ஆண், பெண்ணுடையவும்

46. காண் எண் 14:18; 2 குறி 30:9; நெகே 9:17; திபா 86; சாஞா 15:1; சீஞா 2:11; யோவே 2:13.
47. காண் எசா 63:16.
48. காண் விப 4:22.
49. காண் ஓசே 2:1.
50. காண் ஓசே 11:7-9; எரே 31:20; எசா 54:7-8.
51. காண் திபா 103; 145.

வாழ்க்கையின் பண்பாய் அமைகின்ற ஒன்று. இரக்கம் என்பது *மனிதர் தங்கள் ஆண்டவரோடு கொள்ளும் நட்புறவின் உட்பொருள்* ஆகும்; அவரோடு கொள்ளும் உரையாடலின் பொருளும் ஆகும். இந்தக் கோணத்தில்தான் பழைய ஏற்பாட்டு நூல்களில் இரக்கமானது பொருள் செறிந்த முறையில் விளக்கப்படுகிறது. இரக்கம் என்றால் என்ன என்னும் கேள்விக்கு வெறும் கருத்து அளவிலான பதிலை இந் நூல்களில் காண்பது கடினமாக இருக்கலாம். ஆயினும் அவற்றுள் எடுத்தாளப்பட்டுள்ள சொல்தொகுதியே இப் பொருள் பற்றி அதிகம் எடுத்தியம்பப் போதுமானது.[52]

ஒன்றோடு ஒன்று தொடர்பு உடைய பொருள் கொண்ட பல சொற்களைப் பயன்படுத்தி, ஆண்டவருடைய இரக்கத்தைப் பழைய ஏற்பாடு பறைசாற்றுகின்றது. பொருள் நுட்பத்தைப் பொறுத்த மட்டில் இச் சொற்கள் வேறுபாடுகள் கொண்டவை என்றாலும், *இவை அனைத்தும் ஒரே*

52. இரக்கத்தைப் பற்றி விளக்குகிற வேளையில், பழைய ஏற்பாட்டு நூல்கள் இரண்டு சொற்களைக் கையாளுகின்றன. அவை இரண்டும் பொருள் நுட்ப வேறுபாடுகள் கொண்டவை. முதலில் *ஃகெசத்* என்னும் சொல்லை எடுத்துக்கொள்வோம். இது நன்னயம் என்னும் பண்பின் உள்ளார்ந்த மனநிலையைக் குறிக்கும். நன்னயம் இரு மனிதர்களுக்கு இடையே ஏற்படும்போது, அவர்கள் ஒருவர் மற்றவருக்கு நலம் விழைவது மட்டும் அல்ல; அவர்கள் ஒருவர் மற்றவருக்குக் கடப்பாடு உள்ளவர்களாகவும் மாறுகிறார்கள்; உள்ளார்ந்த கடமை காரணமாக – எனவே, அவர்கள் தங்களுக்கே கொண்டிருக்கும் *பற்றுறுதி காரணமாகவே* அவர்கள் இவ்வாறு மாறுகிறார்கள். *ஃகெசத்* என்றால் ‘‘அருள்’’ அல்லது ‘‘அன்பு’’ என்றும் பொருள்படுவதால், மேற்கூறிய பற்றுறுதியின் அடிப்படையில்தான் இச் சொல் பயன்படுத்தப்படுகிறது. இங்குக் குறிப்பிடப்படும் கடமை, ஒழுக்க இயல்பானது மட்டும் அன்று, பெரும்பாலும் சட்ட இயல்பாகவும் உளது எனும் உண்மை மேற்கூறிய கருத்தை மாற்றிவிடாது. பழைய ஏற்பாட்டில் ஆண்டவரோடு தொடர்புடைய சொல்லாக *ஃகெசத்* கையாளப்படும்போது, இஸ்ரயேலரோடு இறைவன் செய்திருந்த உடன்படிக்கையின் பின்னணியில்தான் இது எப்போதுமே பயன்படுத்தப்படுகிறது. இறைவனைப் பொறுத்தமட்டில், இந்த உடன்படிக்கை இஸ்ரயேலருக்கு அருளப்பட்ட நன்கொடையாகவும் அருளாகவும் அமைந்தது. ஆயினும் தாம் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு ஏற்றவாறு, அதை மதித்து நடக்கும் பொருட்டு, இறைவன் ஒரு கடமையையும் தம்மேல் ஏற்றுக்கொண்டார். இதனால் *ஃகெசத்* ஒரு வகையில் சட்ட இயல்பான உட்பொருளையும் பெறுகிறது. இஸ்ரயேலர் உடன்படிக்கையை மீறி, அதன் நிபந்தனைகளை மதிக்கத் தவறிய போதெல்லாம், இறைவனைப் பொறுத்த மட்டில் இந்தச் சட்ட இயல்பான கடமை காலாவதியாகிவிட்டது. ஆனால் இப்படிப்பட்ட கட்டங்களில்தான் சட்ட இயல்பான கடமையினின்று திரிந்து, *ஃகெசத்* தனது ஆழ்ந்த பொருளை வெளிப்படுத்தலாயிற்று. அது தொடக்கத்தில் வழங்கிய பொருளில், அதாவது கொடுக்கின்ற அன்பை – நம்பிக்கைக்



*அடிப்படையான உட்பொருளில் இணைகின்றன;* அதன் தலைசிறந்த பொருள் செறிவை எடுத்துரைப்பதிலும், வெவ்வேறு கோணங்களினின்று மனிதர்க்கு அதை உணர்த்துவதிலும் அவை இணைகின்றன. துன்பத்தில் உழலும் மக்கள், சிறப்பாகப் பாவத்தினால் அழுந்துவோரும், அதே போன்று இறைவனோடு உடன்படிக்கை செய்திருந்த இஸ்ரயேல் குலமும் *இறைவனின்*

கேட்டைவிட ஆற்றல் படைத்த அன்பை – பாவத்தைவிட வலிமை வாய்ந்த அருளை உணர்த்தலாயிற்று.

பற்றுறுதியையும் பற்றுறுதியற்ற ‘‘என் மக்களினமான மகளையும்’’ (காண் புல 4:3,6) எதிர் எதிராக வைத்துப் பார்க்குமிடத்து – சுருக்கமாகச் சொல்லப்போனால், *கடவுளைப் பொருத்த மட்டில் அவர் தம்மீதுதாமே கொண்டிருக்கும் பற்றுறுதியைக் குறிக்கும். ஃகெசத் வெஎமத்* (அருள் + பற்றுறுதி) என்னும் இரட்டைச் சொல் அடிக்கடி பயன்படுத்தப்படுவதிலிருந்தே இவ் உண்மை தெளிவாகிறது. ஒரே பொருளை விளக்கும் இரு சொற்களாகவும் நாம் இவற்றைக் கொள்ளலாம் (காண் எ.கா., விப 34:6; 2 சாமு 2:6; 15:20; திபா 25:10; 40:11-12; 85:11; 138:2; மீக் 7:20). ‘‘இஸ்ரயேல் வீட்டாரே, நான் இவ்விதம் செயலாற்றுவது உங்களை முன்னிட்டு அல்ல. மாறாக...என் திருப்பெயரை முன்னிட்டே இவ்விதம் செயலாற்றுகிறேன்’’ (எசே 36:22). எனவே உடன்படிக்கையை மீறிய குற்றத்தில் இஸ்ரயேலர் அமிழ்ந்திக் கிடந்தபோதிலும், சட்ட இயல்பான நீதியின் அடிப்படையில், கடவுளுடைய *ஃகெசத்* மாட்டுள்ள உரிமையை அவர்கள் வலியுறுத்திக் கூற முடியவில்லை. இருப்பினும் அதை அடையலாம் என்று அவர்கள் நம்பவும் உறுதிகொள்ளவும் வாய்ப்பு இருந்தது; இல்லை, நம்பவும் உறுதிகொள்ளவும் கடமையே இருந்தது; ஏனெனில் உடன்படிக்கையின் கடவுள் உண்மையில் ‘‘தமது அன்புக்குப் பொறுப்புள்ளவராய்’’ இருக்கிறார். இந்த அன்பின் விளைவுகள் என்னவென்றால் மன்னிப்பு, அருள்நிலை பெறல், அக உடன்படிக்கையினைப் புதுப்பித்தல் முதலியனவாகும்.

இரக்கத்தை வரையறுக்கப் பழைய ஏற்பாடு பயன்படுத்தும் மற்றொரு சொல் *ரகாமிம்* என்பதாகும். இது *ஃகெசத்* என்பதனினும் நுட்பமான பொருள் வேறுபாடு கொண்டது. தனக்குத்தானே பற்றுறுதியாய் இருத்தல், ‘‘தனது சொந்த அன்புக்கான பொறுப்பு’’ (இவை ஒரு வகையில் ஆண்பாலுக்குரிய பண்புகள் எனலாம்.) என்னும் இயல்புக் கூறுகளை *ஃகெசத்* குறிக்கிறது என்றால், ரகாமிம் தன் மூலப்பொருள் அளவிலே தாய்க்குரிய அன்பைச் சுட்டுகிறது (*ரெகெம்* என்றால் தாயின் கருப்பை என்பது பொருள்). தன் பிள்ளையோடு தாயைப் பிணைத்துவைக்கும் இந்த ஆழ்ந்த, தனிப் பண்பு வாய்ந்த பாசத்தினின்று – ஒற்றுமையினின்று – பிள்ளை மட்டில் தாய்க்குரிய சிறப்பானதோர் உறவு, தனிப்பட்ட அன்பு பிறக்கிறது. இந்த அன்பு முற்றிலும் தானாக விழைந்து தரப்படும் ஒன்றே அன்றி, தகுதியை வைத்துக் கொடுக்கப்படுவது அன்று. இவ்வாறு நோக்கும்போது, உள்ளிருந்து எழும் தேவையாக, அதாவது இதயத்தின் அவசரத் தேவையாக இவ் அன்பு துலங்குகிறது. *ஃகெசத்* விளக்கும் பற்றுறுதி என்னும் ஆண்மைப் பண்புக்கு மாறான பெண்மைப் பண்பு என இதை நாம் ஒரு வகையில் கொள்ளலாம். இந்த உளவியல் பின்னணியில் பார்க்கும்போது, *ரகாமிம்* என்னும் சொல் பல்வேறு உணர்ச்சிகளின் ஒட்டுமொத்தமாகத் துலங்குகிறது! இவ்

*இரக்கத்தை இறைஞ்சிடப்* பழைய ஏற்பாடு தூண்டுதல் அளிக்கிறது; இதில் உறுதி கொள்ளவும் செய்கிறது. தோல்வி வந்துற்றபோதும், நம்பிக்கை ஏற்பட்ட வேளையிலும், கடவுளின் இரக்கத்தை அவர்களுக்கு நினைவூட்டுகிறது. இதன் விளைவாக, இஸ்ரயேல் மக்களின் வரலாற்றிலும் தனிமனித வாழ்விலும் இறைவனின் இரக்கம் வெளிப்பட்டபோதெல்லாம் அதற்கு *நன்றிப் பண்ணிசைத்து அதன் மாட்சியை* இயம்புகிறது பழைய ஏற்பாடு.

---

உணர்ச்சிகளுள் நன்னயம், கனிவு, பொறுமை, புரிந்துகொள்ளும் தன்மை – அதாவது, மன்னிக்க அணியமாயிருக்கும் நிலை முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

ஆண்டவரைப் பற்றிப் பேசும் பகுதிகளில், *ரகாமிம்* என்னும் சொல்லைப் பழைய ஏற்பாடு பயன்படுத்தும்போதெல்லாம், மேற்சொன்ன பண்புகள் அனைத்தும் அவரில் விளங்குவதாகக் காட்டுகிறது. எசாயா நூலில், ''பால் குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? *இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன்*'' (49:15) என நாம் படிக்கிறோம். தாய்மை என்னும் மறைபொருளின் ஆற்றலால் இவ் அன்பு பற்றுறுதி கொண்டதாகவும் வெல்லமுடியாததாகவும் இலங்குகிறது. இந்த அன்பு பல்வேறு முறையில் பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்படுகிறது: ஆபத்துகளினின்று, குறிப்பாக எதிரிகளிடமிருந்து வரும் ஆபத்துகளினின்று கிடைக்கும் மீட்பு; தனிமனிதர்களுடையவும் இஸ்ரயேல் இனம் முழுவதனுடையவும் பாவங்களுக்கு வழங்கப்படும் மன்னிப்பு; இறுதியாக ஓசேயா நூலில் ''அவர்களுடைய பற்றுறுதியின்மையை நான் குணமாக்குவேன்; அவர்கள்மேல் உளமார அன்புகூர்வேன்'' (ஓசே 14:4) என நாம் படிப்பது போன்று, மனிதர் பற்றுறுதி தவறும் வேளையிலும், (நிறைவுக் கால) வாக்குறுதியையும் எதிர்நோக்கையும் நிறைவேற்ற அணியமாயிருக்கும் நிலை முதலியன.

இதே அடிப்படை உட்பொருளை வெவ்வேறு முறைகளில் குறிப்பிடும் வேறு பல சொற்களையும் பழைய ஏற்பாட்டுச் சொல்தொகுதியில் காணலாம். ஆனால் மேலே கூறப்பட்ட இரண்டு சொற்களும் குறிப்பாகக் கவனிக்கத் தக்கன; ஏனெனில் அவை *தொடக்கத்தில் இருந்த மனிதப் பண்பேற்றிக் கடவுளைக் கருதும் தன்மையைத்* தெளிவாகக் காட்டுகின்றன. இறைவனின் இரக்கத்தை விரும்புகின்ற வேளையில், தங்கள் காலத்து மக்களின் எண்ணங்களுக்கும் அனுபவங்களுக்கும் பொருந்திப் போகின்ற சொல்தொடர்களையே விவிலிய ஆசிரியர்கள் பயன்படுத்தினார்கள். எழுபதின்மர் மொழிபெயர்ப்பு *(செப்துவாசிந்த்)* எனப்படும் பழைய ஏற்பாட்டுக் கிரேக்க மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்தொகுதி எபிரேய மொழியில் இருக்கும் பொருள் செறிவு முழுவதையும் வழங்குவதாக இல்லை. எனவே (எபிரேய) மூலப் பாடத்தில் உள்ள எல்லாப் பொருள் நுட்பங்களையும் கிரேக்க மொழிபெயர்ப்பு வெளிக்கொணர்வதில்லை. இருப்பினும் பழைய ஏற்பாட்டில் ஏற்கெனவே விளங்கிய பொருள்செறிவையும் கருத்தாழத்தையும் அடிப்படையாகக் கொண்டு புதிய ஏற்பாடு தொடர்ந்து கட்டி எழுப்புகிறது.



இவ்வாறு இரக்கம் கடவுளின் நீதியின்று ஒரு வகையில் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது; நீதியைவிட அதிக ஆற்றல் வாய்ந்ததாகவும் ஆழமிக்கதாகவும் அது பல வேளைகளில் காட்டப்படுகிறது. மனிதரைப் பொறுத்தமட்டில் உண்மையான நற்பண்பாகவும், கடவுளைப் பொறுத்த மட்டில் இயற்கை கடந்த முழு நிறைவாகவும் நீதி விளங்குகிறது எனவும், அன்பு நீதியைவிட ''உயரியது'' – அதாவது முதன்மையானது, அடிப்படையானது எனவும் பழைய ஏற்பாடு நமக்குப் புகட்டுகிறது. அன்பு ஒரு வகையில் நீதியில் மாறுதல் விளைவு கொணர்கிறது; முடிவாகப் பார்க்குமிடத்து, நீதி அன்புக்குப் பணிகிறது. நீதியோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அன்பின் முதன்மையும் உயர்வும் *இரக்கத்தின் வழியாகவே வெளிப்படுகின்றன.* இறை வெளிப்பாடு முழுவதிலும் இந்த உண்மை பளிச்சிடக் காணலாம். இதைத் திருப்பாடல்

---

இவ்வாறு இறைவனின் இரக்கத்தை வரையறுக்கின்ற பழைய ஏற்பாட்டு நூல்களினின்று உருவான சிறப்பு இணைப்பாக்கமாகிய ஒரு மரபுச் செல்வத்தை நாம் பெற்றுள்ளோம். இது அந் நூல்களில் கையாளப்பட்டுள்ள பொருள்செறிந்த தொடர்களைக் குறித்து மட்டும் அன்று, கடவுளுக்கே உரித்தான ''உளவியலையும்'' அங்குக் காண்கிறோம். இவ் ''உவமையில்'' மனிதப் பண்பேற்றிக் கடவுளைக் கருதும் தன்மையுடையதாகவே அங்குத் துலங்குகிறது என்பது தெளிவு. அதன்படி தீமையின், குறிப்பாகத் தனிமனிதருடையவும் மனிதச் சமுதாயத்தினுடையவும் பாவத்தின் பின்னணியில் *நெஞ்சை உருக்கும் அவரது அன்பின் சாயல் இரக்கமாக வெளிப்படுகிறது.* இறைவனின் இந்தச் சாயல் *ஃகனான்* என்னும் வினைச்சொல் வழங்கும் பொதுவான பொருளோடு, *ஃகெசத், ரகாமிம்* ஆகிய சொற்கள் வழங்கும் உட்பொருளும் சேர்ந்தே உருப் பெறுகிறது. *ஃகனான்* என்னும் சொல் பரந்த பொருளை வழங்கும் – அதாவது நிலையான, தாராளப் பண்புடைய, பிறர் நலம் நாடுகின்ற, இரக்கம் நிறைந்த முற்சார்பு நிலையை உள்ளடக்கிய அருளின் வெளிப்பாட்டைக் குறிக்கும்.

சொற்பொருள் சார்ந்த இவ் அடிப்படைக் கூறுகள் தவிர, *ஃகமால்* என்னும் வினைச்சொல் வழங்கும் பொருளையும் பழைய ஏற்பாட்டில் ''இரக்கம்'' என்னும் சொல் குறிக்கும். *ஃகமால்* என்னும் சொல்லின் நேரடி மொழிபெயர்ப்பு (தோற்றுப்போன எதிரியை) ''அழிக்காமல்விடுதல்'' என்பதாகும். ஆனால் ''இரக்கமும் பரிவும் காட்டுதல்'' என்னும் பொருளும், அதிலிருந்து பிறக்கும் மன்னிப்பு, பிழைபொறுத்தல் என்னும் பொருளும்கூட உண்டு. *கூஸ்* என்னும் சொல்லும் இரக்கம், பரிவு முதலியவற்றைக் – சிறப்பாக உள்ளார்ந்த உணர்ச்சியோடு வெளிப்படுத்துவதை – குறிக்கும். விவிலியத்தில் இரக்கத்தைக் குறிப்பிட இச் சொற்கள் அரிதாகவே பயன்படுத்தப்படுகின்றன. மேலும், ஏற்கெனவே சொல்லப்பட்ட *எமத்* என்னும் சொல்லைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்: உறுதி, பாதுகாப்பு (கிரேக்க மொழிபெயர்ப்பில் ''உண்மை'' என்றுள்ளது) எனவும் அவற்றின் வழி பற்றுறுதி என்னும் பொருளையும் இது சிறப்பாக உணர்த்தும். இவ்வாறு *ஃகெசத்* என்னும் சொல்லுக்கே உரித்தான பொருள் நுட்பங்களோடு இது தொடர்புடையதாகத் தெரிகிறது.

ஆசிரியர்களும் இறைவாக்கினர்களும் எவ்வளவுக்குத் தெளிவாகக் கண்டார்கள் என்றால், ஆண்டவராலும் அவர்தம் இரக்கத்தாலும் அருளப்பட்ட மீட்புக்கு மறு பெயராக நீதி என்னும் சொல்லையே கையாண்டார்கள்.[53] *இரக்கம் நீதியினின்று வேறுபடுகிறது என்பது உண்மைதான்; ஆனால் அதற்கு முரணானது அன்று.* படைத்தவர் என்னும் முறையில் தம் படைப்புகளோடு தனிப்பட்ட அன்பினால் தம்மை ஏற்கெனவே ஈடுபடுத்திக்கொண்டுள்ள கடவுளின் உடனிருப்பை மனித வரலாற்றில் ஏற்றுக்கொள்வோர்க்கு இது வெள்ளிடை மலை. பழைய ஏற்பாடு இதையே சுட்டிக்காட்டுகிறது. அன்பு தன் இயல்பிலேயே பகைமையை விலக்குகிறது; முன்பு யாருக்காகத் தம்மையே கொடுத்தாரோ அவருக்கு எதிரான பகைமை எண்ணத்தையுமே தவிர்க்கிறது: "...நீர் படைத்த எதையும் வெறுப்பதில்லை..."[54] இறைவனிலும் மனிதர், உலகு ஆகியவற்றோடு அவர் ஏற்படுத்தும் உறவிலும், நீதியும் இரக்கமும் கொண்டுள்ள ஆழ்ந்த உறவின் அடித்தளத்தை மேற்சொன்ன சொற்கள் எடுத்துரைக்கின்றன. இந்த உறவுக்கான உயிரளிக்கும் ஊற்றையும் உள்ளார்ந்த காரணங்களையும் அறியவேண்டின், நாம் "தொடக்க நிலையை" – அதாவது, *படைப்பின் மறைபொருளையே* – பின்னோக்கிப் பார்ப்பது அவசியம் என்பதை இச் சொற்கள் உணர்த்துகின்றன. "அன்பாக" விளங்கும் இறைவனின்[55] முழு வெளிப்பாட்டையும் உடன்படிக்கையின் பின்னணியில் மேற்கூறிய சொற்கள் முன்னுணர்த்துகின்றன.

படைப்பின் மறைபொருளோடு *தேர்ந்தெடுப்பின் மறைபொருள்* தொடர்பு கொண்டது. இத் தேர்ந்தெடுப்பே இஸ்ரயேல் மக்களின் வரலாற்றைச் சிறப்பான முறையில் உருவாக்கியது. தமது நம்பிக்கையின் காரணமாக, ஆபிரகாம் இம் மக்களுக்கு ஆன்மீகத் தந்தை ஆனார். ஆயினும் பழைய, புதிய உடன்படிக்கைகளின் வரலாற்று வாயிலாக முன்னேறிச் செல்லும் இம் மக்கள் மூலம் தேர்ந்தெடுப்பின் மறைபொருள் ஒவ்வோர் ஆண், பெண்ணையும், ஏன் பரந்து விரிந்த குடும்பமான மனித இனம் முழுவதையுமே குறிக்கும். "உனக்கு நான் முடிவில்லாத அன்பு

53. திபா 40:11; 98:2-3; எசா 45:21; 51:4,7; 56:1.
54. சாஞா 11:24.
55. 1 யோவா 4:16.



காட்டியுள்ளேன்; எனவே, பேரன்பால் உன்னை ஈர்த்துள்ளேன்."[56] *"மலைகள் நிலை சாயினும்... உன்மீது நான் கொண்ட பேரன்போ நிலைசாயாது; என் சமாதான உடன்படிக்கையோ அசைவுறாது..."*[57] ஒரு காலத்தில் இஸ்ரயேலுக்கு அறிவிக்கப்பட்ட இவ் உண்மை மனிதருடைய முழு வரலாற்றையும் அணைத்து நிற்கும் *இயலுருத் தோற்றத்தை* – அதாவது தற்காலத்தையும் நிறைவுக் காலத்தையும் சார்ந்த இயலுருத் தோற்றத்தை உள்ளடக்கியுள்ளது.[58] பழைய ஏற்பாட்டு நூல்களின் பல பகுதிகள் நமக்கு உணர்த்துவது போன்று, இதே இயலுருத் தோற்றத்தின் பின்னணியிலும், ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருந்த அடிப்படையிலும்தான் கிறிஸ்து இறைத் தந்தையை வெளிப்படுத்தினார். இந்த வெளிப்பாட்டின் முடிவில் – தாம் இறப்பதற்கு முந்திய இரவில் – பின் வரும் மறக்க முடியாத சொற்களைத் திருத்தூதர் பிலிப்புவிடம் கூறினார்: "இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீ என்னை அறிந்துகொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும்."[59]

56. எரே 31:3.
57. எசா 54:10.
58. யோவா 4:2,11; திபா 145:9; சீஞா 18:8-14; சாஞா 11:23-12:1.
59. யோவா 14:9

# IV. ஊதாரி மகனின் உவமை

## 5. ஓர் ஒப்புமை

புதிய ஏற்பாட்டின் தொடக்கத்திலேயே இறைவனின் இரக்கத்தைப் பற்றித் தனியோர் ஒத்திசைவு கொண்ட இரு குரல்கள் புனித லூக்கா நற்செய்தியில் முழங்குகின்றன. இவ் ஒத்திசைவு பழைய ஏற்பாட்டு மரபு முழுவதிலும் ஆற்றல் வாய்ந்த முறையில் எதிரொலிக்கக் காணலாம். பழைய ஏற்பாட்டில் காணப்படும் வேறுபட்ட சொல்தொகுதிகளோடு தொடர்புடைய சொல்பொருள் கூறுகளை மேற்கூறிய இரு குரல்களும் எதிரொலிக்கின்றன. சக்கரியாவின் வீட்டில் நுழைந்த *மரியா ஆண்டவரைப் போற்றிப் பெருமைப்படுத்துகிறார்;* அவருக்கு அஞ்சுவோர்மீது *தலைமுறை தலைமுறையாய்ப்* பொழியப்படும் இறைவனின் *இரக்கத்தை நினைந்து* தமது முழு உள்ளத்தோடும் போற்றுகிறார். தொடர்ந்து, இஸ்ரயேலின் தேர்ந்தெடுப்பை எண்ணியவராய், (ஆண்டவரின்) இரக்கத்தை அறிக்கையிடுகிறார்; தம்மைத் தேர்ந்துகொண்டவர் என்றென்றும் நினைவுகூர்ந்த இரக்கத்துக்குப் பண்ணிசைக்கிறார்.[60] பின்னர் அதே வீட்டில், திருமுழுக்கு யோவான் பிறந்தபோது, அவருடைய தந்தை *சக்கரியா* இஸ்ரயேலின் கடவுளைப் போற்றினார்; நம் மூதாதையருக்கு வாக்களித்திருந்த இரக்கத்தைச் செயலாக்கியதற்காகவும், *தமது தூய உடன்படிக்கையை நினைவுகூர்ந்ததற்காகவும்* கடவுளை மாட்சிமைப்படுத்தினார்.[61]

60. இரண்டு இடங்களிலும் *ஃகெசத்* என்னும் சொல்லே கையாளப்படுகிறது. அதாவது, கடவுள் மக்கள்மீது கொண்ட தமது சொந்த அன்புக்கே பற்றுறுதியுடன் இருத்தல் - இறையன்னையின் தாய்மையில் முடிவான நிறைவேற்றம் கண்ட வாக்குறுதிகளுக்குப் பற்றுறுதியுடன் இருத்தல் (காண் லூக் 1:49-54).

61. காண் லூக் 1:72. இந்த இடத்திலும் இரக்கம் என்னும் பொருளில்தான் *ஃகெசத்* கையாளப்பட்டுள்ளது; ஏனென்றால் இப் பகுதிக்குப் பிறகு, ''நம் கடவுளின் இரக்கப் பெருக்கம்'' என்று சக்கரியா கூறும் பின்னைய சொல்தொடரில் இரண்டாவது பொருளை - அதாவது, தாயன்பாக இறைவனின் இரக்கத்தைக் காணும் *ரகாமிம்* என்னும் பொருளையே *ஃகெசத்* வழங்குகிறது (இலத்தீன் மொழிபெயர்ப்பு: இரக்க உருக்கம்).



பழைய ஏற்பாட்டினின்று பெறப்பட்ட இவ் உருவகம் *கிறிஸ்துவின் போதகத்தில்* இன்னும் *எளிதான, ஆனால் ஆழமான* ஒன்றாக மாறுகிறது. ஊதாரி மகன் உவமையில் இது மிகமிகத் தெளிவாகிறது எனலாம்.[62] ''இரக்கம்'' என்னும் சொல் இவ் உவமையில் எடுத்தாளப்படவில்லை என்றாலும், இறை இரக்கத்தின் உட்பொருளை இது மிகத் தெளிவாக உணர்த்துகிறது. பழைய ஏற்பாட்டு நூல்களில் இது போன்று பயன்படுத்தப்படும் சொல்தொகுதியினால் அன்று, இரக்கத்தின் மறைபொருளை இன்னும் முழுமையாக அறிந்திட வழி செய்யும் ஒப்புமையினாலேயே இது தெளிவாகிறது. இதனால் தந்தையின் அன்புக்கும் மகனின் ஊதாரித்தனம், பாவம் ஆகியவற்றுக்கும் இடையே அமைந்த தலைசிறந்த நாடகமாக இரக்கத்தின் மறைபொருள் சித்தரித்துக் காட்டப்படுகிறது.

சொத்தில் தமக்கு வரவேண்டிய பங்கைத் தம் தந்தையிடமிருந்து பெற்றுக்கொண்டு, வீட்டைவிட்டுத் தொலை நாடு சென்று, அங்கு ஊதாரித்தனமாக வாழ்ந்து, தம் சொத்து எல்லாவற்றையும் அழித்த அந்த இளைய மகன், வெவ்வேறு காலக் கட்டத்தில் வாழும் ஒவ்வொரு மனிதருக்கும் அடையாளம் ஆவார். அருள்செல்வத்தையும் தொடக்கச் சால்புடைமையையும் இழந்துவிட்ட தொடக்க மனிதரிலிருந்து அனைவருக்குமே இவ் ஒப்புமை மிகவும் பரந்த பொருள் உடையது. அன்பின் உடன்படிக்கையை மீறும் ஒவ்வொரு செயலையும், நம்மில் அருள்வாழ்வை மாய்க்கும் அனைத்தையும், ஒவ்வொரு பாவத்தையுமே இவ் உவமை மறைமுகமாகச் சுட்டுகிறது. இஸ்ரயேல் குலம் முழுவதன் நம்பிக்கைக் கேடு பற்றி இறைவாக்கு நூல்கள் வலியுறுத்துவது போன்று, இந்த உவமை வலியுறுத்துவது இல்லை எனலாம். ஆயினும், இஸ்ரயேல் மக்கள் குலத்துக்கும் *இவ் உவமையைப் பொருத்திப் பொருளுரைக்க இயலும்.* ''தமது சொத்தெல்லாம் பாழாக்கிய பின்,'' குறிப்பாகத் தம் தந்தையின் வீட்டைவிட்டு வெளியேறிய பின், அம் மகன் சென்றடைந்த ''நாடு எங்கும் கொடிய பஞ்சம் உண்டானபோது,'' வறுமையில் வாடினார். இக் கட்டத்தில் ''அந் நாட்டுக் குடிகளுள் ஒருவரிடம்'' அண்டிப் பிழைக்கச் சென்று, அவருடைய பன்றிகளை மேய்த்து வந்தார். அப் ''பன்றிகள் தின்னும் நெற்றுகளாலாவது''

62. காண் லூக் 15:4-32.

மகிழ்ச்சியோடு ''தமது வயிற்றை நிரப்ப அவர் விரும்பினார்;'' ஆனால் அதைக்கூட அவருக்குக் கொடுப்பார் இல்லை.

இந்த ஒப்புமை மனிதருடைய உள்ளத்தின் நிலையினைத் தெளிவாகக் காட்டுகிறது. தம் தந்தையிடமிருந்து அவர் பெற்றிருந்த சொத்தானது பொருள் செல்வந்தான்; ஆனால் மகன் என்ற முறையில் *தம் தந்தையின் வீட்டில் அவருக்கு இருந்த மேன்மை*, அச் செல்வங்களைவிட மிக முக்கியம் வாய்ந்தது. தம் சொத்துகளை எல்லாம் இழந்துவிட்ட நிலையில், அந்த மேன்மையின் இழப்பை அவர் உணர்ந்திருக்க வேண்டும். வீட்டைவிட்டு வெளியேறும் பொருட்டு, சொத்தில் தமக்கு வரவேண்டிய பங்கைப் பிரித்துக் கொடுக்கும்படி அவர் தம் தந்தையைக் கேட்டபோது, இதைப் பற்றி அவர் சிந்தித்திருக்கவில்லை. இப்பொழுதுகூட அவர் இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை; ஏனெனில், ''என் தந்தையின் கூலியாட்கள் எத்தனையோ பேருக்கு நிறைய உணவு இருக்க, நான் இங்குப் பசியால் மடிகிறேனே'' என்றுதான் அவர் தமக்குள் சொல்லிக்கொள்கிறார். தாம் அழித்துவிட்ட சொத்துகளை அளவுகோலாகக் கொண்டே அவர் தம்மைக் கணிக்கிறார். தம்மிடம் இப்போது சொத்துகள் இல்லை; ஆனால் தம் தந்தையின் கூலியாள்களுக்கு அவை உண்டு என அவர் ஒப்பிட்டுப் பார்க்கிறார். உலகப் பொருள்கள் மட்டில் அவர் கொண்டிருந்த மனநிலையை இது தெளிவாக வெளிப்படுத்துகிறது. இருப்பினும் மகனுக்குரிய மாண்பை மட்டும் அன்று, மகவுத் தன்மையையே வீணடித்துவிட்ட துயர உணர்வு இங்கு இலைமறை காயாகக் காணக்கிடக்கிறது.

இந்தக் கட்டத்தில்தான் அவர் ஒரு முடிவுக்கு வருகிறார்: ''நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய், 'அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்; இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்; உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன்' என்று சொல்லிக்கொண்டார்.''[63] அடிப்படையான சிக்கல் எதில் அடங்கியுள்ளது என்பதை இச் சொற்கள் வெகு ஆழமாக எடுத்துரைக்கின்றன. தமது மடமையினால், தமது பாவத்தினால் பொருளற்ற நிலைக்குத் தள்ளப்பட்டதன் விளைவாக, ஊதாரி மகனின் உள்ளத்தில் அவர் இழந்துவிட்ட மேன்மையைப் பற்றிய எண்ணம் வளர்ந்து

63. லூக் 15:18-19.



முதிர்ச்சி அடையத் தொடங்கியது. தம் தந்தையின் வீட்டிற்குச் செல்லவும் – மகனுக்குரிய உரிமையோடு அன்று, ஆனால் கூலியாள்களுள் ஒருவராக ஏற்றுக்கொள்ளப்படும்படி தம் தந்தையை வேண்டவும் அவர் செய்த முடிவை நோக்கும்போது, அவருக்கு வந்துற்ற வறுமையினாலும் பசியினாலும் உந்தப்பட்டே அவர் செயல்பட்டதாக முதலில் தோன்றினாலும், இந் நோக்கத்தோடு கலந்து இழையோடும் இன்னொன்றும் உளது: அதுதான் அவருடைய பேரிழப்பைப் பற்றிய உணர்வு. *சொந்தத் தந்தையின் வீட்டிலே கூலியாளாய் இருப்பது* உண்மையிலேயே பெரிய தலைக்குனிவு மட்டும் அன்று, மானக்கேடும் ஆகும். இருப்பினும் இத்தகைய தலைக்குனிவையும் மானக்கேட்டையும் தாங்கிக்கொள்ள அவர் தயங்கினார் இல்லை. தந்தையின் வீட்டில் கூலியாளாய் இருப்பதைத் தவிர, தமக்கு யாதோர் உரிமையும் இல்லை என்பதை அவர் உணர்கிறார். இந்த இழிநிலை தமது தகுதிக்கு ஏற்றதே என்ற முழு உணர்வோடுதான் அவர் இந்த முடிவுக்கு வந்தார். அது மட்டும் அன்று, நீதிப்படி பார்க்கும்போதும் இதுதான் தமது உரிமை என்ற உணர்வும் அவரை இந்த முடிவுக்கு உந்தித் தள்ளியது. இவ்வாறு ஊதாரி மகன் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்ததை நோக்கும்போது, தாம் இழந்துவிட்ட மேன்மை பற்றிய உணர்வு – தந்தையோடு மகன் கொண்டுள்ள உறவினின்று எழும் மாண்பு பற்றிய உணர்வு – அவரது உள்ளத்தின் ஆழத்தில் படிப்படியாக எழுந்ததை நாம் அறியவருகிறோம். இந்த முடிவோடுதான் அவர் தம் தந்தையைச் சந்திக்கச் செல்கிறார்.

ஊதாரி மகன் உவமையில் ''நீதி'' என்னும் சொல் ஒரு முறைகூட எடுத்தாளப்படவில்லை. அதே போன்று மூல மொழியில் ''இரக்கம்'' என்னும் சொல்லும் பயன்படுத்தப்படவில்லை. *இருப்பினும் நீதிக்கும் இரக்கம் என்று வருணிக்கப்படும் அன்புக்கும் இடையே உள்ள தொடர்பு* நற்செய்தியில் வரும் இவ் உவமையில் மிகவும் துல்லியமாகப் பொறித்து வைக்கப்பட்டுள்ளது. மிகவும் துல்லியமான, ஆனால் பெரும்பாலும் குறுகிய நோக்கு உடைய நீதிக்கு அப்பால் செல்ல வேண்டிய தேவை ஏற்படும்பொழுது, அன்பு இரக்கமாக மாறுகிறது என்பது கண்கூடு. தம் தந்தையிடமிருந்து பெற்றிருந்த சொத்துகளை அழித்துவிட்ட பின்னர் வீடு திரும்பி வந்த ஊதாரிக்கு என்ன தகுதி இருந்தது? தம் தந்தையின் வீட்டில் கூலி வேலை செய்து, தமது வாழ்க்கைத் தேவையை நிறைவு செய்துகொள்வது;

கூடுமானால், தாம் அழித்துவிட்ட சொத்து அளவுக்கு ஒருவேளை சேகரிக்க முடியாவிட்டாலும், சிறிது சிறிதாக ஓர் அளவாவது திரட்டுவது – இதுதான் அவருக்குத் தகுதி ஆகும். இதுவே நீதிமுறைக்கும் பொருந்தும்; ஏனெனில் தமது சொத்தெல்லாம் அழித்ததும் அன்றி, அவர் தமது தீய நடத்தையினால் *தம் தந்தையைப் புண்படுத்தி மனம் வருந்தச் செய்திருந்தார்.* அவர் தமது நடத்தையினால் மகனுக்குரிய மாண்பை இழந்துவிட்டதால், அவருடைய தந்தை இது மட்டில் அக்கறை காட்டாது இருக்க முடியவில்லை. மகனின் இந் நிலை தந்தையை வருத்தியது. அத்தோடு அவரை ஒரு வகையில் ஈடுபடவும் வைத்தது. என்ன இருந்தாலும், இதில் தொடர்புடையவர் அவருடைய சொந்த மகன்தான். ஆகவே எவ் வகை நடத்தையாலும் தந்தை–மகன் உறவு ஒருபோதும் மாறவோ முறிவுறவோ முடியாது. ஊதாரி மகன் இதை உணர்ந்திருந்தார். இந்த உணர்வே, தாம் இழந்துவிட்ட மாண்பை அவருக்குத் தெளிவாக உணர்த்தியது; இந்த உணர்வே, தம் தந்தையின் வீட்டில் அவர் இன்னும் எதிர்பார்க்கக் கூடியது பற்றி நேர்மையாகச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்திட அவரைத் தூண்டியது.

## 6. மனித மாண்புமீது தனிக் கவனம்

*ஊதாரி மகனின் மனநிலையை உள்ளவாறே படம்பிடித்துக் காட்டும் இவ் உவமை, இறைவனின் இரக்கம் எதில் அடங்கியுள்ளது என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது.* இவ் உவமை எளிதாயினும் ஆழ்ந்து ஊடுருவும் தன்மை கொண்டது. இதில் வரும் தந்தையின் பாத்திரம் கடவுளைத் தந்தையாகப் படம்பிடித்துக் காட்டுகிறது என்பதில் ஐயம் இல்லை. உவமையில் வரும் தந்தையின் நடத்தை மட்டும் அன்று, அவர் செயல்படும் முறை முழுவதுமே கடவுளுடைய உள்ளார்ந்த மனநிலையை வெளிப்படுத்துகிறது. இதனால் இரக்கம் பற்றிப் பழைய ஏற்பாட்டில் அங்கும் இங்குமாகக் காணக்கிடக்கும் தனித்தனிக் கருத்துகளை நம்மால் தொடர்புபடுத்தித் தொகுத்துப் பார்க்க முடிகிறது. இத்தகைய தொகுப்பு முற்றிலும் புதியது; முழுவதும் எளிமையும் கருத்தாழமும் கொண்டது. ஊதாரி மகனின் *தந்தை தமது தந்தைமைக்குப் பற்றுறுதி உள்ளவராகத் திகழ்கிறார்.* தம் மகன்மீது எப்போதுமே *தாம் பொழிந்துவந்த அன்புக்குப் பற்றுறுதி உள்ளவராகத்* துலங்குகிறார். இப் பற்றுறுதி உவமையின் பல இடங்களில் தெளிவாகிறது; தமது சொத்தெல்லாம் செலவழித்துவிட்டு இல்லம் திரும்பிவந்த வேளையில், தந்தை உடனே அவரை வீட்டுக்குள் வரவேற்கின்றார்; தம் தந்தையிடமிருந்து ஒருபோதும் பிரிந்து செல்லாமலும், தமது வீட்டைத் துறக்காமலும் வாழ்ந்துவந்த மூத்த மகனுடைய எதிர்ப்பையும் பகைமையையும் தூண்டிவிடும் அளவுக்குத் தாராளமாக மகிழ்ச்சி கொண்டாடி விருந்து அளிக்கின்றனர்.



தந்தையின் பற்றுறுதி தனிப்பட்ட பாசத்தோடு கூடிய முறையில் வெளிப்படுகிறது. இப் பண்பு பழைய ஏற்பாட்டில் *ஃகெசத்* என்னும் சொல் வழியாக ஏற்கெனவே நமக்கு அறிமுகமான ஒன்று. மகன் இல்லம் நோக்கி வருவதைக் கண்ட தந்தை, "*பரிவுகொண்டு*, ஓடிப்போய் அவரைக் கட்டித்தழுவி முத்தமிட்டார்"[64] என நாம் படிக்கிறோம். ஆழ்ந்த பாசத்தினால் தூண்டப்பட்டே தந்தை இவ்வாறு செயல்பட்டார் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி. தந்தை தம் மகன்பால் கொண்டிருந்த பெருந்தன்மையையும், தம் மூத்த மகனின் கோபத்தைத் தூண்டிவிடக்கூடிய அளவுக்கு அவரிடம் விளங்கிய தாராள மனப்பான்மையையும் இது காட்டுகிறது. ஆயினும் இந்தப் பாசத்திற்கான காரணங்களை இன்னும் ஆழமான முறையில் நாம் காண வேண்டும். அடிப்படையான நன்மை ஒன்று, அதாவது மகனுடைய மனித நலம் பாதுகாக்கப்பட்டது என்பதைத் தந்தை அறிவார். சொத்து அழிந்துபோனாலும், *அவருடைய மனிதப் பண்பு பாதுகாக்கப்படுகிறது;* ஒரு வகையில் அது *மீண்டும் கண்டுபிடிக்கப்படுகிறது.* மூத்த மகனிடம் தந்தை கூறிய சொற்கள் இவ் உண்மையை எண்பிக்கின்றன: "நாம் மகிழ்ந்து கொண்டாடி இன்புற வேண்டும்; ஏனெனில், உன் தம்பி இவன் இறந்து போயிருந்தான்; மீண்டும் உயிர்பெற்றுள்ளான். காணாமற் போயிருந்தான்; மீண்டும் கிடைத்துள்ளான்."[65] லூக்கா நற்செய்தியில் அதே 15–ஆம் அதிகாரத்தில், காணாமறற்போய்க் கண்டுபிடிக்கப்பட்ட ஆட்டின் உவமையையும்,[66] தொடர்ந்து, காணாமறற்போய்க் கண்டுபிடிக்கப்பட்ட திராக்மாவின் உவமையையும்[67] நாம் படிக்கிறோம். இங்கும் ஊதாரி மகனின்

---

64. லூக் 15:20.
65. லூக் 15:32.
66. காண் லூக் 15:3-6.
67. காண் லூக் 15:8-9.

மனமாற்றம் குறித்து ஏற்படும் அதே மகிழ்ச்சியே வலியுறுத்தப்படுகிறது. ஊதாரி மகனின் மனிதம், மாண்பு முதலியனமீதே தந்தையின் பற்றுறுதி முழுதும் ஈடுபட்டிருக்கிறது. மகன் வீடு திரும்பியபோது தந்தை மகிழ்ச்சியுற இது அன்றி வேறு காரணம் இல்லை.

தந்தை தம் மகன்மீது கொண்டிருந்த அன்பு – தந்தைமையின் இயல்பிலிருந்தே எழும் அன்பு – தம் மகனின் மாண்பு பற்றி ஒரு வகையில் அக்கறை கொள்ள அவரைத் தூண்டிவிடுகிறது என நாம் சொல்லலாம். இந்த அக்கறையை வைத்து அவரது அன்பை நாம் கணிக்க முடியும். இத்தகைய அன்பைப் பற்றியே புனித பவுல் எழுதுவார்: ''அன்பு பொறுமையுள்ளது; நன்மை செய்யும்…அன்பு தன்னலம் நாடாது; எரிச்சலுக்கு இடம் கொடாது; தீங்கு நினையாது…மாறாக உண்மையில் அது மகிழும்…அன்பு அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும்; அனைத்திலும் மனவுறுதியாய் இருக்கும்…அன்பு ஒருபோதும் அழியாது.''[68] ஊதாரி மகன் உவமையில் கிறிஸ்து எடுத்துரைப்பது போல, இரக்கம் என்பது அன்பின் *உள்ளார்ந்த பண்பு* ஆகும். இது புதிய ஏற்பாட்டில் *ஆகப்பே* எனும் சொல்லால் உணர்த்தப்படுகிறது. இந்த அன்பு ஒவ்வோர் ஊதாரிப் பிள்ளையையும் சென்றடைய வல்லது; எல்லா வகை மனித அவலநிலையையும் – எல்லாவற்றுக்கும் மேலாக, ஒழுக்கம்சார் அவலநிலையையும் பாவத்தையும் சென்றடையக் கூடியது. இவ்வாறு செயல்படுகையில், எம் மனிதர்மீது இரக்கம் காட்டப்படுகிறதோ அம் மனிதர் இழிவுபடுத்தப்படுவதில்லை; மாறாக, காணாமற்போயிருந்தும் கண்டுபிடிக்கப்பட்டதாக, ''இழந்திருந்த மாண்பு நிலையை மீண்டும் அடைந்ததாக'' அவர் உணர்கிறார். காணாமற்போன மகன் ''மீண்டும் கிடைத்துவிட்டார்''; இறந்துபோன மகன் ''உயிர் பெற்று வந்துள்ளார்'' என்னும் மகிழ்ச்சியையே தந்தை முதன்முதல் அவரிடம் வெளிப்படுத்துகிறார். மாறா நிலையில் இருந்த ஒரு நலனை இம் மகிழ்ச்சி சுட்டிக்காட்டுகிறது. அதாவது, ஒருவர் ஊதாரியே ஆனாலும், அவருடைய தந்தைக்கு அவர் பிள்ளைதான்; இந் நிலையில் எவ் வகை மாற்றமும் ஏற்படுவதில்லை. மீண்டும் கண்டுபிடிக்கப்பெற்ற நலனையும் இம் மகிழ்ச்சி

68. 1 கொரி 13:4-8.



குறிக்கிறது; ஏனெனில் தம்மைப் பற்றிய உண்மையை ஊதாரி உணர்ந்துகொண்டார்.

கிறிஸ்துவின் உவமையில் வரும் தந்தை–மகன் உறவில் ஏற்பட்ட மாற்றத்தைப் ''புறத் தோற்றத்தை'' வைத்து நாம் மதிப்பிடல் கூடாது. இரக்கத்தைப் பற்றி நம்மில் பல முற்சார்பு எண்ணங்கள் உருவாகக் காரணம் இத்தகைய புறநிலைசார் மதிப்பீடுதான். இத்தகைய மதிப்பீட்டு முறையை நாம் பின்பற்றும்போது, இரக்கம் காட்டுபவர்க்கும் இரக்கம் பெறுபவர்க்கும் இடையே ஏற்படும் *சமநிலையற்ற உறவாக இரக்கம் தென்படுகிறது.* இதன் விளைவாக, இரக்கம் பெறுபவரை அது சிறுமைப்படுத்துகிறது: மனித மாண்பை அது சிறுமைப்படுத்துகிறது என்று விரைவில் முடிவு செய்துவிடுகிறோம். ஆனால் உவமை உணர்த்துவது போன்று *உண்மை இது அன்று.* மனிதர் என்னும் நலன் பற்றிய பொதுவான பட்டறிவின் அடிப்படையில்தான் இரக்கத்தின் உறவு மலர்கிறது; மனிதருக்கே உரிய மாண்பு பற்றிய பொதுவான பட்டறிவின் பின்னணியில்தான் இரக்கம் சுரக்கிறது. இந்தப் பொதுவான பட்டறிவானது தம்மைப் பற்றியும் தம் செயல்கள் பற்றியும் உள்ள முழு உண்மையைக் காண ஊதாரி மகனைத் தூண்டுகிறது (இத்தகைய கண்ணோட்டம் தாழ்மைப் பண்பின் உண்மையான வடிவம் ஆகும்). அதே நேரத்தில், மேற்கூறிய காரணத்தை முன்னிட்டு, தம் தந்தை மதிக்கும் தனிப்பட்ட நலனாக அவர் மாறுகிறார். உண்மையும் அன்பும் உள்ளூர இணைந்ததால் விளைந்த இந் நலனைத் தந்தை எத்துணைத் தெளிவாகக் கண்டார் என்றால், தம் மகன் செய்திருந்த தீமை அனைத்தையும் மறந்துவிடுகிறார்.

*மனமாற்றம் பற்றிய உண்மையை* எளிய, ஆனால் ஆழமான முறையில் விளக்குகிறது ஊதாரி மகன் உவமை. மனித உலகில் அன்பு செயலாற்றிக் கொண்டிருக்கின்றது; இரக்கம் குடிகொண்டிருக்கின்றது என்பதற்குக் கண்கூடான அடையாளமாக மனமாற்றம் விளங்குகிறது. ஒழுக்கக்கேடு, உடல் கேடு, பருப்பொருள்சார் கேடு முதலியவற்றை எத்துணைக் கூரிய நோக்குடனும் பரிவுடனும் பார்த்தாலும், அது இரக்கத்தின் உண்மையான உட்பொருளை வெளிக்கொணர்வதாகக் கூறிவிட முடியாது. இரக்கத்தின் உண்மையான, முழுமையான வடிவம் வெளிப்படுவது எப்போது எனில், உலகிலும் மனிதரிலும் குடிகொண்டுள்ள

*எல்லா வகையான தீமைகளினின்றும் நன்மையை வெளிகொணர்ந்து,* அதை உயர்தகவு நிலைக்கு உயர்த்தி மேம்படச் செய்யும்போதுதான். இவ்வாறு புரிந்துகொள்ளப்படும் கட்டத்தில், கிறிஸ்துவினுடைய மீட்புச் செய்தியின் அடிப்படையான உட்பொருளாக இரக்கம் அமைகிறது; அவரது மீட்புப் பணியின் ஆக்கக்கூறாயுள்ள ஆற்றலாகவும் அது அமைகிறது. கிறிஸ்துவின் சீடர்களும் தொண்டர்களும் இப்படித்தான் இரக்கத்தைப் புரிந்துகொண்டு அதைச் செயல்படுத்தினார்கள். அவர்களுடைய உள்ளங்களிலும் சொற்களிலும் இரக்கம் எப்போதும் வெளிப்பட்டது; சிறப்பாக, ‘‘தீமையால் வெல்ல முடியாத,’’ ஆனால் ‘‘நன்மையால் தீமையை வெல்லக்கூடிய’’[69] அன்பின் உயிருள்ள சான்றாக இது அமைகிறது. இரக்கத்தின் உண்மையான வடிவம் புதிய புதிய முறையில் என்றும் வெளிப்படவேண்டும். இரக்கத்தைப் பற்றிய முற்சார்பு எண்ணங்கள் பல நிலவிடினும், நாம் வாழும் இக் காலத்துக்கு இரக்கம் இன்றியமையாத தேவையாகும்.

69. காண் உரோ 12:21.



# V. பாஸ்கா மறைபொருள்

## 7. சிலுவையிலும் உயிர்ப்பிலும் வெளிப்பட்ட இரக்கம்

கிறிஸ்துவினுடைய மீட்புச் செய்தியும், அவர் மக்களிடையே ஆற்றிய பணியும் சிலுவையிலும் உயிர்ப்பிலும் முடிவடைந்தன. இம் முடிவான நிகழ்ச்சியை நாம் ஆழமாக ஊடுருவிப் பார்ப்பது அவசியம் (குறிப்பாக வத்திக்கான் சங்கம் இந் நிகழ்ச்சியைப் *பாஸ்கா மறைபொருள்* என அழைக்கிறது). அப்பொழுதுதான் நமது மீட்பின் வரலாற்றில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது போன்று, இரக்கம் பற்றிய உண்மையை வெகு ஆழமாக எடுத்துரைக்க நம்மால் இயலும். இக் கட்டத்தில் *மனிதரின் மீட்பர்* என்னும் சுற்றுமடலின் உட்பொருளை நாம் சிந்தித்துப் பார்ப்பது அவசியம். மீட்பு நிகழ்ச்சியின் மனித அளவை மனிதரின் சொல்லவொண்ணா மேன்மையை – *இத்துணை மாண்புமிக்க மீட்பரை அடையப் பேறுபெற்ற*[70] மனிதரின் மேன்மையை – வெளிப்படுத்துகிறது. அதே *மீட்பு நிகழ்ச்சியின் இறை அளவையை* நோக்கும்போது, அது அன்பின் ஆழத்தைப் பட்டறிவால் அறியப்படுகிற முறையிலும், ‘‘வரலாற்று’’ உண்மை உடைய வகையிலும் வெளிக்கொணர்கிறது. திருமகனின் சீரிய பலியைக் கண்டும் பின்னடையாத அன்பு அது. படைத்தவரும் தந்தையும் ஆனவர் மனிதர் மட்டில் கொண்டிருந்த பற்றுறுதியை நிறைவு செய்யும் பொருட்டே அவர் இத்தகைய அன்பைப் பொழிந்தார்; ஏனெனில் மனிதர்கள் அவருடைய சாயலாகப் படைக்கப்பட்டவர்கள்; அருளுக்காகவும் மாட்சிக்காகவும் ‘‘தொடக்கம்’’ முதல் இத் திருமகனில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

பெரிய வெள்ளி அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகள் – ஏன், அதற்கு முன்னர் கெத்சமனித் தோட்டத்தில் அவர் செய்த இறைவேண்டல்கூட, இறை வெளிப்பாட்டின் – கிறிஸ்துவின் மீட்புப் பணியில் வெளிப்பட்ட அன்பினுடையவும் இரக்கத்தினுடையவும் இறை வெளிப்பாட்டின் – போக்கில் அடிப்படையான ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. ‘‘அனைவரையும்...

70. காண் பாஸ்காத் திருவிழிப்பு: பாஸ்காப் புகழுரை.

விடுவித்து, எங்கும் நன்மை செய்துகொண்டே சென்றவர்"[71] – "நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினவர்"[72] – இப்போது தாமே மாபெரும் இரக்கத்தை எதிர்பார்த்து நிற்கின்றார். அவர் சிறைப்பிடிக்கப்பட்டபோது – எள்ளிநகையாடப்பட்டபோது – தீர்ப்பிடப்பட்டபோது – கசையால் அடிக்கப்பட்டபோது – முள்முடி சூட்டப்பட்டபோது – சிலுவையில் ஆணியால் அறையப்பட்டபோது – இறுதியில் சித்திரவதைக்கு உள்ளாக்கும் துன்பங்களுக்கு நடுவில் உயிர்நீத்தபோது – *அவர் இரக்கத்தை இறைஞ்சி நின்றார்.*[73] தாம் யாருக்கு நன்மை செய்திருந்தாரோ அம் மக்களிடமிருந்து அவ் வேளையில் இரக்கம் பெற அவருக்குத் தனிப்பட்ட உரிமை இருந்தது; ஆனால் அது அவருக்குக் கிடைக்கவில்லை. அவருக்கு மிக நெருக்கமானவர்கள்கூட அவரைக் காப்பாற்றவில்லை; அவருடைய எதிரிகளின் கைகளின்று விடுவிக்கவில்லை. மீட்புச் செயலின் இந்த இறுதிக் கட்டத்தில், ஆண்டவரின் ஊழியர் பற்றி இறைவாக்கினர்கள், குறிப்பாக எசாயா முன்னறிவித்திருந்த இறைவாக்குகள் கிறிஸ்துவில் நிறைவேறின: "அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்."[74]

உண்மையாகவே துன்புற்ற மனிதராகிய கிறிஸ்து – ஒலிவத் தோட்டத்திலும் கல்வாரியிலும் மிகக் *கொடிய* துன்பங்களை அனுபவித்த கிறிஸ்து – தந்தையை நோக்கி மன்றாடுகிறார்; எந்தத் தந்தையின் அன்பை மக்களுக்கு எடுத்துரைத்தாரோ – எந்தத் தந்தையின் இரக்கத்துக்குத் தம் செயல்கள் வழியாகச் சான்று பகன்றாரோ – அந்தத் தந்தையை நோக்கி வேண்டுகிறார். சிலுவைச் சாவின் கொடிய துன்பம் அவரை – அவரைக்கூட – விட்டுவைக்கவில்லை. கடவுள் "*பாவம் அறியாத அவரைப் பாவநிலை ஏற்கச் செய்தார்*"[75] என எழுதும் புனித பவுல், சிலுவையின் ஆழ்ந்த பொருளையும் மீட்பு நிகழ்ச்சியின் தெய்வீகப் பண்பையும் ஒரு சில சொற்களில் இரத்தினச் சுருக்கமாகத் தருகிறார். இந்த மீட்புதான் நிறைவின் முழுமையாக – "நீதியின் முழுமையாக" – அன்பின் முழுமையாக – விளங்கும் இறைவனுடைய புனிதத்தின் இறுதியான, அறுதியான வெளிப்பாடு; ஏனெனில் நீதியானது

71. திப 10:38.

72. மத் 9:35.

73. காண் மாற் 15:37; யோவா19:30.

74. எசா 53:5.

75. 2 கொரி 5:21.



அன்பை அடிப்படையாகக் கொண்டது; அன்பிலிருந்து சுரப்பது; அன்பையே நாடி நிற்பது. உண்மையில் கடவுள் கிறிஸ்துவைத் தம் ஒரே மகன் என்றும் பாராது, "நமக்காக அவரைப் பாவ உருவாக்கினார்."[76] இவ்வாறு கிறிஸ்துவின் பாடுகளிலும் இறப்பிலும் நிபந்தனை அற்ற முறையில் நீதி முழுமையாக வெளிப்படுகிறது; ஏனெனில் மனித இனத்தின் பாவங்கள் பொருட்டே அவர் பாடுகளை ஏற்றார்; சிலுவைச் சாவை ஏற்றார். நீதியின் "முழுமை உச்ச அளவிற்கும்" மேலாக இங்கு வெளிப்படுகிறது எனலாம்; ஏனெனில் இறை–மனிதரின் பலி மனிதருடைய பாவங்களுக்குக் "கழுவாயாக" அமைந்தது. ஆயினும் "ஏற்புடையவராக்கும் செயல்" என முறையாக அழைக்கப்பெறும் இந்த நீதி அன்பினின்றே முழுவதும் உருவாகிறது; தந்தையினுடையவும் மகனுடையவும் அன்பினின்றே ஊற்றெடுக்கிறது; அன்பிலேதான் முழுப் பயன் விளைவிக்கிறது. இதன் பொருட்டே கிறிஸ்துவின் சிலுவையில் வெளிப்படும் இறைவனின் நீதியானது "ஏற்புடையவராக்கும் செயல்" எனப் பெயர் பெறுகிறது; ஏனெனில் அன்பினின்று அது உருவாகி அன்பிலே நிறைவு எய்தி, மீட்பின் பயன்களை அருளுகிறது. பாவத்தை நீதி மேற்கொள்ளும் பொருட்டு, மீட்பின் *இறை அளவை செயல்பட்டது.* அது மட்டும் அன்று, மனித அன்புக்குப் படைக்கும் ஆற்றலை மீண்டும் வழங்கியது. இதனாலேயே கடவுளினின்று வரும் வாழ்வினுடையவும் புனிதத்தினுடையவும் நிறைவை மனிதர் மீண்டும் அணுகி வருகின்றனர். இவ்வாறு இரக்கத்தின் வெளிப்பாட்டோடு மீட்பு தொடர்பு கொண்டிருக்கிறது; இரக்கத்தின் முழுமையையும் உள்ளடக்கியிருக்கிறது.

இரக்கத்தின் உச்சக்கட்டம் பாஸ்கா மறைபொருள் எனலாம்; ஏனெனில் இதனால் இரக்கம் வெளிப்படுத்தப்பட்டது, அருளவும்பட்டது. இந்த இரக்கம் மனிதரை இறைவனுக்கு ஏற்புடையோராக மாற்ற வல்லது. கடவுள் தொடக்கம் முதல் தீட்டியிருந்த மீட்புத் திட்டத்தின்படி, மனிதரால், மனிதர் வழியாக, உலகில் நீதியை நிலைநாட்ட வல்லது. கிறிஸ்து அனுபவித்த துன்பம் நம்பிக்கையாளர்களோடு மட்டும் அன்றி, எல்லா மனிதரோடும் சிறப்பான வகையில் பேசுகின்றது. மனித இனத்தோடு அவர் கொண்டிருந்த ஒருமைப்பாட்டின் மேன்மையை இறை நம்பிக்கையற்றோர்கூட அறிந்திட

76. 2 கொரி 5:21.

இயலும். அது போன்றே மனித நலன் மட்டிலும், உண்மை அன்பு மட்டிலும் அவர் கொண்டிருந்த தன்னலமற்ற அர்ப்பணத்தின் இணக்கமான நிறைவையும் அனைவரும் அவரில் கண்டுகொள்ள முடியும். இருப்பினும் பாஸ்கா மறைபொருளின் இறைப் பண்பு இன்னும் ஆழமாகச் செல்கிறது. கல்வாரிமீது நாட்டப்பட்ட *சிலுவை* – எந்தச் சிலுவையில் தொங்கிக்கொண்டு தம் தந்தையோடு அவர் தமது இறுதி உரையாடலை நடத்தினாரோ அந்தச் சிலுவை – கடவுளின் சாயலிலும் உருவிலும் படைக்கப்பட்ட மனிதருக்கு, கடவுளின் நிலையான திட்டத்தின்படி, கொடையாக அருளப்பட்ட *அன்பின் ஆழத்தினின்றே வெளிப்படுகிறது.* கிறிஸ்து வெளிப்படுத்தியுள்ளவாறு பார்க்குமிடத்து, படைத்தவர் இருப்பின் பிறப்பிடம் என்ற நிலையில் மட்டும் கடவுள் உலகோடு தம்மைத் தொடர்புபடுத்திக் கொள்வதில்லை. அவர் தந்தையும் ஆவார். ஆதலால் காணக்கூடிய உலகிலே வாழுமாறு தாம் உருவாக்கிய மனிதரோடு தம்மையே இணைத்துக்கொண்டுள்ள அவர், படைப்போடு தாம் கொண்டுள்ள உறவையும் விஞ்சுகின்ற அளவுக்கு மிக நெருக்கமான முறையில் மனிதரோடு உறவு கொண்டுள்ளார். அன்பு நன்மையை மட்டும் உருவாக்குவதில்லை; தந்தை, மகன், தூய ஆவியாராக விளங்கும் கடவுளுடைய வாழ்விலேயே அது பங்கு அளிக்கிறது; ஏனெனில் அன்பு செய்பவர் தம்மையே கொடுக்க விழைகிறார்.

கல்வாரியில் நாட்டப்பட்ட கிறிஸ்துவின் சிலுவை *வியத்தகு பரிமாற்றத்துக்கு* வழிகோலியது; *மனிதருக்காகக் கடவுள் தம்மையே வியத்தகு முறையில் கையளிக்க அடிகோலியது.* இறை வாழ்வில் பங்குகொள்ள மனிதருக்கு விடுக்கப்படும் *அழைப்பும்* இதில் அடங்கும். தம்மையே கொடுப்பதன் மூலமும், தம்மோடு சேர்த்துப் படைப்பு முழுவதையும் கடவுளுக்கு அளிப்பதன் மூலமும், மனிதர் இறை வாழ்வில் பங்குகொள்ள அழைக்கப்படுகின்றனர். கடவுளின் ஏற்பு மகவு என்னும் முறையில், கடவுளில் விளங்கும் உண்மையிலும் அன்பிலும் பங்குகொள்ள – கடவுளினின்று பிறக்கும் உண்மையிலும் அன்பிலும் பங்குகொள்ள – அழைக்கப்படுகின்றனர். கடவுளின் ஏற்பு மகவு மேன்மைக்கு *என்றும் நிலையான* முறையில் மனிதர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதோடு தொடர்பு உள்ள முறையில்தான் கிறிஸ்துவின் சிலுவை வரலாற்றிலே இடம் பெறுகிறது. ஒரே மகனாகிய இவர் "ஒளியினின்று ஒளியாக, மெய்யங்



கடவுளினின்று மெய்யங் கடவுளாக"[77] வந்தார்; மனித இனத்தோடு – மனிதரோடு – ஒவ்வொரு மனிதரோடும் – *கடவுள் செய்து கொண்ட வியத்தகு உடன்படிக்கைக்கு* முடிவான சான்று பகர வந்தார். படைப்பின் மறைபொருளிலேயே அடங்கியிருக்கும் இந்த உடன்படிக்கை மனித வரலாற்றைப் போல் பழமை மிக்கது. பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட அதே மக்களோடு பல முறை புதுப்பிக்கப்பட்ட இவ் உடன்படிக்கை புதிய, இறுதி உடன்படிக்கையும் ஆகும். ஒரு குறிப்பிட்ட மக்கள் இனத்துக்கோ இஸ்ரயேல் குலத்துக்கோ மட்டும் அன்றி எல்லாருக்குமே – ஒவ்வொரு தனி மனிதருக்குமே – சொந்தமான இப் புதிய உடன்படிக்கை கல்வாரியில் நிறுவப்பட்டது.

கிறிஸ்துவின் மீட்புச் செய்தியினுடையவும் பணியினுடையவும் நிறைவாக ஒரு வகையில் அமையும் சிலுவை நமக்குப் புகட்டும் பாடம் என்ன? சரியாகப் பார்க்குமிடத்து, கிறிஸ்துவின் சிலுவையானது உடன்படிக்கையின் இறைவன் வழங்கிய நிறைவு அன்று; விடியற்காலையில் முதலில் பெண்களும், பின்னர் திருத்தூதர்களும் சிலுவையில் அறையப்பெற்ற கிறிஸ்துவின் கல்லறைக்குச் சென்று, அது வெறுமையாய் இருக்கக் கண்டு மலைத்து நிற்கவே, "அவர் உயிர்த்துவிட்டார்" என்ற செய்தியை முதன்முதல் கேட்டபோதுதான் உடன்படிக்கையின் நிறைவு அறிவிக்கப்பட்டது. அவர்கள் இச் செய்தியை மற்றவர்களுக்குத் திரும்பவும் எடுத்துச் சொன்னார்கள்; உயிர்த்த கிறிஸ்துவுக்குச் சான்று பகன்றார்கள். இருப்பினும் இறைமகனுடைய இந்த மாட்சியில்கூட சிலுவை இடம் பெறுகிறது; சிலுவையில் உயிர்நீத்த மனிதரும் மகனுமாகத் துலங்கியவரைப் பற்றிய மீட்புச் சான்றுரை வாயிலாகச் சிலுவை நம்மோடு பேசுகிறது – *தந்தையாகிய கடவுளைப் பற்றித் தொடர்ந்து நம்மோடு பேசுகிறது – மனிதர் மட்டில் தாம் கொண்டுள்ள என்றுமுள அன்புக்கு முற்றிலும் பற்றுறுதியுடன் இருக்கும் கடவுளைப் பற்றிப் பேசுகிறது;* ஏனெனில் அவர் உலகின்மேல் – எனவே உலகில் உள்ள மனிதர்மீது – "எவ்வளவுக்கு அன்புகூர்ந்தார் என்றால்," தம் மகனில் நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு, அந்த ஒரே மகனையே அளித்தார்.[78] சிலுவையில்

77. நீசே-கான்ஸ்டாண்டிநோபிள் நம்பிக்கை அறிக்கை.

78. யோவா 3:16.

அறையப்பெற்ற திருமகனில் நம்பிக்கை கொள்வது என்பது ‘‘தந்தையைக் காண்பது’’[79] ஆகும்; அன்பு உலகில் நிலவுகிறது; இந்த அன்பு தனிமனிதரையோ மனிதச் சமுதாயத்தையோ உலகையோ பாதிக்கும் எவ் வகைத் தீமையையும்விட அதிக ஆற்றல் வாய்ந்தது என நம்புவதே ஆகும். இத்தகைய அன்பில் நம்பிக்கை கொள்வதும் *இரக்கத்தில் நம்பிக்கை கொள்வதும் ஒன்றே;* ஏனெனில் இரக்கமானது அன்பின் இன்றியமையாப் பண்பு ஆகும். இரக்கமே அன்புக்கு மறு பெயர். மனிதரை ஆட்டிப் படைத்து, அவர்களது இதயத்தின் உள்ளே நுழைந்துவிடுகின்றதும், அவர்களை ‘‘நரகத்தில் அழிக்கவல்ல’’துமான[80] தீமையானது உலகின்கண் உளதாயினும், அன்பின் சிறப்பான வெளிப்பாடாகிய இரக்கம் இத் தீமைக்கு எதிராகத் தோன்றிச் செயலுருப் பெறுகிறது.

## 8. அன்பு சாவைவிட ஆற்றல் வாய்ந்தது; பாவத்தைவிட வலிமை படைத்தது

கல்வாரியில் நாட்டப்பட்ட கிறிஸ்துவின் சிலுவை இறைமகனுக்கே எதிராக எழுந்த தீமையின் வலிமைக்குச் சான்றாக உள்ளது. இவர் எல்லா மனிதருக்குள்ளும் தம் இயல்பிலேயே முற்றிலும் மாசற்றவராகவும் பாவமே அறியாதவராகவும் இவ் உலகுக்கு வந்தபோது, ஆதாமின் கீழ்ப்படியாமையாலும் தொடக்கப் பாவத்தாலும் கறைபடாதவராகவும் விளங்கியபோதிலும், தீமையின் ஆற்றல் இவருக்கு எதிராக எழுந்தது. கிறிஸ்துவில்தான் பாவத்துக்குத் தகுந்த கழுவாய் கிடைத்தது. அவர் தம்மையே பலியாகக் கொடுத்து அந்தப் பலியின் விளைவாக, ‘‘சாவை ஏற்கும் அளவுக்குக்’’[81] கீழ்ப்படிவதன் மூலமாகக் கழுவாய் பெற்றுத் தந்தார். பாவம் அறியாத அவரைக் ‘‘கடவுள் நமக்காகப் பாவநிலை ஏற்கச் செய்தார்.’’[82] மனித வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே பாவத்தோடு தொடர்பு கொண்டிருந்த சாவுக்கும் அவர் கழுவாய் தேடிவிட்டார். பாவம் அறியாத கிறிஸ்து ஒருவரே

79. காண் யோவா 14:9.

80. மத் 10:28.

81. பிலி 2:8.

82. 2 கொரி 5:21.



சாவை முறியடிக்க வல்லவர்.[83] அவர் தமது சாவு என்னும் விலை கொடுத்துச் சாவையே சாகடித்தார். இவ்வாறு, தந்தையோடு ஒரே பொருளான திருமகன் *கிறிஸ்து சிலுவைமீது கடவுளுக்கு முழுக் கழுவாய் செலுத்தியதால்,* அச் சிலுவை *இரக்கத்தின் அடிப்படையான வெளிப்பாடாகவும்* அமைகிறது. இன்னும் சரியாகச் சொல்லப்போனால், மனித வரலாற்றில் தீமைக்கு அடித்தளமாய் அமைகின்ற பாவத்தையும் சாவையுமே எதிர்த்து நிற்கும் அன்பின் வெளிப்பாடாகச் சிலுவை காட்சி அளிக்கிறது.

கடவுள் மனிதர்பால் – குறிப்பாகத் துன்ப துயர நேரங்களில் வருந்துதற்குரிய தமது ஊழ் என மனிதர் கருதுகின்றவற்றின்பால் – காட்டும் கருணையின் உயரிய கருவியாகச் சிலுவை விளங்குகிறது. இவ் உலக வாழ்வில் மனிதருக்கு ஏற்படும் மிகக் கொடிய காயங்களையும் தொட்டுக் குணப்படுத்துகின்ற நிலையான அன்பாகச் சிலுவை மிளிர்கிறது. அன்றொரு நாள் நாசரேத்துத் தொழுகைக்கூடத்தில்[84] கிறிஸ்து முறைப்படுத்தி, பின்னர் திருமுழுக்கு யோவனின் சீடர்களுக்கு[85] எடுத்துரைத்த மீட்புச் செயல்திட்டத்தின் முழு நிறைவாகச் சிலுவை ஒளிர்கிறது. எசாயா இறைவாக்கு நூலில் ஏற்கெனவே எழுதப்பட்டிருந்த கூற்றுக்கு இணங்க,[86] ஏழைகள், துன்புறுவோர், சிறைப்பட்டோர், பார்வையற்றோர், ஒடுக்கப்பட்டோர், பாவிகள் ஆகியோருக்கு இரக்கமிகு அன்பை வெளிப்படுத்துவதில்தான் இச் செயல்திட்டம் அடங்கியிருந்தது. இவ் உலக வாழ்வின்போது மனிதரைப் பாதிக்கும் பல வடிவம் கொண்ட தீமையின் வரம்புகளைப் பாஸ்கா மறைபொருள் மேற்கொண்டுவிட்டது; அதாவது, தீமையின் மிக அடிப்படையான காரணம் பாவமும் சாவுமே என்பதை நாம் புரிந்துகொள்ளச் செய்கிறது கிறிஸ்துவின் சிலுவை. இவ்வாறு நிறைவுக் காலத்தின் ஓர் அடையாளமாகச் சிலுவை திகழ்கிறது. நிறைவுக் கால நிறைவேற்றத்திலும் உலகின் இறுதி மாற்றத்திலும் மட்டுமே, *தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் அனைவருடைய வாழ்விலும் தீமையின் ஆழ்ந்த அடிமூலத்தின்* மேல் அன்பு வெற்றிகொள்ளும்; வாழ்வு, புனிதம், மாட்சிமிகு மறுவாழ்வு முதலியவற்றை அருளும் ஆட்சியை முற்றிலும் முதிர்ச்சி அடைந்த பயனாக வழங்கும். இந்த

83. காண் 1 கொரி 15:54.

84. காண் லூக் 4:18-21.

85. காண் லூக் 7:20-23.

86. காண் எசா 35:5; 61:1-3.

நிறைவுக் கால நிறைவேற்றத்தின் அடித்தளம் ஏற்கெனவே கிறிஸ்துவின் சிலுவையிலும் அவரது இறப்பிலும் அடங்கியுள்ளது. கிறிஸ்து "மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்"[87] என்னும் உண்மை அவரது மீட்புப் பணியின் இறுதி அடையாளமாக அமைகிறது; தீமையின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட உலகில் இரக்கமிகு அன்பு பற்றிய முழு வெளிப்பாட்டையும் நிறைவுக்குக் கொண்டுவரும் அடையாளமாக விளங்குகிறது. அதே நேரத்தில் "புதியதொரு விண்ணகத்தையும் புதியதொரு மண்ணகத்தையும்"[88] முன்னறிவிக்கின்ற அடையாளமாகவும் சிலுவை திகழ்கிறது. அப்பொழுது இறைவன், "அவர்களுடைய கண்ணீர் அனைத்தையும் துடைத்துவிடுவார். இனிமேல் சாவு இராது, துயரம் இராது, அழுகை இராது, துன்பம் இராது; முன்பு இருந்தவை எல்லாம் மறைந்துவிட்டன."[89]

நிறைவுக் கால நிறைவேற்றத்தின்போது இரக்கம் அன்பாக வெளிப்படும். ஆனால் இம்மை வாழ்வில் – பாவத்தினுடையவும் சாவினுடையவும் வரலாறாக விளங்கும் மனித வரலாற்றில் – எல்லாவற்றுக்கும் மேலாக, அன்பு இரக்கமாக வெளிப்பட வேண்டும்; இரக்கத்தின் வடிவிலே அது செயலாக்கப்படவும் வேண்டும். இரக்கத்தின் செயல்திட்டமாக விளங்கும் கிறிஸ்துவின் மீட்புச் செயல்திட்டம் அவருடைய மக்களாகிய திருஅவையின் செயல்திட்டமாக மாறுகிறது. அத் திட்டத்தின் மையத்தில் எப்போதுமே சிலுவை உண்டு; ஏனெனில் சிலுவையில்தான் இரக்கமிகு அன்பின் வெளிப்பாடு தன் சிகரத்தை அடைகிறது. "முன்பு இருந்தவை எல்லாம் மறைந்து"[90] போகும்வரை, புனித யோவானின் திருவெளிப்பாட்டில் காணக்கிடக்கும் கூற்றை நமக்கு நினைவூட்டும் குறிப்புரையாகவும் சிலுவை விளங்குகிறது. "இதோ, நான் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால், நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன்; அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள்."[91] மேலும், *சிலுவையில் அறையப்பெற்ற தம் ஒரே மகன்மீது "இரக்கம்" வைக்குமாறு*

87. 1 கொரி 15:4.
88. திவெ 21:1.
89. திவெ 21:4.
90. காண் திவெ 21:4.
91. திவெ 3:20.



*கடவுள் மனிதரை அழைக்கின்ற கட்டத்தில்*, தமது இரக்கத்தைச் சிறப்பாக வெளிப்படுத்துகிறார்.

சிலுவையில் அறையப்பெற்றவர் என்னும் முறையிலேயே ஒருபோதும் அழியாத வார்த்தையாகக்[92] கிறிஸ்து விளங்குகின்றார். ஒவ்வொரு மனிதரின் இதயக் கதவு அருகில் நின்று தட்டுபவரும் அவரே.[93] மனிதருடைய தன்னுரிமையைக் கட்டுப்படுத்தாமல், அந்தத் தன்னுரிமையினின்று அன்பை வெளிக்கொணர அவர் விரும்புகின்றார். இந்த அன்பு துன்புறும் மானிடமகனோடு மனிதர் கொண்டுள்ள ஒருமைப்பாட்டின் செயலாக மட்டும் அன்று, என்றுமுள தந்தையின் திருமகன் மட்டில் நாம் ஒவ்வொருவரும் காட்டும் ஒரு வகை "இரக்கமாகவும்" அமைகிறது. இவ்வாறு இரக்கம் பெறுகின்ற மனிதர் "இரக்கம் காட்டுபவராகவும்" ஒரு வகையில் மாறுவதால், கிறிஸ்துவினுடைய மீட்புச் செயல்திட்டத்தின் பொருட்டும், சிலுவை வழியாக வெளிப்படுத்தப்பட்ட இரக்கத்தினுடைய வெளிப்பாட்டின் பொருட்டும், மனிதரின் மாண்பு இன்னும் அதிகமாக மதிக்கப்படுமா? இன்னும் சிறப்பாக மேன்மையுறுமா?

சுருங்கக் கூறின், இதுதானே கிறிஸ்துவின் மனநிலை? "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்..."[94] என்று மனிதரைக் குறித்துக் கூறியபோது அவர் கொண்டிருந்த கருத்து இதுதானே? "இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்"[95] என்னும் மலைப்பொழிவுக் கூற்று ஒரு வகையில் நற்செய்தி முழுவதன் தொகுப்பாக – அதிலே பொதிந்து கிடக்கும் *வியத்தகு பரிமாற்றம்* முழுவதன் சுருக்கமாக – விளங்குவதில்லையா? இந்தப் பரிமாற்றம் *மீட்புத் திட்டத்தினுடைய* சட்டமாக – சிக்கலற்ற, வலிமை வாய்ந்த, "எளிதான" சட்டமாக விளங்குகிறது. "மனித இதயம்" ஆற்ற முடிந்ததை ("இரக்கமுடைமை") தொடக்கத்திலிருந்தே எடுத்துக்காட்டும் மேற்குறித்த மலைப்பொழிவுக் கூற்று கடவுளின் ஆழ்ந்த மறைபொருளை அதே கண்ணோட்டத்தோடு காட்டுவதில்லையா? அதாவது தந்தை, மகன், தூய ஆவியார் ஆகியோரிடையே நிலவும் அறியவொண்ணா

92. காண் மத் 24:35.
93. காண் திவெ 3:20.
94. மத் 25:40.
95. மத் 5:7.

ஒன்றிப்பில் அன்பு – நீதியை உள்ளடக்கிய அன்பு – இரக்கமாக உருவெடுக்க, இரக்கமோ நீதியின் நிறைவை வெளிப்படுத்துகிறது என மேற்குறித்த மலைப்பொழிவுக் கூற்று உணர்த்துவதில்லையா?

பாஸ்கா மறைபொருள் என்பது இறைவனின் அறியவொண்ணா மறைபொருளின் வெளிப்பாட்டினுடைய சிகரமாகக் கிறிஸ்து விளங்குவதில் அடங்கும். அவ் வேளையில்தான் "என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும்"[96] என்று மாடி அறையில் கிறிஸ்து மொழிந்த சொற்கள் முற்றிலும் நிறைவேறுகின்றன. மனிதருக்காகத் தந்தை "ஒப்புவித்த"[97] கிறிஸ்து தம் பாடுகளின்போதும், சிலுவையில் தொங்கித் துன்பம் அனுபவித்த வேளையிலும், மனிதரிடமிருந்து அவர் இரக்கம் பெறவில்லை. இருப்பினும் கிறிஸ்துமீதும் அவரில் எல்லா மக்கள்மீதும் தந்தை கொண்டிருந்த அன்பின் நிறைவு உயிர்ப்பிலே வெளிப்படுத்தப்பட்டது. "அவர் இறந்தோரின் கடவுள் அல்ல; மாறாக, வாழ்வோரின் கடவுள்."[98] *உயிர்ப்புக்கு இட்டுச்செல்லும் வழியாகக் கிறிஸ்து சிலுவையை ஏற்றுக்கொண்ட* ஒரே காரணத்தினால், தமது உயிர்ப்பில் *இரக்கமிகு அன்பின் இறைவனை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.* இதன் பொருட்டே நாம் கிறிஸ்துவின் சிலுவை, பாடுகள், இறப்பை நினைவுகூரும்போது, நம் நம்பிக்கையும் எதிர்நோக்கும் உயிர்த்த ஆண்டவரையே மையம் கொண்டுள்ளன; "வாரத்தின் முதல் நாளாகிய அன்று மாலை வேளையில் சீடர்களிடையே மாடி அறையில் வந்து நின்ற அதே கிறிஸ்துவை," – தம் சீடர்கள் மேல் ஊதி, "தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா"[99] என்று உரைத்த கிறிஸ்துவை மையம் கொண்டுள்ளன.

இதோ இறைமகன்! இவரே தமக்குக் காட்டபெற்ற இரக்கத்தைத் தமது உயிர்ப்பில் மிக ஆழமான முறையில் துய்த்தவர்; அதாவது, *சாவைவிட ஆற்றல் வாய்ந்த* தந்தையின் அன்பைச் சுவைத்தவர். இறைமகனாகிய அதே கிறிஸ்துதான் தமது மீட்புப் பணியின் முடிவில் – ஏன், ஒரு வகையில்

96. யோவா 14:9.
97. உரோ 8:32.
98. மாற்கு 12:27.
99. யோவா 20:19-23.



முடிவுக்கு அப்பாலும்கூட – இரக்கத்தினுடையவும் அன்பினுடையவும் வற்றாத ஊற்றாகத் தம்மையே வெளிப்படுத்தியவர். அந்த அன்பு *பாவத்தைவிட வலிமை படைத்தது* எனத் திருஅவையில் நிகழும் மீட்பு வரலாற்றின் பின்னையதொரு கண்ணோட்டத்தில் எக் காலத்துக்கும் நிலையாக உறுதிப்பட வேண்டியிருந்தது. பாஸ்காவாக விளங்கும் கிறிஸ்து இரக்கத்தின் முடிவான அவதாரமாக, அதன் உயிருள்ள அடையாளமாக விளங்குகின்றார்; வரலாற்றைப் பொறுத்த மட்டிலும் நிறைவுக் காலத்தைப் பொறுத்த மட்டிலும் மீட்பின் அடையாளமாக விளங்குகிறார்; இதே உணர்வோடுதான் பாஸ்காக் காலத் திருவழிபாட்டில், "*ஆண்டவரது பேரன்பு என்றென்றும் நிலைத்துள்ளது என்று அறிவிப்பேன்*"[100] என்னும் திருப்பாடல் சொற்களை நாமும் பண்ணிசைக்கின்றோம்.

## 9. இரக்கத்தின் அன்னை

உயிர்ப்பு விழாவின்போது திருஅவை அறிக்கையிடும் மேற்கூறிய பாடல், சக்கரியாவின் மனைவியான எலிசபெத்தை மரியா சந்தித்த வேளையில், "தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்"[101] என்று பாடிய சொற்களை எதிரொலிக்கின்றது. வாக்கு மனிதரான நொடியிலிருந்தே மீட்பு வரலாற்றில் நிகழ்ந்த புதியதொரு திருப்பத்தை இச் சொற்கள் வெளிப்படுத்துகின்றன. கிறிஸ்துவின் உயிர்ப்புக்குப் பின்னர் இப் புதிய திருப்பம் வரலாற்றுத்தன்மையும் அதே நேரத்தில் நிறைவுக் காலப் பண்பும் கொண்டதாய் மாறுகிறது. அந் நாள் முதல் பரந்து விரிந்த மனித இனம் என்னும் குடும்பத்தில் பல புதிய தனிமனிதத் தலைமுறைகள் நாளும் வளர்ந்துகொண்டும் தொடர்ந்து வந்துகொண்டும் இருக்கின்றன. அது போலவே சிலுவை–உயிர்ப்பின் அடையாளத்தால் பொறிக்கப்பட்டு, கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள் என்னும் அடையாளத்தால் "முத்திரையிடப்பட்ட"[102] இறைமக்களிலும் புதிய தலைமுறைகள் தொடர்ந்து தோன்றிய வண்ணமாய் இருக்கின்றன. தம் உறவினருடைய வீட்டு வாயிலை அடைந்தபோது, "தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி

100. திபா 89:2.
101. லூக் 1:50.
102. காண் 2 கொரி 1:21-22.

வருகிறார்''[103] என்று மரியா அறிக்கையிட்ட இரக்கத்தின் முழுமையான வெளிப்பாடு அங்கே நிகழ்கிறது.

வேறு மனிதர் யாரும் பெற்றிராத அளவுக்குத் தனிப்பட்ட, ஒப்பற்ற வகையில் மரியா இரக்கம் பெற்றார். இன்னும் ஒப்பற்ற முறையில் தமது இதயப் பலியின் மூலம் இரக்கத்தின் வெளிப்பாட்டில் தமது பங்கை நிறைவேற்றினார். அந்தப் பலி அவருடைய திருமகனின் சிலுவையோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டது. அந்தச் சிலுவையின் அடியில்தான் கல்வாரி மலையில் அவர் பின்னர் நிற்கவேண்டியிருந்தது. இரக்கத்தின் வெளிப்பாட்டில் அவரது பலி தனித்தன்மை வாய்ந்த பங்கு கொண்டது. அது இறைவன் தமது அன்புக்குக் காட்டிய முழுப் பற்றுறுதியின் ஒரு பங்கு; தொடக்கமும் முடிவும் அற்ற காலம் தொட்டு விரும்பி, காலம் கனிந்தபோது மனிதரோடு, மக்களோடு, மனித இனத்தோடு அவர் செய்துகொண்ட உடன்படிக்கை மட்டில் அவர் கொண்டிருந்த பற்றுறுதியில் ஒரு பங்கு; சிலுவை வழியாய் முடிவாக நிறைவேற்றப்பெற்ற வெளிப்பாட்டில் ஒரு பங்கு எனலாம். *சிலுவையின் மறைபொருளை இந்த அளவுக்கு வேறு யாரும் துய்த்திருக்க முடியாது; ஏனெனில் சிலுவையில் அறையப்பட்டவரின் அன்னை என்ற முறையில்* தெய்வீக, இயல்பு கடந்த, நீதிக்கும் அன்புக்கும் இடையே நிகழ்ந்த அதிர்ச்சி தரும் சந்திப்பை – இரக்கத்துக்கும் நீதிக்கும் இடையே ஏற்பட்ட ''அரவணைப்பை'' அவர் அனுபவித்தார்.[104] மரியாவைப் போன்று வேறு யாரும் இம் மறைபொருளைத் தம் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டது கிடையாது. திருமகனின் இறப்பினால் கல்வாரியில் விளைந்த மீட்பின் உண்மையான இறைப் பண்பைத் தமது தாய்க்குரிய இதயப் பலியோடு சேர்த்து – தமது உறுதியான ''ஆகட்டும்'' என்ற கீழ்ப்படிதலோடு சேர்த்து – இம் மறைபொருளைத் தம் உள்ளத்தில் ஏற்றார்.

எனவே மரியா மட்டுமே *இறைவனின் இரக்கம் என்னும் மறைபொருளை மிக ஆழமாக உணர்ந்தவர்.* அவர் அதன் விலை என்ன என்று அறிவார்; அதன் மேன்மையை உணர்வார். இப் பொருளில்தான் *இரக்கத்தின் அன்னை* என்றும், இரக்கத்தின் தலைவி என்றும், இறை இரக்கத்தின் தாய் என்றும் அவரை அழைக்கின்றோம். இந்தச் சிறப்புப் பெயர்

103. லூக் 1:50.

104. காண் திபா 85:11.



ஒவ்வொன்றுக்கும் ஆழ்ந்த இறையியல் பொருள் உண்டு; ஏனெனில் அவருடைய உள்ளம் மட்டும் அன்று, அவருடைய ஆளுமை முழுவதுமே எப்படிச் சிறப்பான முறையில் அணியமாக்கப்பட்டது என்பதை இப் பெயர்கள் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு இரக்கத்தை அவரால் உய்த்துணர முடிந்தது; முதலில் இஸ்ரயேலுக்கும் பின்னர் ஒவ்வொரு தனிமனிதருக்கும் இறுதியில் மனித இனம் முழுவதுக்குமே ஏற்பட்ட சிக்கலான நிகழ்ச்சிகள் வாயிலாக இரக்கத்தை அவரால் கண்டுணர முடிந்தது. இந்த இரக்கத்தில்தான் மூவொரு இறைவனின் என்றுமுள திட்டப்படி மக்கள் ''தலைமுறை தலைமுறையாகப்''[105] பங்குகொள்ளுகின்றார்கள்.

இறைவனின் அன்னைக்கு நாம் சூட்டும் இச் சிறப்புப் பெயர்கள், சிலுவையில் அறையப்பெற்று உயிர்த்தவரின் அன்னையாகவே மரியாவைச் சிறப்பாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. *ஒப்பற்ற வகையில் இரக்கம் பெற்றிருந்த அவர்,* இன்னும் ஒப்பற்ற முறையில் *இரக்கம் பெறத் தகுதி பெற்றார்;* தமது உலக வாழ்க்கை முழுவதும், குறிப்பாகத் தம் திருமகனின் சிலுவை அடியில் நின்றபோது அவர் இரக்கம் பெற வேண்டியவர் ஆனார். தம் மகனின் மீட்புப் பணியில் மறைமுகமாக, ஆனால் ஈடு இணையற்ற முறையில் பங்கு கொண்டதனால் கிறிஸ்து வெளிப்படுத்தவிருந்த அன்பை மக்களுக்குச் சிறப்பான முறையில் வழங்கும் பொருட்டு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது; துன்புறுவோர், எளியோர், தன்னுரிமை இழந்தோர், பார்வையற்றோர், ஒடுக்கப்பட்டோர், பாவிகள் ஆகியோர் நடுவே கட்புலனாகும் வண்ணம் கிறிஸ்து வெளிப்படுத்தவிருந்த அன்பை வழங்கும் பொருட்டு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. மேற்கூறப்பட்டவர்களைப் பற்றித்தான் கிறிஸ்து எசாயாவின் இறைவாக்கை மேற்கோள் காட்டி, முதலில் நாசரேத்துத் தொழுகைக்கூடத்திலும்,[106] பின்னர் திருமுழுக்கு யோவானுடைய சீடர்களின் கேள்விகளுக்குப் பதில் இறுத்த வேளையிலும்[107] குறிப்பிட்டார்.

105. லூக் 1:50.

106. காண் லூக் 4:18.

107. காண் லூக் 7:22.

இத்தகைய ''இரக்கமிகு'' அன்பு ஒழுக்கம், உடல் சார்ந்த தீமையின் நடுவில் சிறப்பாக வெளிப்படுகிறது. சிலுவையில் அறையப்பெற்று உயிர்த்தெழுந்தவரின் அன்னையினுடைய உள்ளம் இத்தகைய அன்பில்தான் தனிப்பட்ட முறையிலும் ஒப்பற்ற வகையிலும் பங்கு கொண்டது. அவரில், அவர் வழியாக இந்த அன்பு திருஅவையினுடையவும் மனித இனத்தினுடையவும் வரலாற்றில் தொடர்ந்து வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. இவ் வெளிப்பாடு மிகவும் வளமுடையது; ஏனெனில் இறைவனின் அன்னையைப் பொறுத்த மட்டில், அவரது தாய்க்குரிய உள்ளத்தின் தனித்தன்மையை இது அடிப்படையாகக் கொண்டது; அவருடைய தனிப்பட்ட *கூருணர்வுத் திறத்தை* அடிப்படையாகக் கொண்டது; *ஓர் அன்னையின் இரக்கமிகு அன்பை மிக எளிதாக ஏற்கக்கூடிய* அனைவரையும் சென்றடைய வல்ல அவரது தனித் தகுதியை இது அடிப்படையாகக் கொண்டது. கிறிஸ்தவ நெறியில் காணப்படும் உயிர் அளிக்கும் பெரிய மறைபொருள்களில் இதுவும் ஒன்றாகும். இம் மறைபொருள் மனிதராதல் என்னும் மறைபொருளோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டது.

''அருளின் ஒழுங்குமுறையில் மரியாவின் தாய்மை'' பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் பின்வருமாறு விளக்குகிறது: ''வானவர் தூது சொல்ல வந்த நேரத்தில் நம்பிக்கையுடன் தாம் அளித்த இசைவைக் கன்னி மரியா சிலுவைவரை தயங்காது காத்துவந்தார். இவ்வாறு இசைவளித்த நேரத்திலிருந்து, தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் முடிவில்லா நிறைவு பெறும்வரை அருள்திட்டத்தின்படி மரியாவின் தாய்மையும் தடை இன்றி நீடிக்கும்; ஏனெனில், விண்ணேற்றத்திற்குப் பின்பும் இம் மீட்புப் பணியை அவர் விட்டுவிடவில்லை. மாறாக, பல விதங்களில் பரிந்துபேசி நிலையான நிறைவாழ்வு அடைய நமக்குத் தேவையான கொடைகளை எப்போதும் பெற்றுத் தருகின்றார். பல இன்னல் இடர்ப்பாடுகளுக்கு இடையே இன்னும் பயணம் செய்துகொண்டிருக்கும் தம் மகனின் சகோதரர் சகோதரிகளை, அவர்கள் தங்கள் மகிழ்ச்சி நிறை தாய்நாடு வந்துசேரும்வரை, தாய்க்குரிய அன்போடு காத்துவருகின்றார்.''[108]

108. *திருஅவை* பற்றிய கோட்பாட்டு விளக்கம், 62:அ. ஆ. ந. 57 (1965), பக். 63.



# VI. ''தலைமுறை தலைமுறையாய் உள்ள இரக்கம்''

## 10. நமது தலைமுறை பற்றி ஓர் உருவகம்

இறையச்சத்தால் வழிநடத்தப்படத் தங்களையே கையளிப்போர்க்குத் ''தலைமுறை தலைமுறையாய்க்'' கிடைக்கும் இரக்கத்தை இறைவனின் அன்னை ஏத்திப் போற்றினார். அவர் குறிப்பிட்ட தலைமுறையில் நாமும் உள்ளடக்கம் என நம்ப நமக்கு எல்லா உரிமையும் உண்டு. மரியாவின் அப் *புகழ்ப்பா* இறைவாக்குப் பொருள் கொண்டது. இஸ்ரயேல் மக்களுடைய இறந்த காலத்துக்கு மட்டும் அன்று, உலகில் வாழும் இறைமக்களின் எதிர்காலம் முழுவதுக்கும் அது பொருந்தும். இப்போது இவ் உலகில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் அனைவரும் – இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தொடக்கக் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கின்றோம் என்பதை உணர்ந்துள்ள நாம் அனைவரும் – வரலாற்றில் ஏற்பட்டுவரும் *திருப்பத்தை மிக ஆழமாக உணர்ந்துவரும்* நாம் அனைவரும் – இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவர்களே.

தனிச் சலுகை பெற்ற நிலையில் தாம் இருப்பதாக இன்றைய தலைமுறையினர் உணர்ந்துள்ளனர். பத்து ஆண்டுகளுக்கு முன்னர்வரை, நாம் கனவிலும் கண்டிராத எண்ணற்ற சாத்தியக்கூறுகளை முன்னேற்றம் நமக்கு வழங்கியுள்ளது. மனிதருடைய படைக்கும் செயல், அறிவுத் திறன், உழைப்பு முதலியன அறிவியல் துறையிலும் தொழில்நுட்பத் துறையிலும் மனிதரின் சமூக–பண்பாட்டு வாழ்விலும் பல பெரிய மாற்றங்களைத் தோற்றுவித்துள்ளன. இயற்கைமீது தாம் கொண்டுள்ள அதிகாரத்தை மனிதர் விரிவுபடுத்திக்கொண்டே செல்கின்றனர்; சமூக நடத்தை சார்ந்த விதிகள் பற்றி மிக ஆழமான அறிவு பெற்றுள்ளனர். தனிமனிதர்கள் நடுவிலும் நாடுகளுக்கு இடையேயும் நிலவும் இடையூறுகளும் இடைவெளிகளும் மறைந்து வருவதை அல்லது குறைந்து வருவதைக் காண்கின்றனர்; பொதுவான கூறுகள் பற்றி வளர்ந்துவரும் உணர்வு, மனித இனத்தின் ஒற்றுமை பற்றிய

தெளிவான அறிவு, உண்மையான ஒருமைப்பாட்டின் அடிப்படையில் ஒருவர் மற்றவரைச் சார்ந்து வாழும் தன்மை, செயற்கையான நிலவியல் பிரிவுகள், நாட்டு எல்லைகள், இன வேறுபாடுகள் முதலியவற்றைக் கடந்து, தம் சகோதரர் சகோதரிகளோடு உறவு வைத்துக்கொள்வதற்கான விருப்பம், சாத்தியக்கூறு முதலியன வழியாக, மேற்கூறப்பட்ட ஒன்றிப்பு உணர்வு வளர்வதைப் பார்க்கின்றனர். அறிவியல் வளர்ச்சியும் தொழில்நுட்ப முன்னேற்றமும் பருப்பொருள் சார்ந்த புதுப் புது நலன்களை மட்டும் அல்ல, பரந்த அறிவுப் பங்கீட்டையும் உருவாக்க முடியும் என்பதைக் குறிப்பாக இன்றைய இளைஞர்கள் அறிவார்கள். எடுத்துக்காட்டாகச் செய்தித் தளம், புள்ளிவிவரப் பிரிவு முதலியவற்றில் ஏற்பட்டுள்ள வியத்தகு முன்னேற்றமானது மனிதருடைய படைப்பாற்றலை மேலும் வளர்க்கும்; பிற நாட்டு மக்களின் அறிவுக் கருவூலத்தையும் பண்பாட்டுச் செல்வங்களையும் அறிந்திட வாய்ப்பு அளிக்கும். புதிய சமூகத் தொடர்பு ஊடக உத்திகள் நிகழ்ச்சிகளில் பெரும் பங்கு ஏற்க உதவும்; பரவலான கருத்துப் பரிமாற்றங்களை உருவாக்கும் உயிரியல், உளவியல், மனிதச் சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய ஆய்வுத் துறை சார்ந்த சாதனைகள் முதலியன மனிதரின் இருப்பு நிலை பற்றிய ஆழ்ந்த உண்மைகளை அவர்கள் இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ள அவர்களுக்குத் துணை செய்யும். இந்த முன்னேற்றம் பெரும்பாலும் தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளின் தனிச் சலுகையாகவே இன்னும் இருந்துகொண்டு வருகிறது என்பது உண்மையே. ஆயினும் எல்லா மக்களும் நாடுகளுமே இதனால் பயன் அடைய வாய்ப்பு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. இது வெறும் *கற்பனை வேதாந்தம்* அன்று; உண்மையான அரசியல் நாட்டம் இருக்குமாயின், மேற்கூறிய பயன் கைகூடும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

இவற்றோடு சேர்ந்த – ஏன், இவற்றிற்கு நடுவிலேயே நிலவுகின்ற – இடர்ப்பாடுகளும் உண்டு. எங்கு வளர்ச்சி இருக்கின்றதோ அங்கெல்லாம் இவை கூடவே இருக்கும். தாம் கொடுக்க வேண்டியது என்று மனிதர் அறிந்துள்ள ஆழ்ந்த மறுமொழி தொடர்பாக அமைதியின்மையும் ஆற்றலற்ற தன்மையும் நிலவுகின்றன. இன்றைய உலக வரைபடத்தில் இருள் படர்ந்த பகுதிகளும் சமனற்ற நிலைகளும் காணக்கிடக்கின்றன. இவை எப்போதுமே மேலெழுந்தவாரியானவை மட்டும் அல்ல. *இன்றைய உலகில் திருஅவை* பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் வழங்கிய அருள்பணிக் கொள்கை விளக்கம் மட்டுமே இன்றையத் தலைமுறையின் வாழ்வு பற்றி ஆய்கிறது எனக் கூற முடியாது; எனினும், இவ் ஏடு தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்பதில் ஐயமில்லை. அதில் காணப்படும் வாசகம் வருமாறு: "இன்று உலகை வருத்தும் முரண்பாடுகள் உண்மையிலேயே *மனிதரின் இதயத்தினுள் வேரூன்றி நிற்கும் இன்னும் மிகுதியான ஒரு முரண்பாட்டின்* எதிரொலியே. ஏனெனில், மனிதருக்குள்ளேயே பல கூறுகள் ஒன்றையொன்று எதிர்த்து நிற்கின்றன. படைக்கப்பட்டவர் என்ற முறையில் பல விதங்களில் தாம் வரம்பிற்குட்பட்டவர் என மனிதர் காண்கின்றனர் ஒரு புறம். மறு புறமோ தம்முடைய நாட்டங்களில் வரம்பற்றவர்களாகவும் உயர்ந்ததொரு வாழ்விற்கு அழைக்கப்பட்டவர்களாகவும் தாம் இருப்பதை உணர்கின்றனர். பற்பல கவர்ச்சிகளால் ஈர்க்கப்படும் மனிதர் அவற்றில் சிலவற்றைத் தேர்ந்துகொள்ளவும் சிலவற்றை விட்டுவிடவும் வேண்டியவராகின்றனர். மேலும், வலுவற்றவரும் பாவியருமாகிய அவர்கள் பல தடவைகளிலும் தாம் விரும்பாததைச் செய்கின்றனர்; செய்ய விரும்புவதைச் செய்யத் தவறுகின்றனர். எனவே, தம்மிலே மனிதர் பிளவுபட்டு நிற்கின்றனர்; இப்பிளவுகளிலிருந்துதான் சமூகத்தில் பல பெரிய முரண்பாடுகள் எழுகின்றன."[109]

இக் கொள்கை விளக்கத்தினுடைய தொடக்க விளக்கவுரையின் முடிவில் பின்வருமாறு நாம் படிக்கிறோம்: "...உலகத்தின் இன்றைய மாற்ற வளர்ச்சியினூடே மிகவும் அடிப்படையான கேள்விகளை எழுப்புவோர், அல்லது அக் கேள்விகளைப் புதிய முறையிலே கூர்மையோடு உணர்வோர் எண்ணிக்கையில் பெருகி வருகின்றனர்: மனிதர் யார்? எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்ட பின்னும் *தொடர்ந்து நீடிக்கின்ற துன்பம், தீமை, சாவு இவற்றின் பொருள் யாது?* இவ்வளவு பாடுபட்டுப் பெற்ற வெற்றிகளின் பயன் என்ன?"[110]



---

109. *இன்றைய உலகில் திருஅவை* எனும் அருள்பணிக் கொள்கை விளக்கம், 10:அ. ஆ. ந 58 (1966), பக். 1032.

110. *இன்றைய உலகில் திருஅவை* எனும் அருள்பணிக் கொள்கை விளக்கம், 10:அ. ஆ. ந. 58 (1966), பக். 1032.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடந்து முடிந்து பதினைந்து ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்த இடைக் காலத்திலாவது நமது காலக்கட்டத்தின் பண்புகளாக விளங்கும் அழுத்தநிலைகளும் அச்சுறுத்தல்களும் குறைந்துள்ளன எனக் கூற முடியுமா? அப்படித் தோன்றவில்லை. மாறாக, இச் சங்க ஏடு மேற்கூறிய அழுத்தநிலைகளையும் அச்சுறுத்தல்களையும் பொதுப்படையாக மட்டும் எடுத்துக்கூறுகிறதே அன்றி, அவற்றுள் புதைந்து கிடக்கும் ஆபத்தை எல்லாம் தெளிவாக வெளிக்கொணரவில்லை. ஆனால் மேற்கூறிய அழுத்தநிலைகளும் அச்சுறுத்தல்களும் கடந்த ஆண்டுகளில் அதிகத் தெளிவோடு வெளிச்சத்துக்கு வந்துவிட்டதிலிருந்து, இந்த ஆபத்தை வேறு விதத்தில் உறுதிப்படுத்திவிட்டன; கடந்த காலத்தில் வெளிப்பட்ட போலியான எண்ணங்களை இன்னும் தொடர்ந்து நாம் பேணிவர அவை அனுமதிப்பதில்லை.

## 11. அமைதியின்மைக்கான காரணங்கள்

இவ்வாறு, அச்சுறுத்தலின் பிடியில் இருக்கிறோம் என்னும் உணர்வு நாம் வாழும் இவ் உலகில் வளர்ந்துகொண்டே போகிறது. *மனிதரின் மீட்பர்* என்னும் சுற்றுமடலில் நான் குறிப்பிட்டுள்ளது போன்று, நாளும் பெருகிவரும் இந்த உள்ளார்ந்த அச்சமானது திரண்டுவரும் ஒரு மோதலுக்கான அறிகுறியே. இன்றைய அணு ஆயுதச் சேமிப்பைக் கண்முன் வைத்து நோக்கும்போது, இம் மோதல் மனித இனத்தின் ஒரு பகுதியைத் தற்கொலைக்குத் தள்ளிவிடும் என்றே தோன்றுகின்றது. படைத்துறை சார்ந்த தொழில் நுட்பவியல் வழங்குகின்ற வழிவகைகளைக் கொண்டு, மனிதர் மனிதருக்குச் செய்யக்கூடிய தீங்குகளை மட்டும் பொறுத்தது அன்று இந்த அச்சுறுத்தல்; இது இயற்பொருள்வாதக் கொள்கை கொண்ட சமுதாயத்தால் உருவாக்கப்படும் வேறு பல ஆபத்துகளையும் உள்ளடக்கும்; ஏனெனில் எவ்வளவுதான் மனித நலக் கொள்கை உடைய அறிக்கைகளை வெளியிட்டாலும், ஆள்களைவிடப் பொருள்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றது இச் சமுதாயம். ஆகையால் அச்சம் இன்றைய மனிதரை ஆட்டிப்படைக்கின்றது; இத்தகைய சமுதாயத்தால் கண்டுபிடிக்கப்பட்ட வழிவகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் தனிமனிதர், சூழ்நிலைகள்,



குழுக்கள், சமுதாயங்கள், நாடுகள் முதலியன *தங்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் பிற தனிமனிதர், சூழ்நிலைகள், சமுதாயங்களுக்குப் பலியாக நேரிடலாம்* என அவர்கள் அஞ்சுகிறார்கள். இந்த நூற்றாண்டின் வரலாற்றில் இதற்கு எண்ணற்ற எடுத்துக்காட்டுகள் உள்ளன. மனிதரை முழுமையாகக் கண்முன் கொண்டு – அதாவது அவர்களின் உடல், அருள்வாழ்வு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கி – மனித உரிமைகள் பற்றிப் பல அறிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் பற்றி மேற்கூறப்பட்ட எடுத்துக்காட்டுகள் இறந்த காலத்தை மட்டுமே சார்ந்தன எனக் கூறிவிட முடியாது.

தமது உள்ளார்ந்த தன்னுரிமை – தாம் உறுதியாக நம்பும் உண்மையை எடுத்துரைக்கக்கூடிய வாய்ப்பு – தாம் அறிக்கையிடும் நம்பிக்கை – நேரிய வழியைப் பின்பற்றுமாறு சொல்லும் தமது மனச்சான்றின் குரலுக்குக் கீழ்ப்படியக்கூடிய ஆற்றல் முதலியவற்றைத் தம்மிடமிருந்து பறிக்க முயலும் அடக்குமுறைக்குப் பலியாவது பற்றி மனிதர் அஞ்சுவது முறையே. இன்றைய சமுதாயத்தின் கைவசம் உள்ள தொழில்நுட்பக் கருவிகள் பின்வரும் சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளன: ஒன்று, படைத்துறை மோதலால் சமுதாயம் தன்னையே அழித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு; மற்றொன்று, தேவையான தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டிருப்பதோடு, எவ் வகை மனச்சாட்சியின் உறுத்தலும் இன்றி அவற்றைப் பயன்படுத்த அணியமாய் இருப்போருக்கு ஏதாவது ஒரு காரணத்தின் பொருட்டுத் *தனிமனிதர்கள், சூழ்நிலைகள்*, சமுதாயங்கள், நாடுகள் முதலியவை தொல்லையாக அமைந்துவிட்டால், அவற்றை "அமைதியாக"த் *தமக்கு அடிமையாக்கிக்கொள்ளும் வாய்ப்பு*. இதற்குச் சான்று, அதிகாரத்தில் இருப்போர் தங்கள் ஆதிக்கம், அரசியல் அடக்குமுறை முதலியவற்றை நிலைநாட்ட, திட்டமிட்டே இன்றும் தொடர்ந்து செய்துகொண்டுவரும் சித்திரவதை ஒன்றே போதும். இவ் அதிகாரிகளுக்குக்கீழ் பணிபுரிவோரும் எந்தவிதத் தயக்கமும் இன்றித் துணிச்சலுடன் சித்திரவதையைப் பயன்படுத்துகின்றனர்.

எனவே உயிரை மாய்க்கும் அச்சுறுத்தல் பற்றிய விழிப்புணர்வோடு இன்னும் மிகுதியான அழிவைக் கொணரவல்ல வேறோர் அச்சுறுத்தல் பற்றிய விழிப்புணர்வும் கூடவே வளர்ந்து வருகிறது. பின்னையது மனிதருக்கு இன்றியமையாக் கூறுகளை – அதாவது மனிதரின் மாண்பு, உண்மையையும் தன்னுரிமையையும் கொண்டிருக்க அவர்களுக்கு உள்ள உரிமை முதலியவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டவற்றை – அழிக்க வல்லது.

இத்தகைய அச்சுறுத்தல்கள் நிகழும் *பின்னணியைப்* பார்த்தோம் என்றால், அது மனிதரை வாட்டும் மிகப் பெரிய *உள உறுத்தலாகும்.* அதாவது, ஒரு புறம், செல்வத்தைக் குவித்து வைத்துள்ள மனிதர்களும் மக்கள் சமுதாயங்களும் வளமை கொண்டு, பொருள் நுகர்வுக்கும் இன்ப வாழ்வுக்கும் அடிமைகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மறு புறம், அதே மனிதக் குடும்பத்தில் தனிமனிதர்களும் மக்கள் குழுக்களும் *பசி பட்டினியால் வாடி வதங்கிக்கொண்டிருக்கிறார்கள்.* பசி பொறுக்காது, தங்கள் தாயின் கண் முன்னாலேயே மடிந்துவிழும் குழந்தைகளும் இல்லாமல் இல்லை! வறுமை, பற்றாக்குறை, வளர்ச்சியற்ற நிலை முதலியன தாண்டவமாடும் பெரு நிலப் பகுதிகள் உலகின் வெவ்வேறு பாகங்களிலும் வெவ்வேறு சமூகப் பொருளாதார அமைப்புகளிலும் இன்னும் உள்ளன. இது உலகு அறிந்த உண்மை. தனிமனிதர்கள் நடுவிலும் நாடுகளுக்கு நடுவிலும் *ஏற்றத்தாழ்வுகள் இன்றும் நிலவி வருவது* மட்டும் இன்றி, அவை வளரவும் செய்கின்றன. பணக்காரர்களும் செல்வத்தில் புரள்வோரும் ஒரு புறம் இருக்க, மறு புறம் வறுமையில் உழன்று, இழிநிலையால் இன்னலுற்று, பெரும்பாலும் பட்டினியால் பலர் மடிந்துகொண்டிருக்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கோடிக் கணக்கில் பெருகிக்கொண்டே செல்கிறது. இதனால் மனிதர்களின் மன அமைதியின்மை இன்னும் ஆழமாகிட நேரிடுகிறது. இன்றைய பொருளாதாரத் துறையிலும், இயற்பொருள்வாதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட நாகரிகத்திலும் அடிப்படையான ஒரு குறைபாடு – இல்லை, பல குறைபாடுகள் – ஏன், குறைபாடு கொண்ட ஓர் அமைப்பே உள்ளது என்பது வெள்ளிடை மலை. இதன் பொருட்டே மேற்கூறிய அடிப்படையான சூழல்களினின்று விடுபட முடியாத நிலையில் மனிதக் குடும்பம் தவித்துக்கொண்டிருக்கிறது.



இவ்வாறு தோற்றம் அளிக்கும் உலகில் உடல் கேடும் ஒழுக்கக்கேடும் மலிந்துள்ளன. இதனால் முரண்பாடுகளாலும் அழுத்தநிலைகளாலும் பாதிக்கப்பட்ட ஓர் உலகமாக அது காட்சி அளிக்கிறது. அதே நேரத்தில் மனிதச் சுதந்திரம், மனச்சான்று, சமயம் முதலியவற்றைப் பாதிக்கக்கூடிய அச்சுறுத்தல்கள் நிறைந்த உலகமாகவும் அது விளங்குகிறது. இன்றைய மனிதரின் அமைதியின்மைக்குக் காரணம் உலகின் இன்றைய நிலையே என்றால் அது மிகை ஆகாது. வசதியற்றவர்கள் அல்லது ஒடுக்கப்பட்டவர்கள் மட்டும் இந்த அமைதியின்மைக்கு ஆளாவதில்லை. செல்வம், முன்னேற்றம், அதிகாரம் முதலியவற்றைத் துய்ப்போருமே அமைதியின்மையை அனுபவிக்க நேரிடுகிறது. இந்த அமைதியின்மைக்கான காரணங்களைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யும் மக்களுக்குக் குறைவு இல்லை. தொழில்நுட்பத் துறை, செல்வம், அதிகாரம் முதலியன வழங்கும் தற்காலிக வழிமுறைகளைக் கொண்டு அமைதியின்மையை எதிர்த்துப் போராட முயல்வோருக்கும் குறைவு இல்லை. ஆயினும் இந்த அமைதியின்மை மனிதருடைய உள்ளத்தின் ஆழத்தில் தோய்ந்து கிடக்கும் ஒன்றாக இருக்கின்றது; *தற்காலிக வழிமுறை எதையும்விட வலிமை வாய்ந்ததாய் உள்ளது.* இரண்டாம் வத்திக்கான் சங்கம் பகுப்பாய்வு செய்து சரியாகக் குறித்துக் காட்டுவது போன்று, இந்த அமைதியின்மை மனித வாழ்வின் அடிப்படையையே பாதித்து நிற்கும் ஆழ்ந்த பிரச்சினைகளோடு நெருங்கிய தொடர்பு உடையது; மனிதருடைய இவ் உலக வாழ்வின் உட்பொருளோடு இணைந்து பிணைந்திருப்பது; ஏன், மனிதருடையவும் முழு மனித இனத்தினுடையவும் எதிர்காலத்தையே பாதித்து நிற்பது. இத்தகைய அமைதியின்மையைப் போக்கிட முடிவான தீர்வுகள் தேவை. இத் தீர்வுகளைக் காண மனித இனம் இன்று முன்வருவதுபோல் தெரிகிறது.

## 12. நீதி மட்டும் போதுமா?

இன்றைய உலகில் *நீதி பற்றிய உணர்வு* பெரும் அளவில் புத்துயிர் பெற்று வருகிறது என்பதைக் கண்டுகொள்வது அவ்வளவு கடினம் அன்று. இத்தகைய நீதி பற்றிய உணர்வு தனிமனிதர்களுக்கு இடையே – சமூகக் குழுக்களுக்கு இடையே – ''வகுப்புக''ளுக்கு இடையே – தனி நாடுகளுக்கு இடையே – தனி மாநிலங்களுக்கு இடையே – இறுதியாக முழு அரசியல்

அமைப்புகளுக்கு இடையே – ஏன், "உலகங்க"ளுக்கு இடையே நிலவ வேண்டிய உறவில் நீதிக்கு முரணாக அமையும் அனைத்தையும் சுட்டிக்காட்டுகிறது என்பதில் ஐயம் இல்லை. இந்த ஆழ்ந்த, பன்முகச் சிந்தனைப் போக்கின் அடித்தளமாக நீதியை வைத்துப் போற்றுகிறது இன்றைய மனித மனச்சான்று. இந்தப் போக்கு, உலகில் பரவியுள்ள அழுத்தநிலைகளும் போராட்டங்களும் ஒழுக்க நெறி சார்ந்தனவே எனப் பறைசாற்றுகின்றது.

எல்லா வகையிலும் நீதியான முறையில் அமையும் வாழ்க்கையின் மட்டில் இக் கால *மக்கள் கொண்டுள்ள ஆழ்ந்த, ஆர்வம் மிக்க வேட்கையையே திருஅவையும் கொண்டுள்ளது.* மக்களுடையவும் சமுதாயத்தினுடையவும் வாழ்க்கை கோருகின்ற நீதியின் பல்வேறு பண்புகள் பற்றி ஆய்ந்திடவும் திருஅவை தவறுவதில்லை. சென்ற நூற்றாண்டில் பெரும் அளவு வளர்ச்சி அடைந்த கத்தோலிக்கச் சமூகக் கோட்பாடு இவ் உண்மையை உறுதிப்படுத்துகிறது. நீதி பற்றிய மனித மனச்சான்றின் பயிற்சியும் உருவாக்கமும் மேற்கூறிய படிப்பினையினின்றே எழுகின்றன. இதே அடிப்படையில் தனியார் முயற்சிகளும், குறிப்பாகப் பொதுநிலையினரின் திருத்தூதுப் பணி என்னும் துறையில் மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட முயற்சிகளும் பெருகி வருகின்றன.

இருப்பினும் நீதியின் அடிப்படையில் உருவாகின்ற செயல்திட்டங்கள் தனிமனிதரிடையேயும் குழுக்களிடையேயும் மனிதச் சமுதாயங்களுக்கு இடையேயும் பெரும்பாலும் நீதிக்குத் துணை போவதற்குப் பதிலாக, *நடைமுறையில் நீதியின்று பிறழ்ந்துவிடுகின்றன* என்பதைக் கண்டுகொள்வது அவ்வளவு கடினம் அன்று. இச் செயல்திட்டங்கள் *நீதியை நிலைநாட்டுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தாலும்,* அழிவுச் சக்திகளாகிய வன்மம், பகைமை, ஏன் கொடுமையும்கூட நீதி தலை தூக்கா வண்ணம் பார்த்துக்கொள்ளுகின்றன என்பது பட்டறிந்த உண்மை. இத்தகைய கட்டங்களில் பகைவரைப் பூண்டோடு அழித்திட – அவர்தம் தன்னுரிமையைக் கட்டுப்படுத்திட – தம்மையே முற்றிலும் சார்ந்து நிற்கக்கூடிய அளவுக்கு அவர்களைக் கட்டாயப்படுத்தத் தூண்டும் விருப்பமே மனிதர் செயல்படுவதற்கான அடிப்படை நோக்கமாக மாறிவிடுகிறது. *இது நீதியின் இயல்புக்கு முரணாகச் செல்கிறது;* ஏனெனில் மோதிக்கொள்ளும்



கட்சிகளுக்கு இடையே சமத்துவத்தையும் இணக்கத்தையும் ஏற்படுத்தவே நீதி விழைகிறது. இதுதான் நீதியின் இயல்பு ஆகும். நீதியைப் பற்றித் தவறான எண்ணத்தை உருவாக்குவதும், நடைமுறையில் அதைச் சீர்குலைப்பதும் எதைக் காட்டுகிறது? நீதியின் பெயரால் மேற்கொள்ளப்படும்போதும்கூட, எவ்வளவுக்கு மனிதச் செயல் நீதியின்று பிறழ்ந்துவிட முடியும் என்பதையே காட்டுகிறது. பழைய ஏற்பாட்டுக் கோட்பாட்டைப் பற்றிநின்ற மக்களுக்குக் கிறிஸ்து மறுப்புத் தெரிவித்தது – "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்"[111] என்னும் கூற்றில் அடங்கியுள்ள மனநிலைக்காக அவர்களைக் குற்றம் சாட்டியது – எல்லாம் வீண்போகவில்லை. இப்படித்தான் அக் காலத்தில் நீதி திரித்துப் பார்க்கப்பட்டது. இத்தகைய நெறிபிறழ்வுகளை நாம் இன்றும் காணலாம். குறிப்பிட்டதொரு நீதியின் பெயரால் (எடுத்துக்காட்டாக, வரலாற்று நீதி அல்லது வகுப்பு நீதி) அடுத்திருப்போர் சில நேரங்களில் அழிக்கப்படுகின்றனர்; கொல்லப்படுகின்றனர்; தன்னுரிமை பறிக்கப்படுகின்றனர்; அல்லது அடிப்படை மனித உரிமைகளைப் பறிகொடுக்கும் அளவுக்கு ஒடுக்கப்படுகின்றனர் என்பது கண்கூடு. கடந்த காலப் பட்டறிவும் இக் காலப் பட்டறிவும் நமக்குப் புகட்டுவது என்ன? நீதி மட்டும் போதாது; *நீதியைவிட உயரிய ஆற்றலான அன்பு* மனித வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் ஊடுருவி வாழ்வை உருவாக்கிட நாம் வழிவகுக்கவில்லை என்றால், நீதி அநீதியாக மாறித் தன்னையே அழித்துக்கொள்ளும் நிலை ஏற்படக்கூடும். *அளவுக்கு மிஞ்சினால் நீதியும் அநீதி ஆகும்* என்னும் கூற்று வரலாற்று அனுபவத்திலிருந்து எழுந்த ஒன்றே. இக் கூற்று நீதி பற்றிய மதிப்பீட்டை இழிவுபடுத்துகிறது என்றோ, நீதியின் அடிப்படையில் எழும் ஒழுங்குமுறையின் முக்கியத்துவத்தைக் குறைக்கிறது என்றோ பொருள்படாது. நீதிமுறைமையை ஆள்கின்ற இன்னும் அதிக ஆழமிக்க ஆன்மீக ஆற்றல்கள் நீதியுணர்வின் அடித்தளமாக அமைய வேண்டிய தேவையை மேலே காட்டிய கூற்று வேறொரு கோணத்திலிருந்து சுட்டிக்காட்டுகிறது.

நமது தலைமுறையைக் கண்முன் கொண்டுள்ள திருஅவை *இக் கால மக்கள் பலரின் அமைதியின்மையைப் பகிர்ந்துகொள்கிறது.* அதே நேரத்தில், *பல அடிப்படை மதிப்பீடுகள் நலிவுறக்* காணும் திருஅவை அது பற்றிக் கவலை

111. மத் 5:38.

கொள்ளாமல் இருக்கவே முடியாது; ஏனெனில் இம் மதிப்பீடுகள் கிறிஸ்தவ ஒழுக்கநெறிக்கு மட்டும் அன்று, *மனித ஒழுக்கநெறிக்கும், ஏன் ஒழுக்கப் பண்பாட்டுக்குமே* அசைக்க முடியாத அடித்தளமாய் அமைகின்றன. கருத்தரிக்கும் நேரம் முதற்கொண்டு மனித வாழ்வு மட்டில் மதிப்பு – திருமணத்தின் பிளவுபடா ஒற்றுமை மட்டில் மதிப்பு – குடும்பத்தின் நிலைத்தன்மை மட்டில் மதிப்பு – முதலியன மேற்கூறப்பட்ட மதிப்பீடுகளுள் அடங்கும். வாழ்வினுடையவும் சமுதாயத்தினுடையவும் மிகவும் இக்கட்டான இக் கட்டத்தில் ஒழுக்கத் தளர்ச்சி தாண்டவமாடுகிறது. மனித உறவுகளில் உண்மைக்கு ஏற்படும் நெருக்கடி, பொறுப்பற்ற பேச்சு, பயன் மட்டும் கருதித் தனிமனிதர்கள் தங்களுக்குள்ளே உறவு வளர்க்கும் நிலை, உண்மையான பொது நலன் பேணும் எண்ணம் குறைவுபடும் நிலை, இந்த நலனை மாய்த்துவிடுவதில் உள்ள பொறுப்பற்ற தன்மை முதலியன மேற்கூறிய ஒழுக்கத் தளர்ச்சியோடு கைகோத்துச் செல்லுகின்றன. இறுதியாக ''புனித மயம் போக்குதல்'' என்னும் பெயரில் ''மனித நலம் போக்குதல்'' என்னும் விளைவே ஏற்படும் ஆபத்தும் உளது; அதாவது, வெளிப் பார்வைக்குத் தென்படாது போயினும், ''புனிதம்'' என்னும் ஒன்றே இல்லை எனக் கருதும் தனிமனிதரும் சமுதாயமும் ஒழுக்கச் சீர்கேட்டுக்கே ஆளாவர் என்பது உண்மை.



# VII. திருஅவையின் பணியில் இறைவனின் இரக்கம்

பெரும் கவலையை உண்டாக்கும் நமது தலைமுறையின் நிலையை உற்றுநோக்கும் அதே நேரத்தில் இறைமகன் மனிதரானதால் மரியா இசைத்த *புகழ்ப்பாடலில்* இடம்பெற்ற அச் சொற்கள் – ''தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டிவருகிறார்...'' என்று அவர் பாடிய அதே சொற்கள் – நம் நினைவலைகளில் நீங்காது ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இறைஏவுதலால் எழுந்த இச் சொற்களின் ஆற்றலை இக் காலத்தில் திருஅவை மனத்தில் இருத்தித் தொடர்ந்து சிந்தித்து, அவற்றை மாபெரும் மனிதக் குடும்பத்தின் அனுபவங்களோடும் துன்பங்களோடும் தொடர்புபடுத்திப் பார்க்கின்றது. இவ்வாறு செய்யும்போது பழைய, புதிய உடன்படிக்கைகளின் மரபு வழி நின்று – எல்லாவற்றுக்கும் மேலாக, இயேசு கிறிஸ்துவினுடையவும் அவருடைய திருத்தூதர்களுடையவும் அடிச்சுவடுகளைப் பின்பற்றி – *திருஅவை தனது பணி முழுவதிலும் இறைவனின் இரக்கத்துக்குச் சான்று பகர வேண்டிய தேவை* பற்றித் தனிப்பட்ட, ஆழ்ந்த விழிப்புணர்வு கொள்ள வேண்டும். கிறிஸ்துவில் வெளிப்பட்ட – மீட்பர் என்ற முறையில் அவரது பணி–வாழ்வு முழுவதிலும் வெளிப்பட்ட – இறைவனின் இரக்கத்துக்குச் சான்று பகர வேண்டியது திருஅவையின் கடமை. முதன் முதலில் நம்பிக்கைக் களஞ்சியத்தின் மீட்பளிக்கும் உண்மையாகவும், நம்பிக்கையோடு இயைந்த வாழ்வின் அடிப்படைத் தேவையாகவும் *இரக்கத்தை அறிக்கையிட* வேண்டும். பின்னர் தம் நம்பிக்கையாளர்களுக்கும் முடிந்தவரை நன்மனத்தோர் அனைவருக்கும் *அதை அறிமுகம் செய்துவைக்கவும், அவர்களது வாழ்க்கையில் அது மிளிரச் செய்யவும்* திருஅவை முயல வேண்டும். இறுதியாக, இரக்கத்தை அறிக்கையிட்டு, அதில் எப்போதும் பற்றுதியோடு நிற்கும் திருஅவைக்கு ஓர் உரிமையும் கடமையும் உண்டு; அதாவது உடல் கேடு, ஒழுக்கக்கேடு ஆகியவற்றின் எல்லா வகை வடிவங்கள் நடுவிலும் – இன்றைய மனித இனத்தின் வாழ்வினுடைய முழு அடிவானத்தையும் மூடி

மறைத்திடக்கூடிய எல்லா வகை அச்சுறுத்தல்கள் நடுவிலும் – இறைவனின் *இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுவதே* அவ் உரிமையும் கடமையும் ஆகும்.

## 13. திருஅவை இறைவனின் இரக்கத்தை எடுத்துரைத்து அறிக்கையிடுகிறது

*இறைவனின் இரக்கத்தைத் திருஅவை எடுத்துரைத்து அறிக்கையிட* வேண்டும். அதுவும் இறைவெளிப்பாடு மூலம் நமக்கு வாழையடி வாழையாக வழங்கப்பட்டுள்ளவாறே *இறைவனுடைய இரக்கத்தின் முழு உண்மையையும்* திருஅவை எடுத்துரைத்து அறிக்கையிட வேண்டும். திருநூல், திருஅவை மரபு முழுவதிலும் மிகவும் பொருள்செறிவு கொண்டதாய் விளங்கும் இவ் உண்மையின் முக்கியக் கூறுகளையாவது எடுத்துரைக்க இவ் ஏட்டின் முந்திய பக்கங்களில் நாம் முயன்றுள்ளோம். விவிலியத்தில் எடுத்துரைக்கப்படும் இறைவனின் இரக்கம் பற்றிய இவ் உண்மை திருஅவையின் அன்றாட வாழ்வில் என்றுமே எதிரொலிக்கின்றது; திருவழிபாட்டில் இடம்பெறும் பல வாசகங்கள் வழியாகப் பறைசாற்றப்படுகின்றது. தனியாருடையவும் குழுக்களுடையவும் பக்தியின் பல்வேறு வெளிப்பாடுகளினின்று நாம் அறிவதுபோல, இறைமக்களின் உண்மையான நம்பிக்கை உணர்வு மேற்கூறிய உண்மையைக் கண்டுகொள்கிறது. இவ் வெளிப்பாடுகளின் முழுப் பட்டியலையோ சுருக்கத்தையோ இங்குத் தருவது உண்மையிலேயே கடினம்; ஏனெனில் அவற்றுள் பல மக்களுடைய உள்ளத்தின் ஆழத்திலும் அடிமனத்திலும் பசுமரத்து ஆணிபோல் பதிந்துள்ளன. இறைவனுடைய இயற் பண்புக்கூறுகளுக்குள்ளும் முழு நிறைவுகளுக்குள்ளும் இரக்கமே தலைசிறந்தது என்று இறையியலார் சிலர் வலியுறுத்தியுள்ளனர். விவிலியம் மட்டும் அன்று, திருஅவை மரபும், ஏன் இறைமக்களுடைய நம்பிக்கை வாழ்வு முழுவதுமே இதற்குச் சிறப்பான சான்றாய் அமைகின்றன. இங்கு எழுகின்ற சிக்கல், அறியவொண்ணாக் கடவுளுடைய உள்ளியல்பின் முழுமை பற்றியது அன்று; இறைவனின் உள்ளார்ந்த மறைபொருள் பற்றியதும் அன்று; ஆனால் மனிதர் தமது இருப்புண்மையின் ஆழத்தில் மிக நெருக்கமாகவும், மீண்டும் மீண்டும் சந்திக்கும் உயிருள்ள இறைவனின் முழு



நிறைவையும் இயற்பண்புக்கூற்றையும் பற்றியது. கிறிஸ்து பிலிப்புவிடம் கூறிய சொற்களுக்கு ஏற்ப,[112] தந்தையைப் பற்றிய காட்சி – நம்பிக்கை வழியாக நமக்குக் கிட்டும் கடவுளின் காட்சி – இரக்கத்தோடு ஏற்படும் இந்தச் சந்திப்பிலே உள்ளார்ந்த எளிமையோடும் உண்மையோடும் துலங்குகிறது. இதையே ஊதாரி மகன் உவமையிலும் நாம் காணலாம்.

''என்னைக் காண்பவர் தந்தையைக் காண்கிறார்.''[113] இறைவனின் இரக்கத்தைத் திருஅவை எடுத்துரைக்கிறது; தனது பரந்த நம்பிக்கை அனுபவம் வழியாகவும், படிப்பினை வாயிலாகவும் அதை வாழ்ந்து காட்டுகிறது. அது கிறிஸ்துமீதே தனது பார்வையை இடையறாது பதியவைத்து ஆழ்நிலை அருள்சிந்தனை செய்வதாலும், அவருடைய வாழ்வு – நற்செய்தி – சிலுவை – உயிர்ப்புமீது – இல்லை, அவருடைய மறைபொருள் முழுவதன்மீதும் தனது சிந்தையைச் செலுத்துவதாலும் இது நிகழ்கிறது. திருஅவையின் உயிருள்ள நம்பிக்கையாலும் படிப்பினையாலும் கிறிஸ்துவின் ''தெய்வீகக் காட்சியுருவாக'' அமையும் ''தந்தையின் காட்சியுருவுக்கும்'' அவரது இரக்கத்தின் புனிதத்தன்மைக்கும் மிக அருகில் நம்மை இட்டுச் செல்கிறது. கிறிஸ்துவின் இதயத்தின்மீது தனது கவனத்தைத் திருப்பும் வேளையில் திருஅவை இறைவனின் இரக்கத்தைச் சிறப்பான முறையில் எடுத்துரைத்து, அதற்கு வணக்கம் செலுத்துவதாகக் கூறலாம். கிறிஸ்துவினுடைய இதயத்தின் மறைபொருளைக் கருத்தில் கொண்டு, அவரை அணுகிச் செல்வதாலேயே தந்தையின் இரக்கமிகு அன்பு பற்றிய வெளிப்பாட்டு உண்மையை வலியுறுத்த முடிகிறது. மானிடமகனுடைய மீட்புப் பணியின் மையப் பொருளாக அமைந்த இவ் வெளிப்பாடு ஒரு வகையில் தலையானது; அதே நேரத்தில் மனிதரால் எளிதில் அணுகத் தக்கது.

படைத்தவருடையவும் மீட்பருடையவும் மாபெரும் பண்புக்கூறான *இரக்கத்தைத் திருஅவை அறிக்கையிட்டுப் பறைசாற்றும்போது* – மீட்பருடைய இரக்கத்தின் ஊற்றுகளுக்கு மக்களை இட்டுச்செல்லும்போது – திருஅவை உண்மையான வாழ்வு வாழ்கிறது. இந்த இரக்கத்தைப் பேணிக் காத்துப் பகிர்ந்தளிப்பது திருஅவையே. இறைவார்த்தையை இடையறாது தியானிப்பது – சிறப்பாக *நற்கருணையிலும் ஒப்புரவு அருளடையாளத்திலும்*

112. காண் யோவா 14:9-10.

113. யோவா 14:9.

உணர்வோடும் சிந்தனைப் பக்குவத்தோடும் பங்குகொள்வது ஆகியவை மிக முக்கியம் வாய்ந்தவை. சாவைவிட வலிமை படைத்த அன்புக்கு மேன்மேலும் நெருக்கமாக நற்கருணை நம்மை இட்டுச்செல்கிறது. ''ஏனெனில் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகும்போதெல்லாம்,'' மீட்பருடைய இறப்பை மட்டும் அன்று, உயிர்ப்பையுமே அவர் மாட்சியில் ''வரும்வரை'' நாம் அறிக்கையிடுகின்றோம்.[114] மீட்புப் பணியின்போது தம் சொல்லாலும் சிலுவையாலும் இறைத் தந்தையை நமக்கு வெளிப்படுத்திய கிறிஸ்துவின் நினைவாகக் கொண்டாடப்படும் அதே நற்கருணை வழிபாடு அவரது வற்றாத அன்பை எண்பிக்கிறது. இந்த அன்பு வழியாகவே அவர் என்றும் நம்மோடு ஒன்றித்திருக்கவும், நம்மில் ஒருவராய் உடனிருக்கவும் விரும்புகின்றார்; ஒவ்வொரு மனித இதயத்தையும் சந்திக்க வருகின்றார். ஒப்புரவு அருளடையாளமே ஒவ்வொரு மனிதருக்கும் வழியை அணியப்படுத்துகிறது; பெரும் பாவங்களில் அமிழ்ந்திக்கிடப்போரையும் அணியப்படுத்துகிறது. இந்த அருளடையாளத்தில் ஒவ்வொரு மனிதரும் ஈடு இணையற்ற முறையில் இரக்கத்தை அனுபவிக்க இயலும்; அதாவது, பாவத்தைவிட அன்பு ஆற்றல் படைத்தது என்பதை உள்ளூர உணர முடியும். *மனிதரின் மீட்பர்* என்னும் சுற்றுமடலில் இது பற்றி நான் ஏற்கெனவே பேசிவிட்டேன். ஆயினும் இந்த அடிப்படைக் கருத்து பற்றி மீண்டும் ஒரு முறை எடுத்துரைப்பது பொருத்தமே.

''தம் ஒரே மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் அன்புகூர்ந்த உலகில்''[115] பாவம் குடிகொண்டுள்ள காரணத்தினால்தான் ''அன்பே உருவான கடவுள்''[116] இரக்கத்தின் வழி அன்றி, *வேறு வழியாகத் தம்மை வெளிப்படுத்த இயலாது;* கடவுளாகவே இருக்கின்ற அந்த அன்பு பற்றிய மிக ஆழமான உண்மைக்கு மட்டும் அன்று, மனிதருடையவும் அவர்தம் தற்காலிகத் தாய்நாடாக விளங்கும் உலகினுடையவும் முழு உள்ளார்ந்த உண்மைக்கும் இது பொருந்திப்போகிறது.

எல்லையற்ற இறைவனின் முழு நிறைவு என்னும் முறையில், இரக்கம் தன்னிலே எல்லையற்றது. எனவே தமது வீட்டுக்குத் திரும்பி வரும் ஊதாரிப் பிள்ளைகளை வரவேற்பதில் தந்தை காட்டும் விருப்ப நிலை எல்லையற்றது;

114. காண் 1 கொரி 11:26; உரோமைத் திருப்பலி நூலில் வரும் மக்களின் வாழ்த்தொலி.

115. யோவா 3:16.

116. 1 யோவா 4:8.



என்றும் குறைவுபடாதது. திருப்பலியின் அற்புதமான ஆற்றலினின்று இடையறாது பொங்கி வழியும் விருப்ப நிலையும் மன்னிக்கும் ஆற்றலும் எல்லையற்றவையே. எந்த வித மனிதப் பாவமும் இந்த ஆற்றலை மேற்கொள்ள முடியாது; கட்டுப்படுத்தவும் முடியாது. மனிதரைப் பொருத்த மட்டில் நன்மனம் இல்லாக் குறை மட்டுமே இதைக் கட்டுப்படுத்த முடியும்; மனந்திரும்பி, மனம் வருந்த அணியமாய் இல்லாத நிலையே அதற்கு வரம்பு கட்ட இயலும். அதாவது, மூர்க்கத்தனத்தில் பிடிவாதமாய் இருத்தல் – குறிப்பாகக் கிறிஸ்துவின் சிலுவையினுடையவும் உயிர்ப்பினுடையவும் சாட்சியத்தை ஏற்காமல், அவரின் அருளையும் உண்மையையும் எதிர்த்து நிற்றல் முதலியனவே அவருடைய மன்னிப்பு வழங்கும் அணியத்தையும் ஆற்றலையும் கட்டுப்படுத்த முடியும்.

ஆகவேதான் திருஅவை மனமாற்றத்தை எடுத்துரைத்துப் பறைசாற்றுகிறது. கடவுள்பால் மனந்திரும்புதல் என்பது *அவரது இரக்கத்தைக் கண்டடைவதிலேயே* எப்பொழுதும் அடங்கும். அதாவது, நம்மைப் படைத்தவர் என்னும் முறையிலும் நம் தந்தை என்னும் முறையிலும் அவரில் விளங்குகின்ற பொறுமையோடு பரிவும் கலந்த அன்பைக்[117] கண்டுணர்வதில் அது அடங்கும். ''நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கடவுளும் தந்தையுமானவர்''[118] மனிதரோடு செய்திருந்த உடன்படிக்கைக்கு இறுதி விளைபயன் வரை பிரமாணிக்கமாய் இருந்து – அதாவது, தம் திருமகனின் சிலுவைப் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு வரை பிரமாணிக்கமாய் இருந்து – அதன் வழியாக வெளிப்படுத்திய அன்பைக் கண்டுகொள்வதில் அடங்கும். இறைவன்பால் மனந்திரும்புதல் என்பது இரக்கம் மிகுந்த இறைத் தந்தையிடம் எப்போதும் திரும்பிச் செல்வதனால் விளையும் பயனே ஆகும்.

கனிவான அன்பு கொண்ட கடவுளின் இரக்கத்தைப் பற்றிய உண்மையான அறிவு மனமாற்றத்தின் நிலையான, வற்றாத ஊற்றாக அமைகிறது. மனமாற்றம் என்பது கணநேரமே நீடிக்கக்கூடிய உள்ளார்ந்த செயல் மட்டும் அன்று; அது ஒரு நிலையான மனப்பான்மையும் ஆகும்; அதாவது, உள்ளத்தின் நிலை எனலாம். கடவுளை இவ்வாறு அறிய வருவோர்,

117. காண் 1 கொரி 13:4.

118. காண் 2 கொரி 1:3.

அவரைக் ''கண்டுகொள்வோர்'' அனைவரும் அவர்பால் தொடர்ந்து மனந்திரும்பிக் கொண்டிருப்பதனாலேதான் வாழ முடியும். எனவே இவர்கள் *மனந்திரும்புகின்ற நிலையிலேயே* வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். *வழிப்போக்கரின் நிலையில்* வாழ்ந்து கொண்டிருக்கும் ஆண், பெண் அனைவரும் இவ் உலகில் மேற்கொண்டுள்ள திருப்பயணத்தினுடைய மிகவும் ஆழ்ந்த ஆக்கக்கூறாக இந்த மனமாற்ற நிலை அமைகிறது. சிலுவையில் அறையப்பெற்ற உயிர்த்தெழுந்த கிறிஸ்துவில் வெளிப்பட்ட இறைவனின் இரக்கத்தை வாய்மொழிப் படிப்பினை வழியாக மட்டும் அன்று, இறைமக்கள் அனைவருடைய வாழ்வுச் சான்று வழியாகவும் திருஅவை அறிக்கையிடுகிறது என்பது தெரிந்த ஒன்றே. இத்தகைய வாழ்வுச் சான்று வாயிலாக, இறைமக்களுக்கே உரித்தான பணியைத் திருஅவை நிறைவேற்றி வருகிறது. இப் பணி கிறிஸ்துவின் மீட்புப் பணியில் ஒரு பங்காகவும் ஒரு வகையில் அதன் தொடர்ச்சியாகவும் விளங்குகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினையினின்று எழும் கடமைகளை எல்லாம் கடவுளுடைய இரக்கத்தின் அடிப்படையில் மட்டுமே தான் ஏற்று நிறைவேற்ற முடியும் என்பதை இன்றையத் திருஅவை நன்கு அறிந்துள்ளது. இக் கடமைகளுள் முதன்மையானது கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வோர் அனைவரையும் ஒன்றுசேர்க்க முனையும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான செயலீடுபாடு ஆகும். இதைப் பொறுத்தமட்டில் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ள திருஅவை பின்வரும் உண்மையைத் தாழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறது. அதாவது, மனிதப் பிளவுகளின் வலுவின்மையைவிட வலிமை படைத்த அன்பு மட்டுமே *இந்த ஒன்றிப்பை உறுதியாகக் கொண்டுவர முடியும்.* இந்த ஒற்றுமைக்காகவே கிறிஸ்து தந்தையை நோக்கி மன்றாடினார்; இதற்காகவே தூய ஆவியார் ''சொல் வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய்''[119] என்றும் தந்தையிடம் நமக்காகப் பரிந்துபேசிக் கொண்டிருக்கின்றார்.

119. உரோ 8:26.



## 14. இரக்கத்தைச் செயல்படுத்தத் திருஅவை முனைகிறது

மனிதர் இறைவனின் இரக்கத்தைப் பெற்று அனுபவித்தால் மட்டும் போதாது, பிறர் மட்டில் ''இரக்கம் காட்ட''வும் அழைக்கப்படுகின்றனர் என்னும் உண்மையை இயேசு கிறிஸ்து உணர்த்தியிருக்கிறார்: ''இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.''[120] செயல் அளவில் ஈடுபடுவதற்காக விடுக்கப்பட்ட அழைப்பாகவே திருஅவை இக் கூற்றைக் கருதுகிறது; எனவே இரக்கத்தைச் செயலாக்க முயல்கிறது. மலைப்பொழிவில் வரும் எல்லாப் பேறுகளுமே மனமாற்றத்திற்கான வழியையும் வாழ்வின் சீர்திருத்தத்துக்கான வழியையும் நமக்கு அடையாளம் காட்டுகின்றன. இருப்பினும் இரக்கமுடையோரைக் குறிப்பிடும் பேறு தனிச் சிறப்புக் கொண்டது. மனிதர் தமக்கு அடுத்திருப்பவர் மட்டில் காட்டும் அன்பினால் எந்த அளவுக்கு உள்ளூர மாற்றம் அடைகின்றனரோ அந்த அளவுக்கே அவர்கள் கடவுளின் இரக்கமிகு அன்பை, அவரது இரக்கத்தைப் பெறுகிறார்கள்.

நற்செய்தி காட்டும் உண்மையான இந்தச் சீரிய செயல்பாங்கு முடிவாக ஏற்கெனவே நிகழ்ந்துவிட்ட ஆவிக்குரிய மாற்றத்தை மட்டும் கொணர்வதில்லை; அது ஒரு முழுமையான வாழ்க்கைமுறை; கிறிஸ்தவ அழைத்தலின் இன்றியமையாத, நிலையான சிறப்புப் பண்பும் ஆகும். எண்ணற்ற இடையூறுகளுக்கு நடுவிலும் உள நிலையையும் சமுதாய இயல்பையும் *ஒருங்கிணைத்து உயர்த்துகின்ற ஆற்றலாக அன்பை* இடையறாது கண்டுபிடிப்பதிலும் தொடர்ந்து அதைச் செயல்படுத்துவதிலுமே மேற்கூறிய செயல்பாங்கு அடங்கும். தன் இயல்பிலேயே படைக்கும் ஆற்றல் கொண்ட, *இரக்கமிகு அன்பைப்* பற்றியே இவண் பேசுகின்றோம். மனிதர்களுக்கு இடையே ஏற்படும் பரஸ்பர உறவில் இரக்கமிகு அன்பு ஒருதலைச் சார்பான செயலாகவோ செயல்பாங்காகவோ ஒருபோதும் அமைந்திருப்பதில்லை; ஒருவர் கொடுத்துக்கொண்டே இருக்க, மற்றவர் பெற்றுக்கொண்டே இருக்கிறார் என நம்மை நினைக்கத் தூண்டும் நிகழ்ச்சிகளில்கூட, கொடுப்பவர் எப்போதும் பெறவும் செய்கிறார் என்பதே உண்மை (எ.கா., நோயாளியைக் கவனிக்கும் மருத்துவர்; கல்வி புகட்டும் ஆசிரியர்; பிள்ளைகளைப் பேணி வளர்க்கும் பெற்றோர்; தேவையில்

120. மத் 5:7.

உழல்வோர்க்கு உதவி செய்யும் கொடையாளி ஆகியோர்). எவ் வகையில் பார்த்தாலும், இவர்களும் பெறுவோரின் நிலைக்கு – நன்மை அடைவோரின் நிலைக்கு – இரக்கமிகு அன்பைத் துய்த்துணர்வோரின் நிலைக்கு – வந்துவிட முடியும்; இவர்களும் இரக்கத்தைப் பெறுவோரின் நிலையை எய்திவிட முடியும்.

இப் பொருளில் சிலுவையில் அறையப்பெற்ற *கிறிஸ்து* நம் அனைவருக்கும் மிக உயர்ந்த முன்மாதிரியாக, தூண்டுதலாக, ஊக்கமாக விளங்குகிறார். *நெஞ்சைக் கிளர வைக்கும் இந்த முன்மாதிரியை* அடிப்படையாகக் கொண்டு நமது வாழ்க்கையை அமைக்கும்போது, மற்றவருக்குக் காட்டப்படும் இரக்கத்தைத் தமக்கே காட்டப்பட்டதாய் ஏற்றுக்கொள்கிறார் கிறிஸ்து[121] என்னும் உண்மையை உணர்ந்தவர்களாய், எல்லா வகைத் தாழ்மைப் பண்போடும் அவர்களுக்கு இரக்கம் காட்ட நம்மால் இயலும். இந்த முன்மாதிரியின் அடிப்படையில், ஒருதலைச் சார்பான முறையில் இரக்கத்தைப் புரிந்துகொண்டு செயல்படுவதை – அதாவது, இரக்கம் என்பது பிறருக்குச் செய்யப்படும் நன்மை மட்டுமே என உணர்ந்து, நம் சிந்தனை, செயல்கள் அனைத்தையும் நாம் தொடர்ந்து தூய்மைப்படுத்திய வண்ணம் இருக்க வேண்டும். யார் நம்மிடமிருந்து இரக்கம் பெறுகிறார்களோ, அவர்களிடமிருந்து நாமும் இரக்கம் பெறுகிறோம் என உள்ளூர நம்புவதே உண்மையான இரக்கமிகு அன்புச் செயலுக்கு அடையாளம் ஆகும். இத்தகைய இருதலைச் சார்பான, பரஸ்பரப் பண்புக்கூறு இல்லாவிட்டால், நம் செயல்கள் உண்மையான இரக்கச் செயல்கள் அல்ல; சிலுவைச் சாவுவரை கிறிஸ்து தம் சொல்லாலும் முன்மாதிரியாலும் நமக்குக் காண்பித்துச் சென்ற மனமாற்றம் நம்மில் இன்னும் முழுமையாக நிறைவு பெறவில்லை என்றே சொல்ல வேண்டும்; அவரால் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட *இரக்கமிகு அன்பின் சிறப்பு வாய்ந்த ஊற்றி*ல் நாம் இன்னும் முழுமையாகப் பங்குகொள்ளவில்லை என்றே பொருள்.

இவ்வாறு தமது மலைப்பொழிவிலே இடம்பெற்ற இரக்கமுடையோர் பற்றிய பேறு வாயிலாகக் கிறிஸ்து நமக்குக் காண்பித்துள்ள வழியானது, இரக்கம் பற்றிச் சில நேரங்களில் நாம் காண்கின்ற சாதாரண மனிதக்

121. காண் மத் 25:34-40.



கருத்துரைகளைவிடப் பொருள்செறிவு கொண்டது. இக் கருத்துரைகளின்படி, ஒருதலைச் சார்பான செயலாக அல்லது செயல்பாங்காக இரக்கம் அமைகிறது; ஏனென்றால் இரக்கம் காட்டுவோர்க்கும் இரக்கம் பெறுவோர்க்கும் இடையே – நன்மை செய்வோர்க்கும் நன்மை பெறுவோர்க்கும் இடையே – ஒரு வகை இடைவெளி நிலவுகிறது. இதனால் ஆளுறவு நிலை, அல்லது சமுதாய உறவுகளினின்று இரக்கத்தைத் துண்டிக்கவும், அவற்றை நீதிமேல் மட்டும் கட்டி எழுப்பவும் வேண்டும் என்னும் எண்ணத்துடன் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக் கருத்துரைகள் எல்லாம் இரக்கத்துக்கும் நீதிக்கும் இடையே உள்ள அடிப்படையான தொடர்பைச் சரியாகக் கண்டுணரத் தவறிவிடுகின்றன. இரக்கத்துக்கும் நீதிக்கும் இடையே நிலவும் இந்தத் தொடர்பு பற்றி விவிலிய மரபு முழுவதும் பேசுகிறது; எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசு கிறிஸ்துவின் மீட்புப் பணி இதைத் தெளிவுபடுத்துகிறது. *உண்மையான இரக்கமே நீதியின் அடிப்படை ஊற்று ஆகும் எனலாம்.* தன்னின் வேறான நலன்களை நேர்மையான முறையில் ஒருவர் மற்றவரோடு பங்கிட்டுக்கொள்வதை வரையறுப்பதற்கு ஏற்றது நீதி என்றால், அன்பு – அன்பு மட்டுமே (''இரக்கம்'' என நாம் அழைக்கும் அந்தக் கனிவுமிகு அன்பும் இதில் அடங்கும்) – மனிதரை அவர்களுடைய பழைய நிலைக்கு மீண்டும் கொண்டு வர முடியும்.

உண்மையான கிறிஸ்தவப் பண்பு கொண்ட இரக்கமானது மனிதர் நடுவே நிலவவேண்டிய ''சரிநிகர்வின்'' *முழு நிறைவான அவதாரம்* என ஒரு வகையில் சொல்லலாம். இதனால் *நீதி*யின் முழு நிறைவான அவதாரம் எனச் சொல்வதும் பொருந்தும்; ஏனெனில் நீதியானது தனக்கே உரித்தான முறையில் அதே விளைபயனையே நாடுகிறது. எனினும் நீதியால் விளையும் சரிநிகர்வு வரம்புக்கு உட்பட்டது; புலனால் அறியக்கூடியது; பொருள் நலன்களை மட்டுமே சார்ந்தது. ஆனால் அன்பும் இரக்கமும் மனிதர் ஒருவர் மற்றவரைச் சந்திக்க வைக்கின்றன; மனிதரையே ஒரு மதிப்பீடாகக் கொண்டு அவர்களுக்கே உரித்தான மாண்போடு ஒருவர் மற்றவரைச் சந்திக்க வைக்கின்றன. அதே நேரத்தில் ''பொறுமையும் பரிவும்'' கொண்ட அன்பினால்[122] மக்கள் இடையே ஏற்படும் ''சரிநிகர்வு'' வேற்றுமைகளைப் பூண்டோடு அழித்துவிடுவதில்லை. மாறாக, தம் கொடையை மற்றவர்

122. காண் 1 கொரி 13:4.

ஏற்றுக்கொள்ளும்போது, தாம் அதனால் பயன் அடைவதாக உணரும் மனிதர், இன்னும் அதிக வள்ளன்மை உடையவராக மாறுகிறார். அதே போன்று கொடையைப் பெறுவதன் வழியாக, கொடுப்பவருக்குத் தாம் நன்மை புரிவதாகக் கொடையை ஏற்பவர் உணர்ந்தார் என்றால், தம் பங்கைப் பொறுத்த மட்டில் அவரும் மனித மாண்பைப் போற்றி வளர்க்கிறார். மிக ஆழமான முறையில் ஒற்றுமைக்கு மக்களை இட்டுச் செல்ல இது துணை செய்யும்.

இவ்வாறு மக்களிடையே பரஸ்பர உறவுகளை வளர்க்க – மனிதத் தன்மை கொண்ட அனைத்தின் மட்டிலும் ஆழ்ந்த மரியாதையோடும் சகோதர உணர்வோடும் உறவுகளை *வளர்க்க* – இரக்கம் இன்றியமையாத ஒன்றாக அமைகிறது. நீதியை மட்டும் அளவுகோலாக வைத்துத் தங்களுக்குள் உறவுகளை முறைப்படுத்த விரும்பினால், இத்தகைய உறவை மக்களிடையே நிலைநாட்டுவது குதிரைக் கொம்பு ஆகிவிடும். ஆளுறவு நிலையின் *எல்லா மட்டத்திலும் நீதி "திருத்தப்பட" வேண்டும் எனச் சொல்லலாம்.* அதாவது, "பொறுமையுள்ளது, பரிவுள்ளது" எனப் புனித பவுல் போற்றும் அன்பைக் கொண்டு நீதி பெரும் அளவில் சரிசெய்யப்பட வேண்டும். வேறு சொற்களில் கூற வேண்டுமானால், *இரக்கமிகு அன்பின்* பண்புகளை நீதி கொண்டிருக்க வேண்டும்; ஏனெனில் இந்த அன்பே நற்செய்தியினுடையவும் கிறிஸ்தவ நெறியினுடையவும் சாரமாக உள்ளது. மேலும் *உள்ளக் கனிவு, கூருணர்வு* முதலியவற்றையும் *இரக்கமிகு அன்பு* குறிக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இப் பண்புகள் ஊதாரி மகன் உவமையில்[123] மிகச் சிறப்பாகப் பளிச்சிடுகின்றன. காணாமற்போன ஆடு, காணாமற்போன திராக்மா பற்றிய உவமைகளிலும்[124] இவற்றைக் காணலாம். மேலும் தங்களுக்குள் மிக நெருக்கமாய் இருப்போருக்கு இடையிலேயும் இந்த இரக்கமிகு அன்பு மிக இன்றியமையாதது ஆகிறது; கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளைகள், நண்பர்கள் ஆகியோரிடையே இது மிளிரவேண்டும்; கல்வித் துறையிலும் அருள்பணியிலும் இது ஒளிர வேண்டும்.

123. காண் லூக் 15:11-32.

124. காண் லூக் 15:1-10.



ஆனால் இரக்கமிகு அன்பின் செயல்தளம் மேற்சொன்னவற்றை மட்டுமே சார்ந்தது என்றில்லை, பண்பாட்டு, சமுதாய, பொருளாதார, அரசியல் துறைகளில் மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளும் "அன்பின் பண்பாட்டை"யே[125] தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதைத் திருத்தந்தை ஆறாம் பால் பல்வேறு வேளைகளில் சுட்டிக்காட்டியுள்ளார். சமூக வாழ்வின் பரந்த, சிக்கலான துறைகள் சார்ந்தவற்றில், "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்"[126] என்பதையே நமது அளவுகோலாகக் கொண்டு சிந்திக்கவும் செயல்படவும் முனைந்தோம் என்றால் – வேறொரு மனநிலையைப் புகுத்தி அடிப்படையிலேயே இக் கூற்றை மாற்றியமைத்திட முனையவில்லை என்றால் – மேற்கூறிய "அன்பின் பண்பாட்டை" நாம் ஒருபோதும் அடைய முடியாது என்பதையும் ஈண்டுச் சொல்லியாக வேண்டும். இரண்டாம் வத்திக்கான் சங்கமும் இதே வழியைத்தான் நமக்குக் காட்டுகிறது என்பது தெளிவு. *உலகை இன்னும் அதிக மனிதத் தன்மை மிகுந்ததாய் மாற்றியமைப்பதற்கான தேவை*[127] பற்றி அது திரும்பத் திரும்பப் பேசுகிறது; இக் கடமையை நிறைவேற்றுவதே இன்றைய உலகில் தனது பணி எனவும் திருச்சங்கம் கூறுகிறது. ஆளுறவின் பல்வேறு நிலைகளிலும் சமுதாய உறவுகளிலும் நீதியை மட்டும் அன்று, இரக்கமிகு அன்பையும் நாம் புகுத்தினால்தான், சமுதாயம் "அதிக மனிதத் தன்மை" பெற்றதாய் இலங்க முடியும். இத்தகைய அன்புதான் மீட்பின் செய்தியினுடைய – நற்செய்தியினுடைய – கருப்பொருள்.

சமூகத்தின் ஒழுக்கநெறி அமைப்பைச் சார்ந்த பரஸ்பர மனித உறவுகளின் ஊடே நற்செய்தியின் கருப்பொருளாகிய மன்னிப்பின் தன்மையைப் புகுத்தினால்தான் அது இன்னும் அதிக மனிதத்தன்மை வாய்ந்ததாய் மாற வழி உண்டு. *பாவத்தைவிட ஆற்றல் படைத்த அன்பு* இவ்

125. காண் *ஆறாம் பாலின் போதனைகள்*, XIII (1975), பக். 1568 (புனித ஆண்டின் முடிவில் – 1975, டிசம்பர் 25-ஆம் நாள் கொடுக்கப்பட்டது).

126. மத் 5:38.

127. காண் இன்றைய உலகில் திருஅவை பற்றிய அருள்பணிக் கொள்கை விளக்கம், 40:அ. ஆ. ந. 58 (1966), பக். 1057-1059; திருத்தந்தை ஆறாம் பால், *தந்தையின் பரிவிரக்கத்தோடு* என்னும் திருத்தூது அறிவுரை, குறிப்பாக எண். 1-6; அ. ஆ. ந. 67 (1975), பக். 7-9,17-23.

உலகில் நிலவுகிறது என்பதை மன்னிப்பே எண்பிக்கிறது. மேலும் மன்னிப்பு ஒப்புரவுக்கு அடிப்படை நிபந்தனையாகவும் அமைகிறது. மனிதரோடு கடவுள் உறவு கொள்வதற்கு மட்டும் அன்று, மனிதர் தங்களுக்குள் உறவு கொள்வதற்குமே இது தேவை. மன்னிப்பை மறந்த உலகம் நட்பார்வமற்ற, உணர்ச்சியற்ற நீதியின் உலகமாகவே காட்சி அளிக்கும்; ஏனெனில் இத்தகைய நீதியின் பெயரால் ஒவ்வொரு மனிதரும் மற்ற மனிதர்களுக்கு எதிராகத் தம் சொந்த உரிமைகளை வலியுறுத்துவரே தவிர, வேறு அன்று. இவ்வாறு மனிதருள் குடிகொண்டிருக்கும் பல வகையான தன்னல நாட்டங்கள் மனித வாழ்வையும் மனிதச் சமுதாயத்தையும், வலியோர் வலிமையற்றோர்மீது சுமத்தும் அடக்குமுறை அமைப்பாக மாற்றிவிடக்கூடும்; அல்லது ஒரு குழு மற்றொரு குழுவுக்கு எதிராக நிகழ்த்தும் நிலையான பூசல்களின் காட்சியரங்கமாக அவற்றை ஆக்கிவிடக்கூடும்.

இதன் பொருட்டே, இயேசு கிறிஸ்துவில் சிறப்பாக வெளிப்பட்ட இரக்கத்தின் மறைபொருளைப் *பறைசாற்றுவதையும், அதை வாழ்வில் செயல்படுத்துவதையும்* தனது தலையாய கடமைகளுள் ஒன்றாக வரலாற்றின் எல்லாக் கட்டங்களிலும், குறிப்பாக நாம் வாழும் இக் காலத்தில் திருஅவை கொள்ள வேண்டும். கொடிய ஆற்றல்கள் படைத்த மூவகை இச்சைகளின் உள்ளார்ந்த செயல்பாட்டுக்கு உள்பட்ட மனிதரை உருவாக்குகின்ற வாழ்வினின்று வேறுபட்ட இன்னொரு வாழ்வின் *ஊற்றாக* இரக்கத்தின் மறைபொருள் விளங்குகிறது. இது நம்பிக்கையாளர்களின் சமூகமாகிய திருஅவைக்கு மட்டும் அன்று, ஒரு வகையில் மனித இனம் முழுவதற்குமே பொருந்தும்.[128] இம் மறைபொருளின் பெயராலேயே எப்பொழுதும் மன்னிக்கக் கிறிஸ்து நமக்குக் கற்பித்துள்ளார். இது தொடர்பாக அவரே நமக்குக் கற்றுக்கொடுத்துள்ள இறைவேண்டலை எத்தனை முறை நாம் திரும்பத் திரும்பச் சொல்லுகிறோம்! ''எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை *நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும்*''[129] என வேண்டும்போது, நம்மைப் பொருத்த மட்டில் குற்றம் செய்தவர்களுக்காகவே நாம் மன்றாடுகிறோம். இச் சொற்கள் விளக்குகின்ற, நமது உள்ளத்திலே ஆழமாகப் பதியவைக்கின்ற மனநிலையின் உயரிய

128. காண் 1 யோவா 2:16.

129. மத் 6:12.



மதிப்பீட்டை விளக்குவது கடினம். பிறரைப் பற்றியும் சரி, தம்மைப் பற்றியும் சரி, ஒவ்வொரு மனிதருக்கும் இச் சொற்கள் எத்தனையோ காரியங்களைச் சொல்லுகின்றன! நாம் ஒருவர் மற்றவருக்குக் குற்றவாளிகள் என்னும் உணர்வு, சகோதரக் கூட்டொருமைப்பாட்டுக்கு விடுக்கப்படும் அழைப்போடு கைகோத்துச் செல்லுகிறது. இந்த ஒருமைப்பாடு பற்றியே, ''அன்பினால் ஒருவர் மற்றவரைத் தாங்கிக்கொள்ளுங்கள்''[130] என்னும் தமது இரத்தினச் சுருக்கமான அறிவுரையில் புனித பவுல் விளக்குகிறார். மனிதரைக் குறித்தும் சரி, தம்மையோ பிறரையோ குறித்தும் சரி, மனிதர் கற்றுக்கொள்ள வேண்டிய தாழ்மைப் பண்பின் பாடத்தை இங்கே நாம் காணலாம். நமது அன்றாட வாழ்வுக்கும் நமது வாழ்வின் வெவ்வேறு நிலைகளுக்கும் தேவையான நன்மனத்தைப் புகட்டும் பள்ளி இதோ! இந்தப் படிப்பினையை நாமே புறக்கணிக்க நேர்ந்தால், வாழ்வு, கல்வி பற்றிய மனித நலச் செயல்திட்டங்கள் என்ன ஆகும்?

பிறரை மன்னிக்க வேண்டிய தேவையைக் கிறிஸ்து மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார். இதனால்தான் தமக்கு அடுத்திருப்பவரை எத்தனை முறை மன்னிக்க வேண்டும் என்று பேதுரு அவரைக் கேட்டபோது, ''ஏழு முறை மட்டுமல்ல; எழுபது தடவை ஏழு முறை''[131] என்று அவர் பதில் இறுத்தார். இந்த அடையாள எண்ணின் பொருள் என்ன? எல்லாரையும் எப்போதும் மன்னிக்க வேண்டும் என்பதே. மன்னிப்பதில் தாராளம் உடையவராய் இருத்தல் வேண்டும் என்பதால், *நீதியின் உண்மைக் கோரிக்கைகளை நாம் புறக்கணித்துவிடலாம் எனப் பொருள் ஆகாது* என்பது தெளிவு. நீதியை நாம் சரியாகப் புரிந்துகொண்டோம் என்றால், மன்னிப்பின் நோக்கமே நீதிதான் என்பதை உணர்வோம். மன்னிப்பு அல்லது அதன் ஊற்றாக விளங்கும் இரக்கம் என்றால் தீமை, இடறல், (மனக்) காயம், அவமதிப்பு முதலியன மட்டில் சலுகை காட்டுதல் எனப் பொருள்படாது. நற்செய்தியின் எந்தப் பகுதியிலும் இதற்கு ஆதாரம் காண முடியாது. எவ் விதத்தில் நோக்கினாலும், தீமைக்கும் இடறலுக்கும் பரிகாரம் செய்தல் – (மனக்) காயத்துக்கு ஈடு செய்தல் – அவமதிப்புக்கு மாற்றீடு செய்தல் முதலியன மன்னிப்புக்கான நிபந்தனைகள் என்பதை நாம் மறத்தலாகாது.

130. எபே 4:2; காண் கலா 6:20.

131. மத் 18:22.

இவ்வாறு நீதியின் அடிப்படை அமைப்புமுறை எப்போதுமே இரக்கத்தைச் சார்ந்துள்ளது. எனினும் நீதிக்குப் புதுப் பொருள் கொடுக்கும் ஆற்றல் படைத்தது இரக்கம். இது மன்னிப்பில் எளிமை நிறைந்ததாக, முழுமையாக வெளிப்படுகிறது. நீதிக்கே உரித்தான ஈடு செய்தல், தற்காலிகப் போர் நிறுத்த உடன்பாடு முதலிய செயற்பாங்குகளுக்கு மேலாக, அன்பு தேவை எனவும், இதனால்தான் மனிதர் தம்மையே மனிதராக நிலைநாட்ட முடியும் எனவும் மன்னிப்பு எண்பிக்கிறது. நீதியின் நிபந்தனைகளை நிறைவேற்றும்போதுதான், அன்பு தன் உள்ளார்ந்த இயல்பை வெளிப்படுத்த இயலும். ஊதாரி மகன் உவமையை நாம் பகுத்தாய்ந்தபோது, *மன்னிப்பு அருள்பவரும் மன்னிப்புப் பெறுபவரும்* ஒரு முக்கியக் கட்டத்தில் ஒருவர் மற்றவரைச் சந்திக்க நேரிடுகிறது என்பதை ஏற்கெனவே கவனத்துக்குக் கொண்டு வந்தோம். அதாவது, மனிதரின் மாண்பு அல்லது அடிப்படையான மதிப்பு இழக்கப்பட முடியாத ஒன்று; இம் மாண்பையும் மதிப்பையும் நிலைநாட்டுவது அல்லது மீண்டும் கண்டுகொள்வது அளவற்ற மகிழ்ச்சிக்கு வித்திடுகிறது.[132]

வாழ்விலும் நடத்தையிலும் மட்டும் அல்ல, கல்விப் பணி, அருள்பணியிலும் மன்னிப்பின் *உண்மைத் தத்துவத்தை* நிலைநிறுத்துவதைத் திருஅவை தனது கடமையாகவும் தனது பணியின் குறிக்கோளாகவும் முறையாகக் கருதுகிறது. திருஅவை மன்னிப்பைப் பாதுகாப்பது எவ்வாறெனில், மன்னிப்பின் ஊற்றை – அதாவது, இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட கடவுளுடைய இரக்கம் என்னும் மறைபொருளை – பேணிப் போற்றுவதாலேயே.

''மீட்பரின் ஊற்றுகளினின்று...முகந்து கொள்வதே''[133] என்பது அன்றி, திருஅவையினுடைய பணியின் அடித்தளம் வேறு இல்லை. இப் பணி வத்திக்கான் சங்கத்தின் வெவ்வேறு அதிகாரபூர்வமான அறிக்கைகளும், திருத்தூதுப் பணியின் பன்னூறாண்டு அனுபவமும் சுட்டிக்காட்டுகின்ற எல்லாத் துறைகளையும் சார்ந்ததாகும். தனிமனிதராகிய கிறிஸ்தவர்களுடைய வாழ்வுக்கும், தனித்தனிச் சமூகங்களின் வாழ்வுக்கும், இறைமக்கள் அனைவருடைய வாழ்வுக்கும் திருஅவை ஆற்றவேண்டிய

132. காண் லூக் 15:32.

133. காண் எசா 12:3.



பணியைக் குறித்த பல வழிகாட்டு நெறிகளை இந்த ஊற்றினின்று பெறுகின்றோம். ''கொடையாகப் பெற்றீர்கள்; கொடையாகவே வழங்குங்கள்''[134] என்று போதித்தது மட்டும் அன்றி, அதற்கு ஏற்பத் தமது வாழ்விலும் முன்மாதிரியாய் விளங்கிய ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கும் எளிய மனத்தினை நாம் கொண்டிராவிட்டால், ''மீட்பரின் ஊற்றுகளிலிருந்து முகந்துகொள்ள'' முடியாது. இவ்வாறு திருஅவையின் வாழ்வு, பணி இவற்றின் வழிகளில் எல்லாம் – நம் ஆண்டவரின் ''அரும்பெரும் செயல்களுக்காகச்'' சான்று பகரும் திருஅவைப் பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், இறைமக்கள் ஆகிய அனைவருடைய நற்செய்தி மைய ஏழைமை வழியாக – ''இரக்கம் மிகுந்த கடவுள்'' தம்மையே வெளிப்படுத்துகின்றார்.

134. மத் 10:8.

# VIII. நமது காலத்தில் திருஅவையின் மன்றாட்டு

## 15. இறைவனின் இரக்கத்தைத் திருஅவை வேண்டுகிறது

சிலுவையில் அறையப்பெற்று உயிர்த்தெழுப்பப்பெற்ற கிறிஸ்து மூலம் வெளிப்படுத்தப்பட்ட இறைவனின் இரக்கம் பற்றிய உண்மையைத் திருஅவை பறைசாற்றி, பல்வேறு வழிகளில் அறிக்கையிடுகிறது. தொடர்ந்து, மனிதர் வழியாக மனிதர்க்கு இரக்கம் காட்ட விரும்புகிறது. இப்பொழுது இருக்கின்ற உலகைவிடச் சிறந்த, "அதிக மனிதத்தன்மை" கொண்ட ஓர் உலகை இன்றும் நாளையும் உருவாக்குவதில், தான் கொண்டுள்ள அக்கறைக்கு இதை இன்றியமையாத ஒரு நிபந்தனையாகவும் காண்கிறது. ஆயினும், எந்த நேரத்திலும், வரலாற்றின் எந்தக் கட்டத்திலும் – குறிப்பாக, மிக நெருக்கடியான இக் காலத்தில் – *இறைவனின் இரக்கத்துக்காக மன்றாடுவதைத்* திருஅவை மறந்துவிட முடியாது; மனித இனத்தை அழுத்தி அச்சுறுத்துகின்ற தீமையின் பல்வேறு வடிவங்களுக்கு நடுவில் இறைவனின் இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுவதை மறக்க இயலாது. இதுவே கிறிஸ்து இயேசுவில் திருஅவைக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையும் கடமையும் ஆகும்; கடவுள் மட்டிலும் மனிதர் மட்டிலும் திருஅவை கொண்டுள்ள உரிமையும் கடமையும் ஆகும். மதச்சார்பற்ற தன்மை என்னும் கோட்பாட்டுக்குப் பணிந்து, மனிதரின் மனச்சான்று எந்த அளவுக்கு "இரக்கம்" என்னும் சொல்லின் பொருளைப் புரிந்துகொள்ளத் தவறுகின்றதோ – எந்த அளவுக்கு அது இறைவனிடமிருந்து அகன்று செல்லுகின்றதோ – எந்த அளவுக்கு இரக்கத்தின் மறைபொருளினின்று அது ஒதுங்கிச் செல்லுகின்றதோ – அந்த அளவுக்கு "உரத்த குரலெழுப்பிக்"[135] கடவுளின் இரக்கத்தை வேண்டிடத் *திருஅவைக்கு உரிமையும் கடமையும் உண்டு.* இரக்கத்தை இறைஞ்சி இறைவன்பால் எழுப்பப்பட வேண்டிய இவ்

135. காண் எபி 5:7.



"உரத்த குரல்கள்" இக் காலத் திருஅவையின் அடையாளமாகத் துலங்கவேண்டும்; சிலுவையில் அறையப்பெற்று உயிர்த்தெழுப்பப்பெற்ற இயேசுவில் – அதாவது, பாஸ்கா மறைபொருளில் – ஏற்கெனவே அருளப்பட்டுவிட்டதாகத் திருஅவை அறிக்கையிட்டுப் பறைசாற்றும் இரக்கத்தின் உறுதியான வெளிப்பாடாக இக் குரல்கள் விளங்க வேண்டும். இப் பாஸ்கா மறைபொருளில்தான் இரக்கத்தின் முழு நிறைவான வெளிப்பாடு காணக்கிடக்கிறது. அதாவது, சாவைவிட ஆற்றல் படைத்த, பாவத்தைவிடச் சக்தி வாய்ந்த, எல்லா வகைத் தீமைகளையும்விட வலிமை கொண்ட அன்பு – மனிதர் படுகுழியில் விழும்போதும் அவர்களைத் தூக்கி நிறுத்திடும் அன்பு – மாபெரும் அச்சுறுத்தல்களினின்று அவர்களை விடுவிக்கும் அன்பு – இம் மறைபொருளில்தான் முழுமையாக வெளிப்பட்டது.

இன்றைய மனிதர் இவ் அச்சுறுத்தல்களை உணர்கின்றனர். இவை பற்றி மேலே கூறப்பட்டது பொதுவான ஒரு குறிப்புச் சுருக்கமே தவிர வேறு அன்று. உலகில் புரையோடிக் கிடப்பதோடு, மனித இனத்துக்கு முட்டுக்கட்டை போடுகின்ற பயங்கர அழுத்தநிலைகளுக்கான தீர்வு பற்றி இன்றைய மனிதர் அடிக்கடி கவலையோடு கேள்வி எழுப்புகின்றனர். *"இரக்கம்" என்னும் வார்த்தையைச் சில நேரங்களில் சொல்வதற்குக்கூடத் துணிச்சல் அற்ற நிலையில்* மனிதர் இறக்க நேரிடும்போது, அல்லது மறையின் உட்பொருளை இழந்த மனச்சான்றுக்கு இணைமாற்றை அவர்கள் காணாமல் தவித்திடும் வேளையில், தமது சொந்தப் பெயரால் மட்டும் அன்று, நம் காலத்தில் வாழும் ஆண், பெண் அனைவருடைய பெயராலுமே *இச் சொல்லை எடுத்துக்கூறத் திருஅவைக்கு அதிகத் தேவை எழுகிறது.*

எனவே இரக்கம் பற்றிய இந்த ஏட்டில் நான் கூறியுள்ள ஒவ்வொன்றும் *ஆர்வமிக்க மன்றாட்டாகத் தொடர்ந்து மாற்றப்படவேண்டும்;* இன்றைய உலகில் மனிதரின் தேவைகளுக்கு ஏற்ப இரக்கத்தை மன்றாடும் குரலாக மாற்றப்பட வேண்டும். திருநூலிலும் திருஅவை மரபிலும், தலைமுறை தலைமுறையாக வரும் எண்ணற்ற இறைமக்களின் உண்மையான நம்பிக்கை வாழ்விலும் செறிவான சொல்திறம் கண்ட *இரக்கம்* பற்றிய *உண்மையை இக் குரல் முழுமையாக வெளியிடட்டும்.* இவ்வாறு குரல் எழுப்பி, திரு(விவிலிய) ஆசிரியர்கள் போன்று கடவுளைக் கெஞ்சி மன்றாடுவோம்;

ஏனெனில் தாம் படைத்தவற்றுள் எதையும் அவர் வெறுப்பதில்லை;[136] அவர் தமக்கும் தம் தந்தைமைக்கும் அன்புக்கும் பற்றுறுதி உள்ளவர். இறைவாக்கினர் போன்று, தாய்க்குரிய சிறப்பியல்புகள் கொண்ட அந்த அன்பை நோக்கி அறைகூவல் விடுப்போம்; தாயைப் போன்று தம் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் பின்தொடர்கின்ற அன்பைக் – காணாமற்போன ஆடுகள் ஒவ்வொன்றையும் தேடிச் செல்லும் அன்பை – கூவி அழைப்போம். காணாமற்போன ஆடுகளின் எண்ணிக்கை பல கோடிகளைத் தாண்ட நேரிட்டாலும் – இந்த உலகில் தீமை நன்மையை மேற்கொள்ள நேரிட்டாலும் – அன்றொரு நாள் நோவா காலத்து மக்கள் செய்ததுபோல, இன்றைய மக்கள் தங்களின் பாவங்களின் பொருட்டுப் புதியதொரு ‘‘வெள்ளப்பெருக்குக்குத்’’ தங்களையே தகுதியாக்கிக்கொள்ள நேரிட்டாலும் – அந்த அன்பை வேண்டி நிற்போம். கிறிஸ்து தமது மீட்புப் பணியில் நமக்கு வெளிப்படுத்திய தந்தைக்குரிய அன்பின் – அவரது சிலுவை, இறப்பு, உயிர்ப்பில் தன் சிகரத்தை அடைந்த அந்த அன்பின் – துணையை நாடுவோம். ‘‘தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டிவருகிறார்’’ என்று இரக்கம் பற்றி மரியா தம் *புகழ்ச்சிப் பாடலில்* அறிக்கையிட்ட சொற்களை நினைவில் கொண்டவர்களாய், கிறிஸ்து வழியாக இறைவனின் துணையை நாடுவோம்; நமது தலைமுறைக்காக இறைவனின் இரக்கத்தை இறைஞ்சுவோம். மரியாவின் முன்மாதிரியைப் பின்பற்றி மனித இனத்தின் அருள்வாழ்வுசார் அன்னையாகத் திகழ முனையும் திருஅவை தனது தாய்க்குரிய அக்கறையை இம் மன்றாட்டு மூலம் வெளிப்படுத்தட்டும்! அதே நேரத்தில் தனது பற்றுநிறை அன்பை – இறைவேண்டல் செய்வதற்கான உடனடித் தேவையை உண்டாக்குகின்ற அன்பை – வெளிப்படுத்தட்டும்!!

கிறிஸ்து நம் உள்ளங்களில் பதித்திருக்கும் *நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகியவற்றால் உந்தப்பட்டு, நம் விண்ணப்பங்களை* ஒப்படைப்போம். மேற்கூறிய மனநிலை, இறைவன்பால் நாம் கொள்ளவேண்டிய அன்பையும் தன்னுள் அடக்கும். சில வேளைகளில் இந்த இறைவனைவிட்டு இன்றைய மனிதர் வெகு தூரம் சென்றுவிடுகின்றனர். தமக்குப் புறம்பானவராக அவரைக் காண்கின்றனர்; அவர் ‘‘தேவைப்படாதவர்’’ என்று பலவாறு

136. காண் சஞா 11:24; திபா 145:9; தொநூ 1:31.



அறிக்கையிட்டுள்ளனர். *இறைவன் நம்மீது காட்டும் அன்பு* இதுதான்; ஆனால் இன்றைய மனிதர் அவரை ஏளனம் செய்து ஒதுக்கிவைக்கின்றனர் என்பதை நாம் ஆழமாக உணர்கிறோம். எனவேதான் சிலுவையில் தொங்கிய கிறிஸ்துவோடு சேர்ந்து, ‘‘தந்தையே, இவர்களை மன்னியும்; ஏனெனில் தாங்கள் செய்கிறது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை’’[137] எனக் குரலெழுப்ப நாம் அணியமாவோம். அதே நேரத்தில் இம் மனநிலை *மக்கள் மட்டில் நாம் கொள்ளவேண்டிய அன்பையும்* உள்ளடக்கும்; இது எந்த வித விதிவிலக்கையோ பிரிவினையையோ ஏற்படுத்தாமல் ஆண், பெண் அனைவரையும் உள்ளடக்கும் அன்பு – இனம், பண்பாடு, மொழி, கொள்கைக் கண்ணோட்டம் முதலிய வேறுபாடுகள் அறியாத அன்பு – நண்பர், பகைவர் என்னும் வேறுபாடு பாராட்டாத அன்பு – மக்கள் மட்டில் நாம் கொள்ள வேண்டிய அன்பு – இதுவே. ஒவ்வொரு தனிநபர், குடும்பம், நாடு, சமூகக் குழுவுக்கும் – இளைஞர், வயதுவந்தோர், பெற்றோர், முதியோர் ஆகிய அனைவருக்கும் – எந்த வித விதிவிலக்கும் இன்றி, எல்லா உண்மை நலன்களும் கிடைத்திட விழையும் அன்பு இதுவே. எல்லா வித உண்மை நலன்களையும் மனிதர் ஒவ்வொருவருக்கும் உறுதிப்படுத்தவும், எவ் வகைத் தீங்கையும் அகற்றித் துடைத்திடவும் மனிதர் கொள்ளும் ஆர்வமுள்ள அக்கறையே இந்த அன்பு.

கிறிஸ்துவின் பணியாளர் என்னும் முறையிலும், கடவுளுடைய மறைபொருள்களின் கண்காணிப்பாளர்[138] என்னும் முறையிலும், என்னை வழிநடத்தி, வரலாற்றின் இக் காலக் கட்டத்தில் மனித இனத்துக்காக இறைவனுடைய இரக்கத்தை மன்றாடத் தூண்டும் நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் இக் கால மனிதருள் யாரேனும் பகிர்ந்துகொள்ளாதிருந்தால், *எனது அக்கறைக்கான காரணத்தையாவது* புரிந்துகொள்ள அவர்கள் முயற்சி செய்யட்டும். இக் கால மனிதர் பலரின் உள்ளுணர்வுகளுக்கு ஏற்ப மனிதர்பாலும், மனிதப் பண்பு சார்ந்த அனைத்தின்பாலும் எழும் அன்பு பேரிடர்களால் அச்சுறுத்தப்பட்டு வருகிறது. மனிதரின் உயரிய அழைப்பை நமக்கு வெளிப்படுத்துகின்ற கிறிஸ்துவின் மறைபொருள்தான், மனிதருடைய ஈடு இணையற்ற மாண்பை *மனிதரின் மீட்பர்* என்னும்

137. லூக் 23:34.

138. காண் 1 கொரி 4:1.

சுற்றுமடலில் வலியுறுத்த என்னைத் தூண்டியது. கிறிஸ்துவின் அதே மறைபொருளில் வெளிப்படுத்தப்பட்ட இரக்கத்தை இறைவனின் இரக்கமிகு அன்பு என அறிக்கையிடவும் இதுவே என்னைக் கடமைப்படுத்துகிறது. அது போலவே அந்த இரக்கத்தின் துணையை நாடவும் – இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ் வேளையில், திருஅவையினுடையவும் உலகினுடையவும் வரலாற்றின் கடினமான, நெருக்கடியான கட்டத்தில் அதைக் கெஞ்சி மன்றாடவும் – மேற்கூறிய மறைபொருள்தான் என்னைத் தூண்டுகிறது.

சிலுவையில் அறையப்பெற்று உயிர்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் பெயராலும், மனித வரலாற்றில் நீடித்து நிலைநிற்கும் அவருடைய மீட்புப் பணியில் விளங்கிய மனநிலையோடும் *நாம் குரல் எழுப்பி மன்றாடுகிறோம்.* இறைத் தந்தையில் இருக்கும் அன்பு, வரலாற்றின் இக்கட்டான இக் கட்டத்தில் மீண்டும் ஒரு முறை வெளிப்படுத்தப்பட வேண்டும் என மன்றாடுகிறோம். திருமகன், தூய ஆவியாரின் செயல்கள் வழியாக, நாம் வாழும் இன்றைய உலகில் அந்த அன்பு குடிகொண்டிருக்கிறது என்பதைப் பிறர் கண்டுகொள்ள வேண்டும் என மன்றாடுகிறோம். அந்த அன்பு தீமையைவிட அதிக ஆற்றல் படைத்தது; பாவம், சாவைவிட அதிக வலிமை வாய்ந்தது என்பதை எல்லாரும் உணர்ந்திட வேண்டும் என மன்றாடுகிறோம். ‘‘தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டிவருகிறார்’’ என இடையறாது பறைசாற்றிக் கொண்டிருக்கின்ற மரியாவின் பரிந்துரை வழியாகவும், ‘‘இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்’’[139] என்னும் மலைப்பொழிவின் கூற்று தங்கள் வாழ்வில் ஏற்கெனவே முழுமை எய்தியதை அனுபவித்து உணர்ந்தவர்களின் பரிந்துரை வழியாகவும் இக் கருத்துக்காக மன்றாடுகிறோம்.

திருஅவையின் தன்னிறையறிவில் புதியதொரு கட்டத்தை நமக்குக் காட்டுகின்ற இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முடிவுகளை நாம் வாழ்கின்ற வரலாற்றுத் திருப்புக் கட்டத்திற்கு ஏற்பச் செயலாக்கும் பெரும் பணியைத் திருஅவை தொடர வேண்டும். இப் பணியை ஆற்றும்பொழுது எந்த ஒரு காரணத்தைக் கொண்டும் *திருஅவை* தனக்குள் அடைபட்டுக்கிடக்கக் கூடாது என்னும் முழு உணர்வினால் அது தொடர்ந்து வழிநடத்தப்பட வேண்டும்.

139. மத் 5:7.



*திருஅவை இருப்பதே கடவுளை வெளிப்படுத்துவதற்காகத்தான்;* அதாவது, தம்மையே கிறிஸ்துவில் ‘‘காணும்’’ பேற்றினை நமக்கு அளித்துள்ள தந்தையை வெளிப்படுத்துவதற்காகத்தான்.[140] மனித வரலாற்றின் எதிர்ப்பு எவ்வளவுதான் ஆற்றல் வாய்ந்ததாய் இருந்தாலும் – இக் காலப் பண்பாட்டுக் கூறுகள் எவ்வளவுதான் பல *திறமுடைத்தனவாய்* இருந்தாலும் – மனித உலகம் கடவுளை எவ்வளவுதான் அதிகமாக மறுத்தாலும் – அவை எல்லாவற்றையும்விட அதிகமாக இம் மறைபொருளோடு – பல காலங்களாகக் கடவுளில் மறைந்திருந்து, பின்னர் இயேசு கிறிஸ்து வழியாக ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் மனிதரோடு பகிர்ந்துகொள்ளப்பட்ட இம் மறைபொருளோடு – நாம் நெருங்கிப் பிணைந்திருக்க வேண்டும்.

இறுதியாக உங்கள் அனைவருக்கும் என் திருத்தூது ஆசியை நெஞ்சார்ந்த அன்புடன் வழங்குகிறேன்.

உரோமையில் புனித பேதுரு பெருங்கோவிலில் 1980–ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 30–ஆம் நாளில், திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு அன்று, எனது தலைமை ஆயர் பணியின் மூன்றாம் ஆண்டில் இது வழங்கப்பட்டது.

**இரண்டாம் ஜான் பால்**

திருத்தந்தை

140. காண் யோவா 14:9.

“இரக்கத்தைச் செயல்படுத்துவது என்பது கடவுளுக்கே உரிய ஒன்று. அவர் தம் பேராற்றலைக் குறிப்பாக இவ் வகையில் வெளிப்படுத்துகின்றார்” (*இரக்கத்தின் முகம்*, எண் 6).

**புனித தாமஸ் அக்குவினாஸ்**

“இரக்கம் என்பது தந்தையின் செயல்பாடு மட்டுமன்று; அவருடைய உண்மைப் பிள்ளைகள் யார் என்பதை உறுதிப்படுத்தும் அளவுகோலாகவும் அது உள்ளது” (*இரக்கத்தின் முகம்*, எண் 9).

**திருத்தந்தை பிரான்ஸிஸ்**

“படைத்தவருடையவும் மீட்பருடையவும் மாபெரும் பண்புக்கூறான இரக்கத்தைத் திருஅவை அறிக்கையிட்டுப் பறைசாற்றும்போது – மீட்பருடைய இரக்கத்தின் ஊற்றுகளுக்கு மக்களை இட்டுச் செல்லும்போது – திருஅவை உண்மையான வாழ்வு வாழ்கிறது” (*இரக்கம் மிகுந்த கடவுள்*, எண் 13).

**புனித இரண்டாம் ஜான் பால்**

“இவ்வுலக வாழ்க்கையை விட்டுச் செல்ல நம்மையே நாம் தயாரிக்கும்போது அன்பின் அடிப்படையிலேயே நாம் நீதித் தீர்ப்பு வழங்கப்படுவோம்” (*இரக்கத்தின் முகம்*, எண் 15).

**புனித சிலுவை யோவான்**